
KALKI 11.12.88 ரூ. 2.

கல்கி



வஞ்ச அரக்கனை வீழ்த்த முடியுமா..?

உலகெங்கும் பரவுது இதன் புகழ்



கெல்விணேட்டர் ரெஃப்ரிஜெரேட்டர். உலகமே இதன் வீடு. 140-க்கும் மேற்பட்ட நாடுகளில் இதன் குளுமையோ குளுமை கொடிகட்டிப் பறக்குது. இதன் உலகப்புகழுக்குக் காரணம் 'மின்சாரத்தை மிச்சப்படுத்தும்' கம்ப்ரெஸ்ஸர். வெளிப்புறத் தட்ப வெப்பம் எப்படி இருந்தாலும், இது விரைந்து குளிரச் செய்கிறது; வெகு விரைவில் ஐஸ் உண்டாக்குகிறது. குறைந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்தித் தன் பெயரையும் புகழையும் நிலைநாட்டுகிறது. வோல்ட்டேஜ் வேறுபாடு எவ்வளவாக இருந்தாலும், இதன் அமைதியான இயக்கம் தடைப்படுவதில்லை.

உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும் இதில் எவ்வளவோ பொருட்களை வைக்கலாம். ஏனெனில், அதிக அளவு இடவசதிக்காக மூலைமுடுக்குகள் இன்றி இதன் உட்புறம் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

வலிமை வாய்ந்தது. எல்லாமே எஃகினாலான கட்டுமானமும், உறுதியான ஏபிஎஸ் லைனரும் சேர்ந்து இதன் உட்புறத்துக்கும் வெளிப்புறத்துக்கும் கூடுதல் வலுவைத் தருகிறது. எனவே நீண்டகாலம் உழைக்கிறது.

நீங்கள் தேர்ந்தெடுக்க வசதியாக பலவகை மாடல்கள், பரவச மூட்டும் வண்ணங்களில்.

ஆகவே, உலகம் போற்றும் ஒரு ரெஃப்ரிஜெரேட்டர்-கெல்விணேட்டர் வாங்குங்கள்.

விற்பனை மற்றும் சர்வீஸ் :

எக்ஸ்போ மெஷினரி லிமிடெட்
பிரகதி டவர், 26 ராஜேந்திரா பிளேஸ்,
புதுதில்லி-110008



கெல்விணேட்டர்

ரெஃப்ரிஜெரேட்டர்

"மிகவும் விரைவாக குளிர்பதனப்படுத்துவதில் ஈடு இணையற்றது."



* 'பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்து விடுவார்களே' என்று காமராஜ் சிலைக்கு அவசர, அவசரமாகச் சென்றால், அங்கு ஊர்வலம் ஆரம்பிப்பதற்கான அறிகுறியே இல்லை! மக்கள் அங்கும் இங்கும் ஒழுங்கில்லாமல் சென்று கொண்டிருந்தார்கள். ஜீப்பில் ஒரு காங்கிரஸ் பிரமுகர் ஏறிக் கொண்டு 'ஒழுங்காக அணிவகுத்து வர வேண்டும்' என்று பலமுறை கூறிக் கொண்டிருந்தார். பல பெண்கள் கையில் சாப்பாட்டுத் தூக்குடன் வந்திருந்தனர். திண்டிவனம் அருகிலிருந்து வந்திருந்த யசோதை என்ற பெண்மணியிடம், "என்னம்மா தூக்குப் பாத்திரத்துடன் வந்திருக்கிறாய்?" என்று கேட்டபோது "காலைல பயிர் வேலைக்குப் போனேங்க; மதியம் சாப்பிட்டு முடித்தவுடன் லாரியைக் கொண்டு வந்து, 'ஏறுங்க, ஏறுங்க...' என்று சென்னைக்கு அழைச்சுக்கிட்டு வந்துட்டாங்க" என்றார்.

"ராஜீவ்காந்தி படையைப் பார்!"

* ஒரு வழியாக மூன்றரை மணிக்கு மேல் ஊர்வலம் ஆரம்பித்தது. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தொகுதி பெயர் போட்ட அட்டையைக் கொடுத்திருந்தார்கள். அந்தந்தச் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளவர்கள் வேறெங்கும் போகாமல், சேர்ந்து அணிவகுத்துப் போக வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு. பல தொகுதிகளில் காங்கிரஸ் டிக்கெட் கேட்டிருப்பவர்கள் தங்கள் சட்டமன்றத் தொகுதிக்குத் தலைமை வகித்து ஊர்வலத்தை நடத்தினார்கள்.



* ஊர்வலம் ராஜீவ் மேடையை நெருங்கியதும் திடீரென்று ஊர்வலத்தினர் கோஷமிட ஆரம்பித்தார்கள். 'பார் பார் பட்டணம் பார்; ராஜீவ் காந்தி படையைப் பார்' என்றும் 'ஜெய்-ஜெய் மூப்பனார், ஜெயித்து விட்டார், மூப்பனார்!' என்றும் கோஷமிட்டார்கள்.

* அண்ணா சாலையில் ராஜீவ் மேடையைத் தாண்டியதும் நேராகச் சென்று பீட்டர்ஸ் சாலையைச் சுற்றிக் கொண்டு கடற்கரைக்குச் செல்வதற்குப் பதிலாகப் பட்டுல்லாஸ் சாலையில் புகுந்து குறுக்கு வழியில் கடற்கரைக்குச் சென்றவர்கள் ஏராளம். இதனால் ஆயிரம் விளக்குப் பகுதியில், ஊர்வலத்தைப் பார்த்தவர்கள், 'இதென்னய்யா கூட்டம்? கருணாநிதிக்கு வந்ததோட மிக, மிகக் கம்மி' என்று பேசிக் கொண்டார்கள்.

* ஊர்வலம் ராஜீவ் மேடையைக் கடந்த போது பக்கத்தில் வந்து கொண்டிருந்த ஒரு தொண்டர் மேடையில் உள்ள வைஜயந்தி



"ஜெயிச்சு எம். எல். ஏ. வானதும் முதல் வேலையா என்ன செய்வீங்க...?"

"டெபாஸிட் பணத்தைத் திரும்ப வாங்குவேன்!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



சர்வர்: இரண்டு இட்லியுடன் எழுந்துட்டீங்களே... போதுமா ஸார்?

அவன்: போதும்பா! இதுக்கே எவ்வளவு நேரம் மாவாட்ட வேண்டியிருக்குமோன்னு திகிலா இருக்கு!

— உ. ராஜாஜி.

"ஏங்க, பக்கத்து வீட்டுக்காரர் ஓஸி பேப்பர் படிக்க இங்கு வர்றதை நிறுத்திட்டார்?"

"பேப்பர் போடுகிற பையனுக்குக் கொடுக்கப் பணமில்லேன்னு அவரிடம் கடன் கேட்டேன்!"

— மணியன் தர்மலிங்கம்.



மாலாவைக் கன்னா பின்னாவென்று திட்டினார். 'என்னங்க.. ஏன் இப்படித் திட்டறீங்க?' என்று கேட்ட போது 'காங்கிரஸில் கஷ்டப்படறவங்களுக்குக் காலம் இல்லை... அவனவன் இருபது வருஷம், முப்பது வருஷம் கஷ்டப்பட்டுக் கொண்டு பல தியாகங்களைச் செய்து கொண்டு கட்சியில் இருக்கிறான். இந்தம்மா என்னிக்குக் கட்சிக்கு வந்தாங்க? இவங்களுக்கு மேடையில் இடம்! இதனால்தாங்க கட்சி வளர மாட்டேங்குது' என்று குறைப்பட்டுக் கொண்டார். எங்களைச் சுற்றியிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் யாரும் வைஜயந்திமாலாவை இவர் திட்டியதைப் பற்றிக் கண்டு கொள்ளவேயில்லை.

* கடற்கரை. ஏழரை மணிக்கு வருவதாக இருந்த ராஜீவ் கிட்டத்தட்ட ஒன்பது மணிக்குத்தான் வந்தார். மேடையைப் பார்த்த தொண்டர் ஒருவர் மிக வெகுளித்தனத்துடன், ஏங்க அலெக்சாண்டர் எங்கேங்க...?' என்று விசாரித்தார். போலீஸ்காரர்கள் பலர் சேவாதளத் தொண்டர்கள் வேஷத்தில் கூட்டத்தைக் கண்காணித்தார்கள்.

* ராஜீவ் பேசிக் கொண்டிருந்தபோதே பெரும்பாலான கூட்டம் கலையத் துவங்கியது. இதைப் பற்றிக் கிண்டலடித்துப் பேசிக் கொண்டிருந்த சக நிருபர் ஒருவரோடு சண்டைக்கு வந்து விட்டார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள். பிரச்னை பெரிதாகாமல் சமாளித்து, நிருபரை வெளியே கொண்டு வந்தோம்.

* ஊர்வலம் முடிந்த பிறகு மக்களோடு திரும்பிக் கொண்டிருந்தோம். "முக்கியமான விஷயத்தைப் பிரதமர் பேசவில்லையே..." என்று குறைப்பட்டுக் கொண்டார் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர். என்னவென்று விசாரித்த போது 'தனியா போட்டி போடுவோம்னு சொல்வார்ன்னு எதிர்பார்த்தேன்' என்று கூறினார். கூட்டத்திற்கு வந்திருந்த பெரும்பாலோர், 'கூட்டா, அல்லது தனித்துப் போட்டியா' என்பது தெரிந்து விடும் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஆனால் ராஜீவ் ஏமாற்றி விட்டார். இன்னும் எத்தனை காலம் சஸ்பென்ஸ் நீடிக்குமோ?

* ஏராளமான பெண்கள், குழந்தைகள் ஆகியோர் பஸ்ஸையும், லாரிகளையும் தவற விட்டு விட்டு, அண்ணா சாலை பிளாட்பாரத்தில், கொட்டும் பனியில் கேள்விக்குறி வடிவத்தில் படுத்துக் கிடந்ததைப் பார்த்த போது, மனசு மிகவும் சங்கடப்பட்டது.

— நமது நிருபர்.

புகைப்படங்கள்: ஜார்ஜ் பிரான்ஸிஸ்.

* 'எதிரொலிகள்' சிறுகதை அற்புதம்! ஆரம்பம் முதல், — சாதாரண பெண்களிலின்றும் விலக்கி, சாரதாவை ஒரு தேவதையாகவே உருவகப்படுத்திய கோபி, உச்சகட்டத்தில் — 'பெண்மை'க்கு உரியதாகக் கருதப்படும் கட்டுப்பாடான நேர்க் கோட்டை விட்டு அவள் விலகி, சுதந்திரப் பிரதேசத்துக்குள் நுழைந்து, ''நான் விவாகரத்து செய்யப் போகி றேன்'' என்று கூறும் போது — துணுக்குற்றது. இன்றைய நமது சமூக நிலையை அப்பட்டமாகப் பிரதிபலித்தது.

சென்னை — 80, ஸ்ரீமகுடப்ரியன்.

* 'பல்லிடுக்கில் சிக்கிக் கொண்டு பாக்குத் தூள் உறுத்துவது போல்' என்ற தாராவின் உவமைக்கேற்ப ஆர். சூடாமணி அவர்களின் எதிரொலிகள் சிறுகதை, படித்து முடித்த பின் என்னுள் சுற்றிச் சுற்றி வந்தது... ஆனால் மூர்த்தியின் வீட்டிலிருந்து வெளியே வந்த கோபி, ராஜ்தூத்தில் புத்தகத்தை வைத்து விட்டு, கடைசியில் வேகமாய் ஸ்கூட்டரில் ஏறிப் புறப்பட்டதாய் எழுதியிருப்பதும், நீங்களும் பிரசுரித்திருப்பதும் எந்த விதத்தில் சரி...?

கோவை — 16. பாப்பம்பட்டி ராஜா.

* 'வேனை' — கதையல்ல சார். பெண்ணைப் பெற்று நல்ல வரனுக்காக நாயாக அலையும் பெற்றோர்களின் நப்பாசையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இன்றைய சமுதாயத்தில் பெண்ணைப் பெற்று விட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் சபேசர்களின் உள்ளப் போராட்டத்தைத் தத்ரூபமாகச் சித்திரித்திருந்தார் ஸரோஜி!

திருச்சி — 16. எஸ். ராஜகோபால்.

* சத்தியப்பிரியனின் ''உறவுகள்'' சிறுகதை என்னை அழ வைத்தது என்றால் அது உண்மை. கிரிதரனின் பாத்திரம் மிகவும் நேர்மையாகவும் நாகரிகமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. தங்க மகுடத்தில் வைரக் கல் போல் பிரகாசிக்கிறது.

மன்னார்குடி. கலோசனா பார்த்தசாரதி.

* 'விளாம்பழ ஓடுகள்' ஒரு மாபெரும் தத்துவத்தையே உள்ளடக்கி, படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும் வகையில் வழங்கியது.

சிதம்பரம். தங்க.குஞ்சிதபாதம்.

* குல்லாய் தயாரிக்கும் போட்டியைப் பாராட்டலாம் என்றால், அடுத்து வந்த 'அபௌட் டர்ன்' அசத்தி விட்டது. சரி, About-turn—ஐ 'சபாஷ்' போடலாமென்றால், காய்கறிகளில் உருவம் வெட்டும் மாணவிகள் ஆச்சரியப்பட வைக்கிறார்கள். சரி, அவர்களையாவது பாராட்டி விட முடிவெடுத்தால், Tete-a-Tete வந்து நம்மைத் திக்குமுக்காட வைக்கிறது. ஸ்டெல்லா மாரிஸ் விழா ஒரே அசத்தல் சமாசாரம்தான் போங்கள்!

சீர்காழி, ச. பரமசிவம்.

* 'அதிகாரிகள் அரசியல்வாதியின் அடிமைகள்...?' என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. உண்மையை உணர்வு பூர்வமாக எடுத்துரைத்திருப்பது பாராட்டுக்குரியது. இன்றும் எங்கள் புதுச்சேரி பிரதேசத்தில் இது மாதிரியான நிலையில்தான் அதிகாரிகளும் இருந்து வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் இன்றைய சாக்கடை அரசியலும் சுயநலமே உருவெடுத்த உதவாக்கரை அரசியல்வாதிகளுமே

• அற்புதம்!

• கதையல்ல; கண்ணாடி!

• வைரக்கல்!

• தத்துவப் பெட்டகம்!

ஆகும் என்றாலும் அதிகாரிகளுடைய தன்மானம் எங்கே போயிற்று என்பதுதான் மக்கள் கேள்வி.

காரைக்கால், காரை சமரன்.

* நடுவரின் ஆசனத்தில் அமர்ந்து 'லோட்டஸ்' பின்னால் ஒளிந்திருப்பது யார்? என்ற தலையங்கத்தின் கீழ் ராஜீவ், வி.பி. சிங் ஆகிய இருவரைப் பற்றியும் தீர்ப்பு வழங்கியிருப்பது 'கல்கி'க்கே உரிய தனித்தன்மையுடன் இருந்தது. ஆனால் 'போஃபர்ஸ்' விவகாரத்தில் ராஜீவ் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போல் நடந்து கொள்வது இந்திய மக்கள் அனைவர் மத்தியிலும் உலா வர ஆரம்பித்து விட்டது.

மயிலாடுதுறை. கிருட்டிண. எழில்.

* ராஜேஷ்குமார் எழுதும் இன்று இறப்பு விழா தொடரில் நாட்டியா என்ற டான்ஸர் கார் கடத்தலை ஜன்னல் வழியே பார்த்ததாக விசாரணையில் கூறுகிறார். ஆனால் இதற்கு முந்திய அத்தியாயத்திலும் சரி, அதற்கான படத்திலும் சரி வெளித் தாழ்வாரத்திலிருந்து அவள் பார்ப்பதாக இருக்கிறது... எப்படி சார்...!

மேல்பட்டி. எல். மாறன்.

* அட்டைப் படம் உள்ளிட்ட இயற்கை எழில் கொஞ்சும் மாலத்தீவின் படக் காட்சிகள் குளுமையாக இருந்தன. இத் தீவின் சிறப்பம்சங்களையும், சமீபத்திய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கான காரணங்களையும் விளக்கியிருந்த இக் கட்டுரை 'ஏ' ஒன்னாக வெளிருந்தது.


வேலாயுதம்பாளையம், எம். குணசேகரன்.

* மாலத் தீவு, கூலிப்படை, இந்தியத் துருப்பு என்று தலை கால் புரியாமல் இருந்ததைப் புரிந்து கொள்ள உதவியது 'அமைதித் தீவில் அதிரடி நடவடிக்கை' கவர் ஸ்டோரி.

காட்டூர், எஸ். அருள்மொழி.

* ஜெட் என்ஜின்களுள் பறவைகள் நுழைந்து விடுவதால் விமானத்தில் கோளாறுகளும் விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டு வருவதைத் தவிர்க்க, பம்பாய்ப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் முரளி தியோரா, விமானங்களுக்கு முன் பக்கம் பிரம்மாண்டமாக இரு கண்கள் படம் வரைய வேண்டும் என்று ஓர் அற்புதமான யோசனை தெரிவித்திருப்பதாகச் சிறிது கிண்டலாக எழுதியிருக்கிறீர். இதில் கிண்டல் தேவையில்லை. ஏனென்னில் திரு முரளி தியோராவின் யோசனை ஏற்கெனவே ஜப்பானில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் யோசனைதான்.

சென்னை — 102. எஸ். அனந்தராமன்.



அரசியல்வாதிகளிடம் துணிச்சலான கேள்விகளைக் கேட்டு அவர்களைத் திணறடிப்பதில் வல்லவர் சீமா முஸ்தாஃபா. சண்டே இதழில் சிறப்பு நிருபராகப் பணிபுரியும் இந்த முன்னணி பெண் நிருபருடன் ஒரு சந்திப்பு:

அரசியல்வாதிகளிடம் சில அதிரடிக் கேள்விகள்!

கே: நீங்கள் அரசியல் நிருபராக வேண்டும் என்று எப்படித் தீர்மானம் செய்தீர்கள்? இப்பொழுது ஒருவேளை நிலைமை மாறியிருக்கலாம். ஆனால் நீங்கள் பத்திரிகைத் துறையில் சேர்ந்த காலகட்டத்தில், பொதுவாகப் பெண் நிருபர்கள் சமூகப் பிரச்னை, கலை நிகழ்ச்சிகள் போன்ற விஷயங்களில்தானே கவனம் செலுத்தினார்கள்!

ப: ஆரம்பத்திலிருந்தே அரசியல் நிருபராவதில்தான் ஆர்வம் கொண்டிருந்தேன். பொதுவாகப் பெண் நிருபர்களைப் பூக்கண்காட்சிக்கோ, ஃபாஷன் ஷோவிற்கோ அல்லது வேறு பெண்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கோதான் அனுப்புவார்கள். எனக்கும் 'பயனீர்' பத்திரிகையில் இப்படிப் பட்ட வேலைகளையேதான் முதலில் கொடுத்தார்கள். ஆனால் மெதுவாக அரசியல் கூட்டங்கள், செய்திகள் பற்றி எழுதி, என்னால் முடியும் என்று நிரூபித்தேன். இத் துறையில் என்னுடைய ஸ்தானத்தை நான் நிலை நிறுத்திக் கொண்ட உடனேயே, பொதுவாகப் பெண்களுக்கென்று ஒதுக்கப் படும் வேலைகளைச் **(soft assignments)** செய்

வதில்லை என்பதில் உறுதியாக இருந்தேன்.

கே: நிருபராக வேலை செய்வது சில சமயங்களில் ஆபத்தாக முடியலாம். ஒரு பெண் நிருபர் என்ற முறையில் ஏதாவது ஆபத்தான சூழ்நிலையில் மாட்டிக் கொண்ட அனுபவம் உண்டா?

ப: சமீபத்தில் ஹரியானா — பஞ்சாப் எல்லைத் தகராறு சம்பந்தமாகக் கண்டு கேரா என்ற கிராமத்தில் கணக்கெடுப்பு நடந்த பொழுது, தில்லியிலிருந்து நாங்கள் நாலைந்து நிருபர்கள் போயிருந்தோம். ஏதோ காரணத்திற்காக எங்களைத் தவறாகப் புரிந்து கொண்ட பஞ்சாப் போலீஸ், எங்களைக் கிராமத்திற்குள் செல்லக் கூடாது என்று தடுத்தார்கள். நாங்கள் பிடிவாதம் செய்யவும், எல்லா நிருபர்களையும் (ஆண் நிருபர்களை அடித்து, அவர்கள் காமெராக்களைப் பிடுங்கிக் கொண்டு) ஜீப்பில் கைதிகளைப் போல் ஏற்றி, பயமுறுத்தி ஆள் அரவம் இல்லாத காட்டில் இறக்கி விட்டு விட்டுப் போய் விட்டார்கள். அதே போல் நான் அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழக மாணவர் சங்கத்தைத் தாக்கி எழுதிக் கொண்டிருந்த சமயத்தில், விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னைத் தாக்க வந்தார்கள். இப்படி சின்னச் சின்ன அபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பெண் நிருபர் என்பதால் இந்த அபாயச் சூழ்நிலைகள் உண்டாயின என்று சொல்ல முடியாது. ஆணாக இருந்தாலும் இப்படிப்பட்ட தாக்குதலுக்கு ஆளாகியிருக்கலாம்.

கே: நீங்கள் எத்தனையோ அரசியல் தலைவர்களைப் பேட்டி கண்டிருப்பீர்கள்! அந்தப் பேட்டிகளில் நீங்கள் மிகவும் ரசித்த பேட்டி எது?

ப: எனக்கு எல்லா அரசியல்வாதிகளைப் பற்றியும் மிகவும் மோசமான அபிப்பிராயம் தான். அதனால் அவர்களுடன் நடந்த பேட்டிகளைப் பற்றிச் சொல்லும்படியாக ஒன்றும் இல்லை.

கே: சில ஆண்டுகளுக்கு முன்பு, லண்டனில் நடந்த நிருபர் கூட்டத்தில் இந்திரா காந்தியிடம் நீங்கள் கேட்ட கேள்வி ஒன்று மிகுந்த பரபரப்பை உண்டாக்கியதே? அதைப் பற்றிச் சிறிது விரிவாகச் சொல்ல முடியுமா?

ப: இந்திரா காந்தி இந்தியக் கலை விழா (**Festival of India**) சம்பந்தமாக லண்டனுக்குப் போயிருந்தார். அப்பொழுது இந்தியன் எக்ஸ்பிரஸில் வேலையாக இருந்த நான், இந்தக் கலை விழாவினால் நம் நாட்டிற்குச் செலவுதான் அதிகமே தவிர பயன் ஒன்றும் இல்லை என்று எழுதியிருந்தேன். லண்டனில் நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் திருமதி காந்தி, கலை விழாவிற்குத் துளிக் கூடச் சம்பந்தம் இல்லாமல், இந்தியாவில் நமக்கும், பத்திரிகைகளுக்கும் நல்லுறவு இருப்பதாக அறிவித்தார். பார்க்கப் போனால், அந்தச் சமயத்தில்தான் அரசாங்கத்திற்கும், பத்திரிகையாளருக்கும் இடையே உறவு ரொம்ப மோசமான நிலையில் இருந்தது. கர்நாடக முதலமைச்சர் குண்டுராவ் ஒரு பத்திரிகையாளரை அடித்தே விட்டார். வேறு சில மாநிலங்களிலும் முதலமைச்சர்கள் பத்திரிகையாளர்களை அநாவசியமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். இந்திரா காந்தியும் அப்படிப்பட்ட முதலமைச்சர்களை ஆதரித்துக் கொண்டிருந்தார். அதனால், நான் இச் சம்பவங்களைக் குறிப்பிட்டு 'இந்தியாவில் பத்திரிகையாளர்களுக்கும், உங்களுக்கும் சுமுகமான உறவு இருப்பதாக எப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன். ஆத்திரமடைந்த பிரதமர், என்னுடைய கேள்விக்குப் பதிலளிக்காமல், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மட்டும் தான் இந்தியக் கலை விழாவுக்கு எதிராக எழுதி வருகிறது என்று அறிவித்தார். அதோடு விடாமல், இந்தியா திரும்பியவுடன் விமான நிலையத்தில் நிருபர்களிடையே பேசுகையில், இந்தியன் எக்ஸ்பிரஸ் இந்தியக் கலை விழாவைக் கெடுக்க என்று ஓர் ஆளை அனுப்பி வைத்தது என்று குற்றம் சாட்டினார். ராஜீவ் காந்தியும் (அப்பொழுது அவர் அரசியலில் இறங்கி விட்டார்) கல்கத்தாவில் பேசுகையில், இந்தியன் எக்ஸ்பிரஸ் இந்தியக் கலை விழாவைக் கெடுக்க வேண்டும் என்று சதித் திட்டம் போட்டு வேலை செய்திருக்கிறது என்று தாக்கினார். நான் கேட்ட ஒரு கேள்வியை இவ்வளவு தூரத்திற்குப் பெரிதுபடுத்த வேண்டும் என்றால், அது அத் தலைவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது.

கே: வி. பி. சிங் அலகாபாத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு நடத்திய நிருபர்கள் கூ'

• துருவித் துருவிக் கேள்விகள் கேட்க வேண்டியது என்னுடைய வேலை.



• ...அவற்றுக்குக் கண்ணியத்துடன் பதில் சொல்ல வேண்டியது அரசியல் தலைவர்களின் கடமை.



டத்தில், உங்களைப் 'பொய் புளுகுபவர்' என்று குற்றம் சாட்டியதாக இல்லஸ்டிரேடட் வீக்லி பத்திரிகையில் குறிப்பிட்டிருந்ததே? வி.பி. சிங் எதற்காகத் தங்களைப் பொய் பேசுபவர் என்று சொன்னார்?

ப: வி. பி. சிங்கைத்தான் கேட்க வேண்டும், அவர் ஏன் அப்படி குற்றம் சாட்டினார் என்று! அவர் ஒரு தேசியத் தலைவராகத் தலையெடுத்துக் கொண்டிருப்பதால், மதச் சார்பற்ற நிலையைப் பற்றி அவருடைய கொள்கை என்ன என்று தெரிந்து கொள்ளும் விதத்தில் சில கேள்விகள் கேட்டேன். என் கேள்விகளுக்கு அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை. மதச் சார்பற்ற வழியையே நான் பின்பற்றப் போவதாக அவர் குறிப்பிட்ட உடன், நான் ''எப்படி? மகாராஷ்டிராவில் உங்கள் கட்சியின் செயற் குழு சிவசேனாவின் உதவியை நாடுவதன் மூலமாகவா?'' என்று கேட்டேன். வி. பி. சிங் திடீரென்று ''You are a liar'' என்று என்னைப் பார்த்துக் கத்தினார். திடீர் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து மீண்ட நான் 'பதிலுக்கு நானும் உங்களை என்ன வேண்டுமானாலும் சொல்ல முடியும்' என்று கூச்சல் போட்டேன்.

கே: உங்களைப் பொய் சொல்வதாகக் குறிப்பிட்டது ஏன் என்று விளங்கவில்லையே? ஒருவேளை நீங்கள் அவரைப் பற்றி ஏதாவது எழுதியதைக் குறிப்பிட்டு அப்படிச் சொன்னாரோ?

ப: அப்படியெல்லாம்ஒன்றும்இல்லையே! அன்றும் நான் அவரிடம் கேள்விதான் கேட்டேனே தவிர, அவரைப் பற்றியோ, அவர் சொன்னதாகவோ எதையும் குறிப்பிடவில்லையே.

கே: இதே போல் ராஜீவ் காந்தி பிரதமரான புதிதில் அவரிடம் நெருக்கடி நிலைமையைப் பற்றிக் கேள்வி கேட்டீர்கள்! இப்படி பெரிய அரசியல் தலைவர்களிடம் தர்மசங்கடமான கேள்விகளைக் கேட்பதனால், நீங்கள் வேண்டப்படாதவராக ஆகிவிடலாம் அல்லவா? விரும்பத்தகாத நிலைமைகளை உண்டாக்குவதன் மூலம், நிருபர் கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் தாங்கள் இழக்கக் கூடுமே?

ப: நான் எப்படி தர்மசங்கடமான நிலைமையையோ, விரும்பத்தகாத சூழ்நிலையையோ உண்டாக்குகிறேன்? நான் கேட்கும் கேள்விகளுக்கு, முட்டாள்தனமாகப் பதில் அளிப்பதன் மூலம் அரசியல் தலைவர்கள்தானே அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகிறார்கள்? ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் துருவித் துருவிக் கேள்வி கேட்பது என்னுடைய வேலை, கடமை, அக்கேள்விகளுக்குக் கண்ணியமாகப் பதிலளிப்பது அரசியல் தலைவர்களின் கடமை. ராஜீவ் காந்தியிடம், 'மீண்டும் எமர்ஜென்ஸி கொண்டு வரப்படுமா?' என்று நான் கேட்ட கேள்விக்கு, அவர் அளித்த பதிலினால் பாராளுமன்றத்தில் விளக்கம் கூறும்படியான ஒரு நிலைமைக்கு அவர் ஆளானார். அது ஒருபுறமிருக்க, நான் கேட்ட மாதிரியே நிலைமை ஆகிவிடுவதற்கும் இருந்ததே! அவதூறு மசோதாவைக் கொண்டு வர அவர் முயற்சி செய்யவில்லையா? மற்றபடி, என்னுடைய கேள்விகளினால் நான் வேண்டப்படாதவளாவதைப் பற்றி எனக்குக் கவலை எதுவுமில்லை. எனக்கு அரசியல்வாதிகளுடன் அநாவசிய உறவு வைத்துக் கொண்டு, மாலை வேளைகளில் அவர்களுடன் உட்கார்ந்து மது அருந்த வேண்டும் என்ற அவசியம் இல்லை.

கே: உங்களுடைய நிருபர் பணியில் இப்படி சர்ச்சைகளில் மாட்டிக் கொள்ளும் பொழுது, நீங்கள் வேலை பார்க்கும் பத்திரிகைகள் உங்களுக்கு வேண்டிய ஆதரவை அளிக்கின்றனவா?

ப: நான் இதுவரை குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங்களிலும், என்னுடைய பத்திரிகை ஆசிரியர்கள் எனக்கு வேண்டிய ஆதரவை அளித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கே: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் வேறு சில சந்தர்ப்பங்களில் உங்களுக்கு வேண்டிய ஆதரவு கிடைக்கவில்லை போல் தோன்றுகிறதே?

ப: சில சமயங்களில் நாம் யாரைப் பற்றி எழுதுகிறோமோ, அவர், ஆசிரியருக்கு வேண்டியவராக இருக்கலாம். அப்போது சங்கடம் ஏற்படுவது உண்டு.

கே: கடைசியாக, ஒரு கேள்வி. பிரபலமடைய வேண்டும் என்பதற்காக நீங்கள் வேண்டுமென்றே நிருபர்கள் கூட்டங்களில், அரசியல் தலைவர்களிடம் தர்மசங்கடமான கேள்விகளைக் கேட்பதாக, உங்களைப் பற்றிய ஓர் அபிப்பிராயம் இருக்கிறதே? அதாவது இப்படி கேள்வி கேட்பதை ஒரு 'பப்ளிஸிடி ஸ்டண்ட்' ஆக நீங்கள் செய்து வருகிறீர்கள் என்கிறார்கள்....

ப: என்னைப் பற்றி இப்படி ஓர் அபிப்பிராயம் இருப்பதாகக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எல்லா நிருபர்களையும் போல் நானும், அரசியல்வாதிகளைக் கேள்வி கேட்கிறேன். அதற்கு அவர்கள் அளிக்கும் பதில்கள் பரபரப்பை ஏற்படுத்தினால், அதற்கு நான் எப்படி பொறுப்பாவேன்? வி. பி. சிங் என்னைப் பார்த்து 'You are a liar' என்று கத்தினால் சும்மா விட்டு விட முடியுமா? அரசியல் தலைவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. மேலும், நான் எழுதிய கட்டுரைகளைப் படித்து விட்டு நாலு பேர் பாராட்டினால், எனக்குப் பெருமையாக இருக்கலாம். நிருபர்கள் கூட்டத்தில், ஏதோ நான் கேட்கும் கேள்வியினால் கிடைக்கும் விளம்பரத்தில் என்ன பெருமை இருக்கிறது?

பேட்டி: ரமாமணி சுந்தர்

புகைப்படங்கள்:

செந்தில் ஆர். கணேஷ்

நியுபான்

தாயின் அரவணைப்புக்கு ஈடான சிறந்த ஜீரண டானிக்



சிறந்த மூலிகைகளைக் கொண்டு குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட ஜீரண டானிக். பாதுகாப்பானது.





குழந்தை பசியின்மை, வயிற்று வலி, விக்கல், வயிற்றுப் பொருமல், எதுக்களித்தல், மலபந்தம், பேதி முதலியவைகளால் பாதிக்கப்படலாம். இதனால் தேவையற்ற அழுகை, அமைதியற்ற தன்மை, தூக்கமின்மை ஆகியவையும் மற்றும் ஜலதோஷம், இருமல் ஆகியவையும் ஏற்படக்கூடும். அனுபவமிக்க தாய்மார்கள் பன்னெடுங்காலமாகத் தங்கள் குழந்தைகளின் ஜீரண சக்தியை வலுப்படுத்தவும், உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் உபயோகித்து நல்ல பலன் கண்ட சிறந்த மூலிகைகளான ஓமம், வசம்பு, சிற்றரத்தை, அதிமதுரம், திப்பிலி, கடுக்காய், ஏலக்காய் ஆகியவைகள் தேவையான அளவு நியுபானில் சேர்க்கப்பட்டுள்ளன. குழந்தை முழுமையான ஆரோக்கியத்துடனும், புஷ்டியாகவும் வளர விரும்பிச் சாப்பிடக்கூடிய ஜீரண டானிக்கான நியுபான் அவசியம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது.தொடர்ந்து கொடுத்து நல்ல பலன் காணவும்.

ஆல்கஹால், போதைப் பொருட்கள், சோடியம்- பை-கார்பனேட் கலப்பு இல்லாதது.

PHARM PRODUCTS

'விஜய்', மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 007, தமிழ்நாடு.
தொலைபேசி எண் : 22025|22225 டெலக்ஸ் : 0468-205 PPPL IN

மருந்துக் கடைகளிலும், ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

SOBHAGYA

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்

அறிவிப்பு


காஞ்சீபுரத்தில் புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்று அரசின் சார்பில் நடைபெறுகிறது. அதில் வெளியிலிருந்து வரும் பலரும் தங்கி வைத்தியம் செய்து கொள்வதற்கு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்கென பிரபல மருத்துவ இயக்குநர் Dr. கோ. முனுசாமி, M.D., D.M.R.D., ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் 40 படுக்கைகளை கொண்ட ஒரு வார்டு கட்டிக் கொடுக்க எழுத்து மூலமாக கேட்டுக் கொண்டதன் பேரில், ஸ்ரீமடம் ஒப்புக்கொண்டு இதற்கு ரூ.3 லட்சம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீமடத்தின் சார்பில் முதல் தவணையாக ரூ.25,000/- அளிக்கப்பட்டுள்ளது. இந்த பணியில் ஆர்வமுள்ள சமய, சமூகத்தினர் தங்களால் முடிந்த பொருள் உதவிகளை

மானேஜர்,

சங்கர மடம், காஞ்சீபுரம்-631 502.

என்ற விலாசத்திற்கு மேற்படி பணிக்கு என்று குறிப்பிட்டு டிராப்ட் அல்லது செக் அனுப்பவும். ரூ.10,000/-க்கு மேல் அனுப்புபவர்களுக்கு ஸ்ரீ காமாட்சி அம்மன் வெள்ளிக் காசு பிரஸாதமாக அனுப்பப்படும். இந்த சமய, சமுதாயப் பணிக்கு சிறுதுளி பெருவெள்ளம் என்ற வகையில் தங்களால் முடிந்த உதவிகளை செய்து ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அருளுக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

T.N. KRISHNAMURTHY,
SRI KARYAM AGENT.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542 – இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 250/' அல்லது 300/' அல்லது 500/' ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/' அல்லது 3000/' அல்லது 5000/' மூலதனம் ஏற்படுத்ியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த
தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D – 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் – 612 001.

****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****

காங்கிரஸ் என்ற பெயரே அலர்ஜி!



— நெடுமாறன் பேட்டி

கட்சியின் பெயரை மட்டுமல்ல, ப. நெடுமாறன் தற்போது தமது பெயரையும் மாற்றி வைத்துக் கொண்டுள்ளார்! அவர் இனி பழ. நெடுமாறன் (தந்தை பெயர் பழனியப்பன்).

நிருபர்: காமராஜ் காங்கிரஸ் என்ற பெயரில் இருந்த உங்கள் கட்சியைத் 'தமிழர் தேசிய இயக்கம்' என்று பெயர் மாற்றம் செய்தது ஏன்?

பழ. நெடுமாறன்: கட்சியின் பெயரைத் திடீரென்று மாற்றவில்லை. எங்கள் கட்சியின் சகல மட்டங்களிலும், தீவிர விவாதம் நடத்திய பின்னரே இந்த மாற்றம் நடைபெற்றது. 1979—ல் நாங்கள் 'காமராஜ் காங்கிரஸ்' என்ற தனிக் கட்சியை அமைத்தோம். இந்தியாவுக்குப் புதிய அரசியல் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்பதையும், மாநிலங்களுக்குச் சுய ஆட்சி தர வேண்டும் என்பதையும் எங்கள் அரசியல் கொள்கைகளாகப் பிரகடனம் செய்தோம். மேலும், காவிரி நீர்ப் பிரச்னை, கரூர் — மதுரை அகல ரயில் பாதை, சேது சமுத்திரத் திட்டம், காவிரிப் படுகையில் எண்ணெய் எடுக்கும் திட்டம்., இலங்கைத் தமிழர் பிரச்னை, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி, இந்தி திணிப்பு, ஆகிய பிரச்னைகளில் நாங்கள் போராடி இருக்கிறோம்.. ஆனால் மத்தியில் ஆட்சி புரியும் இந்திரா காங்கிரஸ் இந்தப் பிரச்னைகளில் போதிய கவனம் செலுத்தவில்லை. இதன் விளைவு காங்கிரஸ் என்றாலே தமிழ் நாட்டு மக்களுக்குப் பிடிக்காமல் போய் விட்டது; எங்கள் கட்சியின் பெயருடன் 'காங்கிரஸ்' என்ற சொல் ஒட்டிக் கொண்டிருந்ததால், பெரும்பாலான இளைஞர்கள் எங்கள் கொள்கைகளை ஏற்றாலும் எங்கள் கட்சியில் சேரத் தயங்கினார்கள். 'காங்கிரஸ்' என்று கூறிக் கொள்ளும் கட்சிகளெல்லாம் காலப்போக்கில் இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து விடும் என்று ஓர் எண்ணமும் மக்களிடம் இருந்து வருகிறது. எனவே, அடிப்படைக் கொள்கைகளில் முற்றிலும் காங்கிரஸிலிருந்து மாறுபட்டிருக்கும். நாங்கள் இனிமேலும் 'காங்கிரஸ்' என்ற பெயரை எங்கள் கட்சிக்கு வைத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவேதான் எங்கள் கட்சியின் பெயர் 'தமிழர் தேசிய இயக்கம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

நிருபர்: வரப்போகும் தமிழகத் தேர்தல் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நெ: அரசியல் குழப்பங்களிலிருந்து தமிழ் நாட்டை எப்படி மீட்கப் போகிறோம் என்பதே இப்போது நம் முன் உள்ள கேள்வி! தேர்தலுக்கு முன்பு ஏற்படும் கூட்டணிகள், தேர்தலுக்குப் பின்பு மாறப் போகின்றன. பணமும், பதவியும், பலரை எவ்வாறு கட்சி மாற வைத்தன என்பதைக் கண்கூடாகக் கண்டோம். இனியும் காணப் போகிறோம். வரும் தேர்தலில், பணம், பதவி ஆகிய சபலங்களுக்கு இரையாகாமல், மக்களின் நலனைக் குறியாகக் கொண்டவர்கள் வெற்றி பெறுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும். இது நடைபெறாத வரை தமிழகத்தில் எந்த ஆட்சியும் நிலையான ஆட்சியாக இருக்காது.

நிருபர்: தமிழகத்தின் இருண்ட காலம் என்று ராஜீவும் மற்றவர்களும் பேசி வருவது பற்றி....?

நெ: முன்பு காமராஜ் ஆட்சிக்கு வரக் கூடாது என்பதற்காகத் தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்த காங்கிரஸார்; இப்போது 'காமராஜ் ஆட்சியைக் கொண்டு வருவோம்' என்று சொல்வது வேடிக்கையானது. அன்று 'கலைஞரே முதல்வர்' என்று முடிவு செய்து, தி.மு.க.வுடன் இணைந்து காங்கிரஸ் செயல்பட்டது. அப்போதெல்லாம் தி.மு.க. ஆண்ட காலம் தமிழகத்தின் இருண்ட காலம் என்று காங்கிரஸுக்குத் தோன்றவில்லை! அது இருண்ட காலம் எனில் அந்த இருண்ட காலம் வருவதற்குக் காரணமே இ. காங்கிரஸ்தான் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்! விளக்கை அணைத்தவர்களே "இருட்டு, இருட்டு" என்று கூவுவது போல இருக்கிறது காங்கிரஸ் செயல். அதே போல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு உறுதுணையாக இருந்ததும் காங்கிரஸ்தான். எனவே அதனை ஊழலாட்சி என்று வர்ணிக்கும் யோக்கியதை காங்கிரஸுக்கு இல்லை. மீண்டும் இன்று சற்று குரலை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். ஆட்சியைச் சாடாமல் தி.மு.க. ஆட்சியை மட்டும் தாக்குகிறார்கள். காங்கிரஸ் நடத்துவது சரியான சந்தர்ப்பவாத அரசியல் என்பதற்கு இன்னும் எத்தனை உதாரணங்கள் வேண்டும்? கேளுங்கள் தருகிறேன்!"


— தில்லப்பா


தெஹலை அரசுக் குழி தோண்டிப் புதைச்சாச்சு! அதைப் பெரிசா கிளறி வந்துட்டாங்க!... போங்கடா போக்கத்தப் பயல்வளா!
தெஹல்கா
தெஹல்கா மருமகள் மாறன்-மர்மம்
உண்மை
அறிய முயற்சி
பயப்படாதே!... பாரு, நம்ம கலைஞர் செம்மையா திருப்பிக் கொடுப்பாரு!
ராஜாவின் தமிழக ஊழல்கள்
ராஜாவின் தமிழக ஊழல்கள்
த்தூ!.. பேச்சா இது? குடிக்கத் தண்ணி கொடுக்கல்லே!.. வயலுக்குத் தண்ணி கொடுக்கல்லே! காவல்தான் வேணும்கிறான்! இவங்களோட கூட்டு உள்ளவனுக்கு ஆதரவா'ன்னு இன்னு பேச்சு? த்தூ! நம்ம கையிலே கத்தரியை ஒழுங்கா எடுத்து நீல் வடு!.. நீல்!
உமாபதி.



கல்கி

1988 டிசம்பர் 11
மலர் 47 இதழ் 19
விபவ கார்த்திகை 26



காங்கிரஸ் பேரணி நிரூபித்தது என்ன?

ஏழு கட்சி கூட்டணி சார்பில் கருணாநிதி திரட்டிய கூட்டத்தைக் காட்டிலும் அதிகமாக இ. காங்கிரஸ் கூலிப் பட்டாளத்தைத் திரட்ட முடியும் என்று நிரூபிப்பது நோக்கமானால் நல்லது, மூப்பனார் அதில் வெற்றி பெற்று விட்டார்!

பேரணி என்ற பெயரில் சென்னை நகரின் ஒரு நாளைய தொழில்வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து நஷ்டம் உண்டாக்குவது நோக்கமெனில், பலே, அதிலும் காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டது.

சாலைப் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்து சென்னை நகர மக்களுக்குப் பெருந்துன்பம் விளைவிப்பது நோக்கமெனில் சபாஷ், அதிலும் தமிழக இ. காங்கிரஸுக்குப் பெரு வெற்றிதான்!

போஃபர்ஸ் என்றும் நீர்மூழ்கி பேரம் என்றும் எதிர்க் கட்சிகள் நம் மீது குற்றச் சாட்டுக்களை அடுக்கிக் கொண்டிருக்கும் போது நாம் மட்டும் பதிலுக்கு அவர்களைத் தாக்காமல் வாளாவிருப்பதா என்று ராஜீவ் கருதி, திருப்பித் தாக்கத் திட்டமிட்டிருந்தால் அச்சா, அந்தத் திட்டத்தை நன்றாகவே நிறைவேற்றி வைத்து விட்டார்! 'தேசிய முன்னணி நாட்டுக்கே ஓர் இழுக்கு' என்று அர்த்தம் தொனிக்க, 'National Affront' என்று திட்டினார். 'கலிஸ்தான் ஆதரவாளர்கள்' என்று கூட்டணியினரை வர்ணித்துத் திருப்திப்பட்டுக் கொண்டார். இவற்றில் உண்மைக் கலப்பில்லாததால் அவர் அடைந்தது அற்ப திருப்தியே என்பது வேறு விஷயம்.

கோடிக்கணக்கில் வரிப் பணத்தைச் செலவிட்டு ராஜீவ் மீண்டும் ஒருமுறை தமிழகம் வந்து போனதும் ஒரு சாதனையே! வரிப் பணத்தை இவரைப் போல் வேறு எந்த நாட்டின் பிரதமர் விரயம் செய்து காட்ட முடியும்!

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கும் மணலி ரசாயன ஆலைக்கும் அடிக்கல் நாட்டும் விழாக்களை ஒத்திப் போட்டதும் ஒரு சாணக்கியமே. அவற்றைச் சாக்கிட்டுக் கொண்டு மேலும் இரண்டு தடவை பிரதமர் மக்களின் வரிப் பணத்தைச் செலவிட்டுக் கொண்டு தேர்தலுக்கு முன் தமிழகம் வந்து போகலாம் அல்லவா?

டி.வி. நிலையத்தினருக்கு இன்று என்னத்தை ஒளி பரப்பி நல்ல பெயர் வாங்குவது என்ற பிரச்னை தீர்ந்தது! திரும்பத் திரும்ப ராஜீவ் விஜயத்தைக் காட்டிக் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்வது என்று முடிவாகிப் போனது பெரிய வசதிதான்!

போலீஸார், சேவாதளத் தொண்டர்கள் போல் வேஷம் போட்டுக் கொள்ளும் கலையை நன்றாகக் கற்றுக் கொண்டார்கள். அதுவும் ஒரு வசதியே. வைஜயந்தி மாலா தமது இமேஜை வளர்த்துக் கொள்ள ராஜீவ்—சோனியா தமிழக விஜயத்தைப் பயன் படுத்திக் கொண்டார். அவர் வரை அது லாபம்தான்.

கட்சிப் பணமும் கணிசமாகக் கரைந்துதான் இருக்கும். வைத்துக் கொண்டு என்னதான் செய்வது? எத்தனை காலம் கட்டிக் காப்பது? ஓரளவேனும் கரைந்தால் அந்த மட்டும் கவலை விட்டது!

சரி, காங்கிரஸ் பேரணி வேறு என்னதான் சாதித்தது, உருப்படியாக? ராஜீவின் விஜயங்கள் காரணமாக காங்கிரஸ் தமிழகத்தில் புத்துயிரும் புதிய பலமும் பெற்றுள்ளதாகவும், மக்களின் ஆதரவு அமோகமாகப் பெருகியுள்ளதாகவும் சொல்கிறார்கள். இது உண்மையானால் மேற்சொன்ன எல்லாவற்றையும் மறந்து விட்டு இதற்காக மகிழலாம். ஆனால் இதற்கு அத்தாட்சி எங்கே? இந்தப் பேரணியைப் பார்த்த பிறகும் கூட ராஜீவுக்கு நம்பிக்கை பிறக்கவில்லையே! 'காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்' என்று துணிந்து திருவாய் மலர்ந்து அருளவில்லையே! ஜெ. அணியுடன் கூட்டணி அமைக்கும் சபலம் நீங்கவில்லையே! அதுதான் நமது துக்கம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

மலையேறும் மாணவர்கள்

"எங்கள் கல்லூரியிலுள்ள 'மலையேறுவோர் சங்கம்' (டிரெக்கிங் கிளப்), சுற்று வட்டாரத்தில் வேறெந்தக் கல்லூரியிலும் இல்லாத சிறப்பு அம்சம்" எனக் குறிப்பிட்டுக் கடிதமெழுதியிருந்தார் ஈரோடு, சிக்கையா நாய்க்கர் கல்லூரியின் முதல்வர். நாம் ஈரோடு சென்றோம்.

மாணவர்கள் எல்லாம் பரீட்சையில் பிஸி. எனவே மலையேறுவோர் சங்கத்தின் பொறுப்பாளர் பேராசிரியர். பி. கந்தசாமி, சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி விரிவாய்ப் பேசினார்:

"எங்கள் டிரெக்கிங் கிளப்பின் நோக்கம், திரில்லிங்கான உடற்பயிற்சி என்பது மட்டும் இல்லை. இயற்கையை அறிந்து கொள்ளுதல், அதன் தொன்மையையும், மேன்மையையும் அறிதல் என்பதே அடிப்படை. எனவேதான் எங்கள் டிரெக்கிங் கிளப்பின் பணிகளை, 'இயற்கை சங்கம்' மற்றும், ஈரோட்டில் இயங்கி வரும் 'சுற்றுப்புறச்சூழல் சொசைட்டி' இவற்றுடனும் இணைத்து நடத்தி வருகிறோம்.

"ஒருமுறை டிரெக்கிங் போய் விட்டு வந்தால் போதும், அந்த அனுபவங்களைப் பற்றிய விவரங்கள் மாணவர்களிடம் பரவி விட, அடுத்த முறை மலையேறும் முகாம் பற்றிய அறிவிப்பு வந்தால், பெயர் கொடுக்கப் போட்டி போட்டுக் கொண்டு வந்து நிற்பார்கள்.

"இவ்வாண்டு மே மாதத்தில், கர்நாடக மாநிலத்தில், சிக்மகளூர் பகுதியில் முத்தோடி என்கிற இடத்தில், இயற்கை சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட ஒரு முகாமில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அதை வாழ்நாளிலேயே மிகவும் முக்கியமான பயணம் என்று குறிப்பிடலாம். தினமும் காலை ஆறு மணிக்கு எழுந்து சுமார் ஒரு மணி நேரம் காட்டுப் பகுதியினுள் சுற்றி வருவோம். இயற்கையியல் வல்லுனர்களும் கூட வருவார்கள். துளிக் கூட சப்தமில்லாமல், பல இடங்களுக்கும் செல்வோம். பலவிதமான பறவைகள் எழுப்பும் ஒலிகளை வைத்து, என்ன பறவை, சிறப்பு அம்சங்கள் என்ன, குணாதிசயங்கள் என்ன, என்பன போன்ற பல விஷயங்களை வல்லுனர்கள் விளக்குவார்கள். மாணவர்களின் புத்திசாலித்தனத்துக்குச் சவால் விடும் சில கேள்விகளையும் கேட்பார்கள். மறுபடி மாலை நேரங்களிலும் அதே போல் கானகத்தில் சுற்றி வருவோம். பொழுதுபோக்கு தவிர அறிவு பூர்வமான புது விஷயங்களையும் அந்த முகாம் மூலம் நாங்கள் தெரிந்து கொள்ள முடிந்தது.

"உதாரணத்துக்கு 'குரோகடைல் பார்க் மரம்' என்று ஒன்று. இதன் வெளிப்பகுதி பார்வைக்கு முதலையின் தடித்த சொர சொரப்பான மேல் தோல் போல இருக்கும். இந்த மரம் மாபெரும் பணியைச் செய்கிறது. ஆமாம்! காட்டுத் தீயைத் தடுக்கிறது! இதன் வெளிப்பகுதி 'தீ தீண்டா' தன்மையுடையதாதலால் வேகமாய்ப் பரவி வரும் காட்டுத் தீயை இம்மரம் கட்டுப்படுத்தி, அழிவைத் தடுக்கிறது.

"முத்தோடி முகாமில் நாங்கள் கூடாரங்களில்தான் தங்கியிருந்தோம். ஒவ்வொரு கூடாரத்திலும் மூன்று மாணவர்கள். என்னுடன் கே. பி. சந்திரசேகர், ரவீந்திர மோகன் என்ற இரு மாணவர்களும் தங்கியிருந்தனர். ஒருநாள் இரவு. நல்ல நிலாக் காலம். மணி ஒன்று அல்லது ஒன்றரை இருக்கலாம். எங்கள் கூடாரத்தின் மீது தொப் தொப்பென ஏதோ விழுகிற சப்தம்! திடுமென விழித்துக் கொண்டோம். மெழுகுவர்த்தியை ஏற்ற பயமாக இருந்தது. பயந்து கொண்டு கூடாரத்தின் பின் திறப்பை மெல்ல விலக்கிப் பார்த்த போது ஓர் ஆண் யானையின் இரண்டு நீண்ட தந்தங்கள் மட்டும் நிலவொளியில் பளிச் சென்று தெரிந்தன!

"நாங்கள் கூடாரமிட்டிருந்த பகுதி சோமவரகினி என்ற காட்டாற்றுக்கு அருகே இருந்த அடர்ந்த மூங்கில் காட்டுப் பகுதி. எங்கள் கூடாரத்தின் மீது மூங்கில்கள் வளைந்து இருந்தன. அதைச் சாப்பிட வந்திருந்தது ஒரு தனி ஆண் யானை! யானை மூங்கிலை வளைத்த போது கழிகள் உடைந்து சில கட்டைகள் எங்கள் கூடாரத்தின் மீது விழுந்திருக்கின்றன. அதனால் ஏற்பட்ட சப்தம்தான் எங்களை எழுப்பியது!

"ஒரு மணி நேரம் பயந்து கொண்டே மூச்சைக்கூட மெல்ல விட்டுக் கொண்டு சப்தமில்லாமல் படுத்திருந்தோம். பின் மெல்ல அந்த யானை நகர்ந்து விட்டது. நாங்களும் தைரியமாக மூச்சு விட்டோம்.

"பந்திப்பூர் காடுகளில் நடந்த ஒரு மலையேறும் முகாம். முதுமலையில் ஒரு முகாம். பூனாவில் தேசிய பாதுகாப்பு அகாடமி நடத்திய ஒரு முகாம் என்று பல்வேறு முகாம்களிலும் எங்கள் மாணவர்கள் உற்சாகமாய்க் கலந்து கொண்டார்கள். 87-ம் வருடம், இமய மலையில் ஏறுகிற முகாம் ஒன்றிலும் எங்கள் மாணவர்கள் ஐந்து பேர் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இதுவரை எங்கள் கல்லூரி மாணவர்கள் சுமார் 800 பேர் பல்வேறு மலையேறும் முகாம்களில் பங்கேற்றுள்ளனர்.

''மலையேறும் முகாம்களில், கட்டுப்பாடு மிக முக்கியமான விஷயம். இது மாணவர்களின் உள்ளங்களைச் செம்மைப்படுத்துகிறது. தொடர்ந்து நடப்பதால், தாகம் அதிகம் எடுக்கும்' என்பதால், ஆரஞ்சு, எலுமிச்சம் பழங்களைக் கூடவே நிறைய எடுத்துப் போவோம். ஆங்காங்கே தேநீர் தயாரித்து அருந்துவோம். சாப்பிடுவதற்கு அநேகமாய் சப்பாத்தி, வாழைப்பழம், முட்டை இவைதாம். எக்காரணத்தைக் கொண்டும் பிஸ்கட் வகைகளைக் கொண்டு போகக் கூடாது. பிஸ்கட் சாப்பிட்டால் தொண்டை வரண்டு, தாகம் எடுக்கும் என்பதால்.''



* பள்ளி மாணவர்களையும் மலையேறுவதில் ஈடுபடுத்திப் பயனடையச் செய்கிறார்கள்.

இந்த மாணவர்கள், ஒரு மாறுதலுக்காக லட்சத் தீவுகளுக்குக் கடந்த பிப்ரவரியில் சென்று வந்துள்ளனர். அங்கே பரந்த கடற்கரையில், பல மைல் தூரம் நடந்து சென்று இயற்கை எழிலை அனுபவித்ததுடன் விஞ்ஞான பூர்வமாக, அப் பகுதி மக்களின் வாழ்க்கை, கடல், மற்றும் கடல் வாழ் ஜந்துக்களின் இயல்புகள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டனர்.

இவர்களுடைய சாதனைகளில் சிறந்தது என்று குறிப்பிடத்தக்க ஓர் அம்சம், ஈரோடு நகரில் உள்ள பள்ளிகளிலும் மலையேறும் சங்கங்களை ஏற்படுத்தி, பள்ளி மாணவர்களையும், இயற்கை வளங்களைப் பற்றியும் அவற்றைப் பாதுகாப்பது பற்றியும் சிந்திக்கச் செய்ததுதான். இப்போது ஈரோடில் ஐந்து பள்ளிக் கூடங்களில் டிரெக்கிங் கிளப்கள் உள்ளன. இப் பள்ளி மாணவர்களுக்கும் மலையேறுவதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. முகாம்கள் நடத்தப்படுகின்றன.



* மலையேறும் முகாம்களில் கட்டுப்பாடுடன் இருப்பதால் மாணவர்களின் உள்ளங்கள் செம்மையடைகின்றன.

''மாலை முடிந்து இருள் கவியும் நேரத்தில் மனச் சோர்வு ஏற்படாதிருக்க ''கேம்ப் ஃபயர்'' உதவும். காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து தங்குமிடத்துக்கு முன்னால் குவித்திருப்போம். இரவு சாப்பாடு முடிந்த பின், தீ மூட்டிவிட்டு அதைச் சுற்றி பாட்டு, டான்ஸ் என்று ஒரே கும்மாளமாய் இருக்கும். மகிழ்ச்சியில் மனச் சோர்வு அடியோடு நீங்கிவிடும். நிம்மதியான இரவுத் தூக்கம் உடற் சோர்வையும் போக்கிவிடும்'' என்று முடித்தார் கந்தசாமி.



* ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துரையாட ஒரு சந்தர்ப்பம்.

— ஜூலி

"விஜயகுமார் எங்கே...?" என்றவாறே அப்பா உள்ளே வந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்த விஜயகுமார் நிமிர்ந்தான்.

"சங்கரலிங்கத்தைப் பார்த்து உன் வேலைக்குச் சொன்னேன். வேளச்சேரியில் ஆபீஸ் இருக்கு, போய்ப் பாரு...."

அப்பா விசிட்டிங் கார்டைப் போட்டார். விஜய் எழுந்தான். சாப்பிடப் பிடிக்கவில்லை.

"சாப்பிட்டுட்டுக் கிளம்ப வேண்டியது தானே. நீங்க அவன் சாப்பிடும் போது தான் சொல்லணுமா...?" என்றாள் அம்மா.

"நல்ல கதையா இருக்கே? அவரைப் போய்ப் பாருன்னு சொன்னா, அதுக்குக் கோபமா? நாடு உருப்பட்டாப்லதான்!" என்றவாறே அப்பா உள்ளே போனார்.

விஜய்க்கு அப்பா சொன்னதால் வருத்தமில்லை. பின் யார் மீது கோபம்....? அவனுக்கே தெரியவில்லை. பி.காம்., முடித்தும் வேலை தேடிக் கொள்ள முடியாத தன் மீதா...? வேலை வாங்கித் தராத அப்பா மீதா? 'வேலையில்லாத் திண்டாட்டத்தை



'விரட்டுவோம்' என்று கோஷமிடும் அரசியல்வாதிகள் மீதா...?

தான் ஒரு பாரமாகிப் போய் விட்டோமே என்று எரிச்சலாக வந்தது. சர்டிபிகேட்கள் அடங்கிய ஃபைலை எடுத்துக் கொண்டான். அதைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது. சர்டிபிகேட்டுகள் நம்மைக் கோழையாக்கி விட்டன. பேசாமல் அந்தக் காலம் போல் வெறும் விவசாயமும், நெசவும் இருந்திருந்தால் இந் நேரம் வேலைக்குப் போயிருக்கலாம். உடல் உழைப்பை மட்டுமே சார்ந்திருந்தால் நிம்மதியோ என்று தோன்றியது.

பஸ்—ஸ்டாப்பிற்கு வந்தான். பஸ் ஸ்டாப்பிற்குச் சம்பந்தமேயில்லாத இடத்தில் நின்ற பஸ்ஸில் ஓடிப் போய் ஏறினான்.

''ஒரு வேளச்சேரி போலீஸ் ஸ்டேஷன்."

பஸ் இவன் படித்த கல்லூரியைக் கடந்து சென்றது. விஜய்க்குத் தன்னுடைய கல்லூரி நாட்கள் ஞாபகம் வந்தன. எவ்வளவு சந்தோஷமான நாட்கள். ஒவ்வொரு நாளும் தனக்காக மலர்வது போல் சந்தோஷம். அப்பாவிடம் உரிமையோடு பணம் கேட்க முடியும். அம்மாவிடம் — மோர்க் குழம்பும் புடலங்காய்ப் பொரியலும் வைக்காதே என்று சண்டை போட முடியும்.

'தம்பி என்ன பண்றான்?' என்ற கேள்விகளைச் சுலபமாகச் சமாளிக்க முடியும். 'இலங்கைப் பிரச்னை'யிலிருந்து கல்லூரியில் வாட்டர்கூலர் பிரச்னை வரை, எதற்கெடுத்தாலும் உடனடியாகக் கல்லூரியை மூடச் செய்ய முடியும், இன்ஸ்டன்ட் ஊர்வலங்கள் நடத்த முடியும். ஒரு கூட்டத்திற்குச் சுலபமாகத் தலைவனாக முடியும்.

பட்டம் பெற்ற போது இந்த அனைத்து பலங்களையும் இழந்து விட்டதாகவே உணர்ந்தான். வேலை! வேலை! வேலை என்று அலைந்தான். எந்த இண்டர்வியூவிலும் கூட்டம்.

பல்வேறு விதமாக வசனம் பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் விதவிதமான வேலை தேடும் இளைஞர்களைப் பார்த்தாகி விட்டது.

'நாமினல் அக்கௌண்ட்டிற்கும் ரியல் அக்கௌண்ட்டிற்கும் என்ன வித்தியாசம்' முதல் 'விம்பிள்டன் சாம்பியன்' வரை பதில் சொல்லியாகி விட்டது. அப்படியும் ஆரம்ப இடத்திலேயே இருந்தான்! அலாவுதீன் அற்புத விளக்கு கிடைத்தால்கூட வேறு எதுவும் கேட்காமல், வேலை கேட்பான். அந்த அளவிற்கு வேலையை விரட்டினான்.

பஸ் 'வேளச்சேரி போலீஸ் ஸ்டேஷன் ஸ்டாப்பில் நின்றது. விஜய் நினைவு கலைந்து இறங்கினான்.

''பஸ்ல ஏறினவுடனே தூங்கிடுங்க'' என்று ஏசியவாறே கண்டக்டர் விசில் கொடுத்தார். விஜய் நிமிர்ந்து பார்த்தான். கல்லூரியில் படிக்கும் போது, படிக்கட்டிலிருந்து மேலே ஏறச் சொன்ன கண்டக்டரிடம் சண்டை போட்டு, பஸ்ஸை மறித்தது ஞாபகம் வந்தது. இப்போது பரிதாபமாக

ச. ரெங்கநாதன்

நடந்து போனான்.

கம்பெனியைக் கண்டுபிடித்தான். வாசலில் பெரிய இரும்புக் கம்பி கதவு போட்டிருந்தது. மெதுவாய்த் திறந்து உள்ளே நுழைந்தான். கட்டடத்தைப் பார்த்து நடந்தான். பின்வால் கைதட்டல் சத்தம் கேட்டது. வாட்ச்மேன் கூப்பிட்டான். திரும்பி நடந்தான்.

''நீ பாட்டுக்கு உள்ளே போனா என்ன அர்த்தம்?'' வாட்ச்மேன் கேட்டான்.

கையில் சர்டிபிகேட்டுடன் ஃபைலைப் பார்த்திருப்பான் போலும். இந்த மாதிரியான ஃபைல்களே உடனடியாக மரியாதையைக் குறைக்கின்றன!

''சங்கரலிங்கம் சாரைப் பார்க்கணும் வரச் சொல்லியிருந்தார்.''

''ஓ! நீங்கதானா அது? இவ்வளவு நேரம் வரலையேன்னு கவலைப்பட்டு, இப்பத்தான் போறாரு!'' படு கிண்டலாகச் சொன்னான்.

விஜய்க்கு எரிச்சலாய் வந்தது. ''கிண்டலா! சீட்டு வேணா எழுதித் தரேன் கொண்டு போய்க் கொடுங்க'' என்றான்.

''இத முதல்லேயே பண்ணியிருந்தா பிரச்னையேயில்லை'' என்றவாறே சீட்டை வாங்கிக் கொண்டு போனான் வாட்ச்மேன்.

விஜய் வெயிலில் ஃபைலைத் தலைக்கு மேல் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான்.

'சார் ஸ்டூடன்ட்ஸ் யூனியன் செகரட்டரின்னு நான் பல தடவை உங்களைப் பார்க்க வருவேன். இந்த ப்யூன் என்ன சார் எங்களை வாசல்ல நிறுத்தறாரு?'

'இந்தாப்பா, இனி விஜயகுமார் வந்தால் பேசாம உள்ளே விடு' என்றார் பிரின்சிபால். கல்லூரி சம்பவம் விஜய்யின் நினைவில் நிழலாடியது.

வாட்ச்மேன் அனுமதித்த பிறகு உள்ளே போனான். சங்கரலிங்கம் ரூமின் முன்னால் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். அவரது ரூம் வாசலிலிருந்த ப்யூனிடம் சொன்னான்.

''சார் பிஸியாக இருக்கராரு, இருங்க!'' என்று பதில் வந்தது.

சுற்றிப் பார்த்தான். சுமார் இருநூறு பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ''சே நாட்டில நம்மளைத் தவிர எல்லாருக்கும் வேலை கிடைக்குது'' — எரிச்சலுடன் முணுமுணுத்தான். ஒரு மணி நேரம் காத்திருந்தான்.

மதியம் மணி ஒன்றானது. ரூம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவர்தான் சங்கரலிங்கம் என்று யூகித்து, விஜய் 'விஷ்' அடிப்பதற்குள் அவசரமாய் வெளியே போய் விட்டார் அவர். விஜய் பின்னால் வேகமாய்ப் போனான். காரில் ஏறிப் போய் விட்டார். ப்யூனிடம் போய்க் கேட்டான்.

''ஐயா சாப்பிடப் போறாரு, போய் விட்டு ஒரு மணி நேரம் கழித்து வருவாரு''

என்ற பதிலைக் கேட்டுச் சலிப்புடன் விஜய் பையைத் தொட்டுப் பார்த்தான். பஸ் டிக்கெட்டுக்குப் போக ஒரு டீக்குத் தேறலாம். டீயா, சிகரெட்டா என்று கொஞ்சம் யோசித்து, டீ சாப்பிட்டான். மீண்டும் கம்பெனியில் வந்து உட்கார்ந்தான்.

இரண்டரை மணிக்கு சங்கரலிங்கம் வந்தார். அதே வேகத்தில் உள்ளே போய் விட்டார். விஜய்க்கு நாம் கண்ணில் பட்டோமா என்று சந்தேகம் வந்தது. அரைமணி நேரம் மேலும் காத்திருந்தான்.

'எப்படி சார் நீங்க நேற்று எல்லாருக்கும் ஆப்சென்ட் போடலாம்?'

'கிளாஸ்லே யாருமே இல்லையேப்பா?' —புரொபஸர் சொன்னார்.

'பத்து நிமிஷம் காத்திருந்தோம். ஸ்டாஃப் யாருமே கிளாஸுக்கு வரலை. சும்மா உட்கார்ந்திருக்க, எங்களுக்கு வேற வேலை இல்லையா? எல்லாருக்கும் அட்டெண்டன்ஸ் கொடுங்க!'

—மீண்டும் காலேஜ் சம்பவங்கள் அநாவசியத்திற்கு ஞாபகம் வந்து எரிச்சல் மூட்டின. எழுந்து போய், ப்யூனிடம் மீண்டும் சொன்னான். ப்யூன் உள்ளே போய் விட்டு வந்தான்.

"உங்களோட பயோ—டேட்டாவைக் கொடுத்துட்டு போகச் சொன்னாங்க!"

விஜய்க்கு பயங்கரமாக எரிச்சல் வந்தது. இதற்குத்தானா இத்தனை கஷ்டம்? பேசாமல் போஸ்ட் பண்ணியிருக்கலாமே! வேண்டா வெறுப்புடன் அவன் கையில் பயோ—டேட்டாவைத் திணித்து விட்டுத் திரும்பினான்.

கம்பெனியை விட்டு வெளியே வந்தான். லேசான காற்று மேலே பட்ட போது, கொஞ்சம் இதமாக இருந்தது. அப்பா மேல் எரிச்சல் வந்தது. போய்க் கோபப்படலாம். ஆனால் பாவம், ஏதாவது க்ளிக் ஆகி விடாதா என்று அவர் அனுப்பியிருக்கிறார்.

வீட்டில் அம்மாவிடம் என்ன பதில் சொல்லலாம்? பாவம் ஆசையோடு காத்துக் கொண்டிருப்பாள். மதியம் சாப்பிட வரவில்லையே என்று கவலைப்பட்டிருப்பாள். தங்கை கல்யாணம் இன்னும் ஒரு வருடம் தள்ளிப் போகலாம். ஏதாவது ஒரு வேலை வேண்டும்.

வீட்டிற்குப் போக மனமில்லை. லைப்ரரிக்குப் போனான். யாரோ இரண்டு பேர் நடைபாதையில் உண்டியல் குலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

'வரும் வர்க்க புரட்சி'ங்கற கன்வென்ஷனுக்கு உங்களோட ஹம்பிள் டொனேஷன்.'

பழக்கப்பட்ட குரலாக இருக்கவே, திரும்பிப் பார்த்தான். முத்துசாமி நின்று கொண்டிருந்தான். கூடப்படித்தவன்!

"என்னடா பரிதாபமாக ஃபைலைத் தூக்கிட்டு அலையறே? வேலை கிடைச்சுதா?" — முத்துசாமி கேட்டான்.

"வழக்கம் போல் வெட்டி அலைச்சல்! ஆமா, நீயென்ன உண்டியல் குலுக்க ஆரம்பிச்சுட்டே?"

முத்துசாமி குரலைக் கம்மி பண்ணிக் கொண்டு பேசினான். "என்னடா பண்றது? எங்க வீட்டு நிலைமை உனக்குத் தெரியும். வேற வேலை கிடைக்கற வரை கைச் செலவுக்குக் கூட வீட்டை எதிர்பார்க்கணுமா? சும்மா இதுல சேர்ந்து வைத்தேன். எவ்வளவு கலெக்ட் பண்றோமோ, அதில இருபது சதவீதம் நமக்கு. ஒரு மாதிரி செலவுக்கு ஓடுது. நீயும் சேர்ந்துடு!"

சொல்லி விட்டு, விஜய் கையில் உண்டியல், துண்டுப் பிரசுரங்கள் கொடுத்தான். சட்டையில் பேட்ச் குத்தினான்.

'சார், ஆடிட்டோரியம் டொனேஷன்னு ஸ்டூடன்ஸை கலெக்ஷன் பண்ணச் சொன்னீங்களாமே! சார்! நாங்க படிக்க வந்திருக்கோம். தெருத் தெருவா பிச்சையெடுக்க அல்ல. எங்களுக்குச் சுயமரியாதை இருக்குது.'

விஜய் பிரின்சிபாலிடம் ஒருமுறை கோபப்பட்டதை மறக்க முயன்றான். வர்க்கப் புரட்சியில் தற்காலிகமாக கலந்து விட்ட விஜய், உண்டியல் குலுக்க ஆரம்பித்தான்.

தேர்தலில் வாக்களித்துத் தலைவனைத் தேர்ந்தெடுப்பது குடிமக்களின் உரிமை மட்டுமல்ல! கடமையும் கூட. இந்



நிலைமை ஆஸ்திரேலியாவில். இந் நாட்டில் மக்கள் 18 வயதிலேயே வாக்குரிமை பெற்று விடுகின்றனர். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருமே கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். தவறினால் அபராதம்! பதிவு செய்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் பதிவு அட்டை வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோர், நிலையான விலாசம் இல்லாதோர் போன்றவர்களுக்கென தனி வாக்காளர் பட்டியலும் உண்டு. வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்து கொள்வதோடு மட்டுமல்ல, அனைவரும் தேர்தலில் வாக்களித்தேயாக வேண்டும். வாக்களிக்கத் தவறினாலும் அபராதம்தான்!

— புவனா முரளி.



ஏழு தலைமுறை எழுச்சி; இன்றைய தலைமுறையின் மகிழ்ச்சி!

''ஒவ்வொரு தமிழனும் பார்த்தே ஆக வேண்டிய நிகழ்ச்சி' என்று ஒன்றினைச் சிபாரிசு செய்ய முடியுமா?'' என்று கேட்டால்,

''ஓ! 'ஏழு தலைமுறை எழுச்சி' இருக்கிறதே! அதை மகிழ்ச்சியோடு சிபாரிசு செய்கிறேன்!'' என்று பதில் சொல்லலாம்.

இந்த மகிழ்ச்சி, இரட்டிப்பாவதற்கு ஒரு முக்கிய காரணமும் உண்டு! 'ஏழு தலைமுறை எழுச்சி', ஒரு டி.வி. நிகழ்ச்சி! பொழுது விடிந்தால் பொழுது போனால் டி.வி.யைக் குறை கூறுவதே பழக்கமாகி விட்ட நமக்கு, 'தூர்தர்சனைப் பாராட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்ததே' என்பதில் ரொம்பத்தான் சந்தோஷம் உண்டாகிறது! இந்த நிகழ்ச்சியைத் தனியார் துறை நிறுவனங்கள் 'ஸ்பான்ஸர்' பண்ண அனுமதிக்காமல், தாங்களே தயாரிப்புக்கு நிதி வசதி செய்து தந்தமைக்காக தூர்தர்சனையும் ஒலி — ஒளி பரப்புத் துறை அமைச்சகத்தையும் மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்!

நிகழ்ச்சியைத் தயாரித்திருப்பவர்

* மிகைப்படுத்துதல் இல்லாத இயல்பான நாடகக் காட்சிகள் நிகழ்ச்சியின் சிறப்பம்சம் — பாரதியாராக மாஸ்டர் ஸ்ரீதர்.



* கிருஷ்ணசாமி: ஆராய்ச்சியை சுவாரஸ்யமாக்கும் ஆற்றல்.

(கிருஷ்ணசாமி அஸோஸியேட்ஸ்) எஸ். கிருஷ்ணசாமி. ஆம், **'Indus Valley to Indira Gandhi'** புகழ் எஸ். கிருஷ்ணசாமிதான். 'ஏழு தலைமுறை எழுச்சி' என்பது விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கினைத் தெளிவுபடுத்துகிற நிகழ்ச்சியாகும். தமிழகத்தில் நடந்த விடுதலைப் போராட்ட சம்பவங்கள், அனைத்திந்திய ரீதியிலான போராட்டத்தின் ஓர் அங்கமே என்பதை மறவாமல், வடக்கையும் தெற்கையும் அவ்வப்போது இணைத்து இணைத்துச் சம்பவங்களைக் கூறி, வரலாற்றினை வளர்த்து வரும் அழகை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சரித்திரத்தை மட்டும் கூறி வந்தால் அலுத்துப் போய் விடக்கூடும் என்பதை உணர்ந்து, நாடக உருவிலும் ஒவ்வொரு சம்பவத்தை இணைத்தது வரவேற்கத்தக்கது. சுதந்திரப் போராட்ட இயக்கமானது, சமூதாய சீர்திருத்த மறுமலர்ச்சியோடும், நமது ஆன்மீக வளர்ச்சி, முதிர்ச்சியோடும் இரண்டறக் கலந்த ஒன்று என்பதை மறவாமல் படமெடுத்திருக்கிற பாங்கை எவ்வளவு சிறப்பித்துச் சொன்னாலும் போதாது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த 'ஏழு தலைமுறை எழுச்சி'யைப் பார்த்து வரும் போது, கிருஷ்ணசாமியின் ஆராய்ச்சி மனப்பான்மை ஆங்காங்கே 'பளிச்'சிடுவதையும் நாம் காண முடிகிறது. ஆராய்ச்சியை சுவாரஸ்யமாக்குகிற அவருடைய ஆற்றலையும் உணர்ந்து ரசிக்க முடிகிறது. உதாரணமாக ஆஷ் துரை கொல்லப்பட்டதும் சிறையிலிருக்கும் வ.உ.சி., சேலம் விஜயராகவாச்சாரியாருக்கு எழுதிய கடிதம் நெஞ்சை உருக்குவதாக இருக்கிறது. தீவிரவாதியாக இருந்த போதிலும் அவர், 'நமது பகைவன் வெள்ளையனின் மேலாதிக்க மனப்பான்மை தானேயொழிய, வெள்ளைக்காரனே அல்ல' என்ற கருத்து தொனிக்க எழுதுவது, காந்தியத்திலிருந்து மாறுபட்டதல்ல என்று காண்கிறோம். இப்படி எத்தனையோ ஆராய்ச்சி ரசத் துளிகளைச் சரித்திரத் தொகுப்புக்கிடையே தொடுத்துத் தந்து

மணம் பரப்புகிறார் எஸ். கே.

ஒளிப்பதிவு பற்றிக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். டாகுமெண்டரி என்றாலே ஏற்படுகிற அலுப்பை ஆர்வமாக மாற்றக் கூடியது ஒளிப்பதிவின் சிறப்புத்தான். முதல் திங்கட் கிழமை ஆரம்ப நிகழ்ச்சியிலேயே தஞ்சைப் பெரிய கோபுரத்தைப் பல அபூர்வமான கோணங்களில் படம் பிடித்து நமது இதயத்தைக் கொள்ளை கொண்டு விட்ட ராஜன் வில்லியம்ஸினுடைய ஆற்றல், அடுத்து வந்த பல திங்கட் கிழமைகளிலும் தொடர்ந்தது; இனியும் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

இனி, இந்தத் தயாரிப்பில் தமக்கு ஏற்பட்ட சில அனுபவங்களை கிருஷ்ணசாமி கூறக் கேட்போம்:

இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றையும் அப் போராட்டத்தில் ஒவ்வொரு மாநிலமும் எத்தகைய பங்கு வகித்தது என்பதையும் தனித்தனியே படமாக்க வேண்டும் என்ற யோசனையை நான் மத்திய அரசுக்குச் சில வருடங்களுக்கு முன்பே தெரிவித்திருந்தேன். கருத்தளவில் இதனை ஏற்று, ஃபிலிம்ஸ் டிவிஷனைக் கொண்டு தேசிய அளவிலான விடுதலைப் போர் வரலாற்றைப் படமாக்கச் செய்தது அரசாங்கம். இப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கைப் படமாக்க எனக்கு ஒப்புதல் அளிக்க நான்கு வருட அவகாசம் எடுத்துக் கொண்டது! எனினும், தூர்தர்ஷனின் வழக்கமான விதிகளைத் தளர்த்தி, முன் தணிக்கை இன்றி, ஒவ்வொரு வாரத்துப் பகுதியாக அவ்வப்போது படமாக்கித் தரும் ஒரு மிகப் பெரிய சலுகையை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். இதனால் என் பொறுப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளதை உணர்கிறேன்.

ஒவ்வொரு பகுதியையும் முதலில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிக்குப் போட்டுக் காட்டி, தகவல் அடிப்படையிலான தவறுகள் இல்லாதவாறு கவனித்துக் கொள்கிறேன். நண்பர் ஜெயகாந்தனுடன் இணைந்து வரலாற்றின் எந்தப் பகுதியை நாடக வடிவில் வழங்கலாம் என முடிவு செய்து, வசனங்கள் எழுதும் பொறுப்பை அவரிடமே முழுமையாக ஒப்படைத்து விடுகிறேன்.

இத்தகைய வரலாற்றுப் படம் ஒன்றை எடுக்க வேண்டும் என்ற ஆசை எனக்குள் நீண்ட காலமாக இருந்து வந்த போதிலும் அப் பணி என்னிடம் வழங்கப்பட்டதும் அதனைச் சரிவரச் செய்ய வேண்டுமே என்ற கவலை என்னுள் எழத்தான் செய்தது. தொடரின் முதல் பகுதியே மிக முக்கியமானது என்று உணர்ந்தேன். இப் பகுதியிலேயே பார்வையாளர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி அவர்களை நிகழ்ச்சியுடன் ஒன்றச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு இருந்தது. அதிர்ஷ்டவசமாக முதல் பகுதி களை கட்டவும் செய்தது. 'எனதருமை பாரதக் குடிமகனே' என்று தொடங்கி, இந்தியாவின் தொன்மையான நாகரிகத்தைப் பற்றித் தக்க படங்களுடன் விவரித்தேன். இது பார்வையாளர்களைக் கவர்ந்தது என்றே நம்புகிறேன்.

எனக்கு ஆச்சரியம் அளித்த விஷயம் என்னவென்றால் நாங்கள் தயாரித்தளித்த இதர கதை, நாடக நிகழ்ச்சிகளைக் காட்டிலும் இந்தச் செய்திப் பட நிகழ்ச்சிக்கு அதிக வரவேற்பு இருக்கிறது என்பதுதான். ஒவ்வொரு வாரமும் நிகழ்ச்சியைப் பாராட்டித் தொண்ணூறு முதல் நூறு கடிதங்கள் வரை வருகின்றன. இது மனத்துக்கு நிறைவாக இருக்கிறது. இன்னொரு புறத்தில், முன்பின் தெரியாத பலரும் இந் நிகழ்ச்சிக்கு உதவக்கூடிய தகவல்களையும் புகைப்படங்களையும் தாங்களாகவே முன்வந்து கொடுத்து வருகிறார்கள். தேசப் பற்றும், நமது சுதந்திர வரலாற்றைக் குறித்து நியாயமான பெருமையும் உடைய பலர் இன்னும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் உணரும் போது நெகிழ்ச்சியாக இருக்கிறது.



* இளம் இராமலிங்க அடிகளாராக அற்புதமாக நடித்த தாசரதி.

எல்லாவற்றையும் விட அதிக சந்தோஷம் ஏற்படுவது இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இந் நிகழ்ச்சி குறித்துப் பேசும் போதுதான். வரலாறு என்பது கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்குமிடையே நிகழும் ஓர் உரையாடல் என்றே நான் கருதுகிறேன். ஒரு வரலாற்றுச் செய்திப் படத்தைப் பார்க்கும் போது அதனை வெறும் பழங்கதையாக எண்ணாமல் அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இன்றைய நமது நிலைமைக்கு அஸ்திவாரங்கள் என்பதைப் பார்வையாளர்கள் உணர வேண்டும். அந்த உணர்வு அவர்களது சிந்தனையைத் தூண்டி நல்ல எதிர்காலத்தை வடிவமைக்க அவர்களுக்கு உதவ வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் இந் நிகழ்ச்சியை நான் தயாரித்தேன். அதனால் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இதனைப் பாராட்டும் போதுதான் எனக்குப் பூரண திருப்தியும் மனநிறைவும் ஏற்படுகிறது.

— சீதா ரவி

ராஜேஷ்குமார்

6

மலபார் ஹில்ஸின் மத்தியில் உட்கார்ந்திருந்த கமிஷனர் வீட்டு ஹால் டெலிபோன் — விடாப்பிடியாய்க் கத்திக்கொண்டிருக்க — பக்கத்து அறையினின்றும் யூனிபார்மோடு வெளிப்பட்ட கமிஷனர், ரிஸீவரை எடுத்து, காதுக்குக் கொடுத்தார். காலை மணி ஆறு. ஜன்னல்களில் வெளிச்சம். வெளியே மெலிதான பனி.

''ஹலோ...''

''குட்மார்னிங் கமிஷனர் ஸார். நான் பூபேஷ்...''

''குட்மார்னிங் மிஸ்டர்... பூபேஷ்... எனிதிங்க் இம்பார்ட்டெண்ட்?''

''ஒலிம்பிக் 'பார்ட்டிஸிபண்ட்ஸ்' எல்லோருமே பயிற்சி பெறுவதற்காக ஸ்டேடியம் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்.''

''நல்ல செய்தி. குருதேவ் சிங், உத்தம், மரணத்தில் யாருக்கும் எந்த சந்தேகமும் வரவில்லையே...?''

''சிலருக்கு லேசாகச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்டேடியம் போகத் தயங்கினார்கள். நீச்சல் நிகிலாவும் கோச் ரீட்டா சென்னும் முதன் முதலாய்த் துணிச்சலாய்ப் புறப்பட்டுப் போனதும் — மற்றவர்களும் ஒவ்வொருவராய்ப் புறப்பட ஆரம்பித்து விட்டார்கள்.''

''போலீஸ் பாதுகாப்பு போதுமானதாக இருந்ததா?''

''திகட்டுகிற அளவுக்கு இருந்தது.. அதிகாரிகளின் ஒத்துழைப்பு அற்புதம். ஒவ்வொரு காரையும் டைனமைட் டிடெக்டர் வைத்து — வெடிகுண்டு பொருத்தப்பட்டிருக்கிறதா இல்லையா என்று 'செக்' செய்து — காரின் டிரைவர்கள் பரிசோதிக்கப்பட்டு — எல்லாமே நல்ல முறையில் நடந்தது.''

''நீங்கள் ஸ்டேடியம் போகவில்லையா மிஸ்டர் பூபேஷ்?''

''கிளம்பிக் கொண்டிருக்கிறேன். நீங்களும் வருவதாக இருந்தால் ஹோட்டலில் காத்திருக்கிறேன்...''

''வேண்டாம்... நான் மந்திரி காமோத்தைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அவரிடம் பேசி விட்டு ஒரு மணி நேரம் கழித்து அலுவலகம் திரும்புவேன். நீங்கள் ஸ்டேடியம் போய் விட்டு அலுவலகம் வருகிறீர்களா?''

''நான் ஸ்டேடியம் போனால் எப்படியும் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகும்.. கமிஷனர் ஸார்...''

''பரவாயில்லை. நீங்கள் ஸ்டேடியத்திலிருந்து எப்போது திரும்புகிறீர்களோ அப்போது அலுவலகம் வந்தால் போதுமானது. மேற்கொண்டு விளையாட்டு வீரர்களுக்குத் தர வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது.''

''அவசியம் வருகிறேன்... ஸார்...''

''தாங்க்..யூ...'' — கமிஷனர் சொல்லி ரிஸீவரை வைத்த அதே விநாடி — டெலிபோன் மறுபடியும் துடித்தது. முழுசாய் ஒரு ரிங் போவதற்குள் ரிஸீவரை எடுத்து ''எஸ்'' என்றார்.

இன்று

மறுமுனையில் — பதற்றமாய் — திக்கலாய், ஒரு பெண் குரல்.

''அது கமிஷனர்... ஹில்... வீடுதானே...?''

''ஆமாம்...''

''பேசுவது கமிஷனர்தானே...?''

''ஆமாம்...''

''ஸார்.. நான் நாட்டியா...''

ஹில் புருவத்தை உயர்த்தினார். ''ஓ... நீயா... என்ன விஷயம்...?''

''ஸார்... நா... நான் அவங்களைப் பார்த்தேன்...''

''யாரை...?''

''அன்னிக்கு ராத்திரி கார்ல வந்தவங்களை....''

ஹில்லின் முகம் சந்தோஷத்திற்குப் போயிற்று.

''ஈஸிட்? எங்கே பார்த்தே....?''

''ஹோட்டல் 'நட் ஷெல்' தெரியுமா ஸார்?''

''தெரியும் காட்கோபரில் இருக்கே... அதுதானே...?''

''ஆமாம்.. ஸார்... அதே ஹோட்டல் தான். பத்து நிமிஷத்துக்கு முன்னாடி அந்த ஹோட்டல் மானேஜரை — என்னோட காபரே டான்ஸ் ஷெட்யூல் விஷயமா பார்த்துப் பேசிட்டு வெளியே வந்துட்டிருந்தேன். அப்போ காம்பௌண்ட் கேட்டுக்குள்ளே ஒரு டாக்ஸி நுழைஞ்சிட்டிருந்தது. டாக்ஸியோட பின் சீட்ல அந்த இரண்டு பேரும் உட்கார்ந்திட்டிருந்தாங்க. அவங்களைப் பார்த்ததுமே எனக்கு உடம்பெல்லாம் வேர்த்துடுச்சு... உடனே ரோட்டுக்கு வந்து — ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்தைத் தேடிக் கண்டுபிடிச்சு — அங்கிருந்து பேசிட்டிருக்கேன்...''

நீ பேசற டெலிபோன் பூத்.. எங்கேயிருக்கு...?''

''ஹோட்டல் 'நட் ஷெல்' எதிரில் — ஷிவாஸ் ரோடு இருக்கு ஸார். அந்த ரோட்டு

முனையில இருக்கிற டெலிபோன் பூத்திலிருந்துதான் பேசிட்டிருக்கேன்.''

''நான் இப்ப வந்துடறேன்... நீ பூத்துக்குள்ளேயே இரு.''

''சீக்கிரம் வாங்க ஸார்...''

''நான் அங்கே வர்றதுக்குள்ளே நீ ஒரு காரியம் பண்ணணும்.''

''சொ... சொல்லுங்க... ஸார்...''

''ஹோட்டலுக்குள்ளே போன டாக்ஸி இன்னும் வெளியே வரலையே...?''

''வரலை.. ஸார்... டெலிபோன் பூத்துக்குள்ளிருந்து பார்த்தா — ஹோட்டல் காம்பெளண்ட் கேட் நல்லாவே தெரியுது ஸார். நான் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்.''

''குட்! ஒருவேளை நான் அங்கு வந்து சேர்றதுக்குள்ளே — டாக்ஸி வெளியே போயிட்டா.. அதனோட நெம்பரை நோட் பண்ணி வை...

''சரி... ஸார்...''

ஹில் ரிஸீவரை வைத்து விட்டு — ஏறக்குறைய ஓடி — தம் வீட்டு போர்டிகோவில் நின்றிருந்த ஜீப்புக்குள் தாவினார்.

''டிரைவர்... ஜீப்பை எடு... உனக்குப் பத்து நிமிஷந்தான் தருவேன். ஜீப் காட்கோபர்ல இருக்கணும்.''

ஜீப் ஒரு சின்ன புயலாக மாறியது.

இறப்பு விழா





"என்னது? தலைவர் தஞ்சைக்குக் கிழக்கே அறுபது மைல் தொலைவில் மையம் கொண்டுள்ளாரா?"

"ஆமாம்! தலைவர் மேற்கொண்டுள்ளது 'சூறாவளி'ப் பயணமாச்சே!"

— குத்தாலம் ராஜா.

உங்களுக்காக வேலை செய்யும்போது மூளையைப் பயன்படுத்துங்கள். மற்றவர்களை வேலை வாங்கும் போது இதயத்தைப் பயன்படுத்துங்கள்.

— டானல்ட் லெயர்ட்.

— தி. அருள்மணி.



ஹோட்டல் 'நட்ஷெல்'லுக்கு எதிரேயிருந்த ஷிவாஸ் ரோட்டுக்குள் ஜீப்பை நுழைத்து — டெலிபோன் பூத்தை நெருங்கிய போது — கமிஷனர் ஹில்லுக்கு அதிர்ச்சி.

பூத்துக்குள் நாட்டியாவைக் காணோம்.

வேறு யாரோ ஒரு வழுக்கைத் தலை மனிதர் இரைந்து பேசிக் கொண்டிருந்தார்.

"பிகர் மத் கரோ... ஷர்மாஜி! மேங்.. ஜரூர்.... ஆவூங்கி...!"

ஹில், ஜீப்பினின்று இறங்கிப் போய் — டெலிபோன் பூத்தின் உடைந்து போன கண்ணாடிக் கதவுக்குள்ளே — கையை நுழைத்து — பேசிக் கொண்டிருந்தவரின் தோளைத் தொட்டார். அவர் திடுக்கிட்டுப் போய் ரிஸீவரோடு திரும்பிப் பார்க்க —

"பாஹர் ஆவ்னா..." என்றார்.

ரிஸீவரை வைத்து விட்டு — மிரண்டு போன விழிகளோடு வெளியே வந்தவரிடம் — வேகமான குரலில் கேட்டார் ஹில்.

"இந்த டெலிபோன் பூத்துக்குள்ளே எவ்வளவு நேரமா பேசிட்டிருக்கீங்க?"

"இப்பத்தான்... ஒரு நிமிஷ நேரமா..."

"நீங்க பூத்துக்குள்ளே நுழையும் போது உள்ளே வேற யாராவது இருந்தாங்களா..?"

"இல்ல... ஸார்..."

"பொய் சொல்லாதீங்க... ஒரு பொண்ணை நீங்க பார்க்கலை?"

"பொண்ணா...?"

"எஸ். ஒரு இள வயசுப் பெண்..."

"நான் பார்க்கலை ஸார்..."

"நீங்க இங்கே டெலிபோன் பண்ண வரும் போது — பூத்துக்குப் பக்கத்துல யாருமே இல்லையா...?"

"இல்ல ஸார்.. பூத்தோட கதவு மட்டும் திறந்து காத்துல ஆடிட்டிருந்தது."

வழுக்கைத் தலை ஆசாமி தீர்க்கமான குரலில் சொல்ல — ஹில் இந்த ஆளை விசாரிப்பதில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்தவராய் ஜீப்புக்கு வந்தார்.

"டிரைவர்! ஜீப்பை 'நட் ஷெல்'லுக்கு விடு...."

ஜீப் அந்தக் குறுகலான தெருவில் — சிரமமாய் ரிவர்ஸ் எடுத்து — ஹோட்டல் நட்ஷெல்லின் பிரும்மாண்ட காம்பௌண்ட் கேட்டில் பிரவேசித்து — போர்டிகோவின் முன்புறம் போய் நிசப்தமானது. ஹில் கீழே இறங்கி — கார் பார்க்கிங்கை நோக்கிப் போனார்.

இரண்டு கான்டெசாக்கள், ஒரு ஸ்டாண்டர்ட் இரண்டாயிரம், ஏழெட்டு மாருதிகள், நான்கைந்து அம்பாசிடர்கள்... பியட்கள்... தொடர்ந்து பைக், ஸ்கூட்டர்கள்.

டாக்ஸி ஏதாவது தட்டுப்படுகிறதா என்று பார்வையைக் கார் பார்க்கிங்கின் கோடி வரைக்கும் துரத்திப் பார்த்தார் ஹில்.

'எந்த டாக்ஸியையும் காணோம்.'

சுற்றும் முற்றும் பார்த்த ஹில் கையை அசைத்து — காம்பௌண்ட் கேட்டில் நின்றிருந்த ஹோட்டல் வாட்ச்மேனைக் கூப்பிட்டார்.

அவன் பெரிய மீசையோடு தொப்பை குலுங்க ஓடி வந்தான்.

"ஸார்" — அவருக்கு எதிரே வந்து விறைப்பாய் நின்றான்.

"உம் பேரென்ன?" லோக்கல் இந்தியில் கேள்விகளை அடுக்கினார்.

"துவாரகாதாஸ் ஸார்."

"பத்து நிமிஷத்துக்கு முன்னாடி டாக்ஸி ஏதாவது உள்ளே வந்ததா?"

அவன் யோசித்து "ஆமா... ஸார்" என்றான்.

"கார் பார்க்கிங்ல அந்த டாக்ஸியைக் காணோம்...?"



மன்னர்: இளவரசருக்கு 'யானை ஏற்றம்' 'குதிரையேற்றம்' இவற்றுடன் 'விலைவாசி ஏற்றம்' பற்றியும் கற்றுத் தர ஏற்பாடு செய்யும், அமைச்சரே!

— ஆர். ரகோத்தமன்.

"வந்ததுமே அது போயிருச்சு... ஸார்.."

"உள்ளே ஆட்கள் இருந்தாங்களா?"

"ரெண்டு பேர் இருந்தாங்க ஸார்."

"வந்ததுமே.. ஏன் போயிட்டாங்க?"

"தெரியல்ல ஸார்..."

"டாக்ஸியில் வந்தது யார்ன்னு தெரியுமா...?"

"தெரியாது ஸார்..."

"இதுக்கு முன்னாடி அவங்களைப் பார்த்திருக்கியா?"

"இல்ல ஸார்."

"டாக்ஸி நெம்பரைப் பார்த்தியா?"

"நெம்பர் பிளேட்டை எதேச்சையா பார்த்தேன் ஸார். நெம்பரே தெரியாதபடி பிளேட் மேல சேறு படிஞ்சிருந்தது. அது அம்பாசிடர் டாக்ஸி ஸார்...

"அந்த டாக்ஸி டிரைவரை இதுக்கு முன்னாடி பார்த்திருக்கியா?"

"இல்ல ஸார்..."

ஹில் சில வினாடிகளை யோசிப்பில் கரைத்து விட்டு — மெல்லிய குரலில் கேட்டார்.

"காபரே டான்ஸர் நாட்டியா... இங்கே வந்திருந்தாளா?"

"ஆமா... ஸார்...! இப்பத்தான்... ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் அந்தப் பொண்ணும் வெளியே போச்சு..."

"எந்தப் பக்கமா போனா...?"

"ஷிவாஸ் ரோட்டுப் பக்கமா..."

"டாக்ஸி எந்த வழியா போச்சு...?"

"அதுவும் ஷிவாஸ் ரோட்டுப் பக்கமாத்தான் ஸார்... போச்சு..."

கமிஷனர் ஹில் வேக வேகமாய் ஜீப்புக்கு வந்து — வயர்லெஸ்ஸை உசுப்பினார். "கண்ட்ரோல் ரூம்...! இப்போது நான் சொல்லப் போகிற செய்தியை யுத்தகால அவசரத்தோடு மேற்கொண்டு — இயங்க வேண்டும். அம்பாசிடர் டாக்ஸி. நெம்பர் தெரியாது. நெம்பர் பிளேட் மேல் சேறு படிந்திருக்கும். டாக்ஸியின் உள்ளே டிரைவரையும் சேர்த்து மொத்தம் நான்கு பேர். அதில் ஒரு பெண். பம்பாய் அவுட்டர் செக்போஸ்ட்களுக்குத் தகவல் அனுப்பி அலர்ட்டில் இருக்கச் சொல்லுங்கள். மேற்படி அடையாளங்களோடு எந்த டாக்ஸி வந்தாலும் மடக்கச் சொல்லுங்கள். நகரத்தின் முக்கிய ஸ்கொயர்களில் — போலீஸ் ஜீப்களை நிறுத்தி — அந்த டாக்ஸியைக் கண்காணிக்கச் சொல்லுங்கள். டாக்ஸியைப் பற்றித் தகவல் கிடைத்தால் உடனடியாக — எனக்குத் தகவல் கொடுங்கள்.."

வயர்லெஸ்ஸை அணைத்து விட்டு —

ஹில் ஹோட்டலின் ரிசப்ஷன் கௌண்டரை நோக்கிப் போனார். உயர்த்தி — கொண்டை போட்டு பால்கோவா நிறத்திலிருந்த ரிசப்ஷனிஸ்ட் பெண்ணை நெருங்கினார். தன் ஆரோக்கியமான ஈறுகள் தெரிய சிரித்து — இண்டர்காம் ரிஸீவரில் யாரோடோ பேசிக் கொண்டிருந்த அவள் — கமிஷனரைப் பார்த்ததும் சட்டென்று சிரிப்பை அணைத்தாள். ரிஸீவரைக் கீழே சாத்தியபடி "எஸ்..." என்றாள்.

ஹில் கேட்டார்.

"இந்த பதினைந்து நிமிஷ அவகாசத்தில் யாராவது 'ரூம்' கேட்டு வந்தார்களா...?"

"ஸாரி... கடந்த ஒரு மணி நேரமாய் நியூ கமர்ஸ் யாரும் வரவில்லை."

"டாக்ஸியில் இரண்டு பேர் வந்தார்களே?"

"மே...பி... வந்திருக்கலாம். வெளியே நாங்கள் பொருத்தியிருக்கும் — அறிவிப்பைப் பார்த்து விட்டு அப்படியே போயிருக்கலாம்."

ஹில் திரும்பி நின்று அந்த அறிவிப்பைப் பார்த்தார்.

"SORRY TO SAY 'NO ROOMS'"

ரிசப்ஷனிஸ்ட் தொடர்ந்து பேசினாள். "கடந்த ஒரு மணி நேரமாய் நான் கௌண்டரில் இருக்கிறேன். யாரும் ரூம் கேட்டு வரவில்லை... ஸார்!"

"தேங்க்யூ..."

ஜீப்புக்குத் திரும்பினார் ஹில்.

"டிரைவர்... ஆபீஸுக்குப் போகலாம்."

சரியாய்ப் பதினைந்து நிமிஷம் பயணம். அலுவலகம் வந்து சேர்ந்து கீழ் அதிகாரிகளின் ஏராளமான சல்யூட்களை — கையசைப்பில் வாங்கிக் கொண்டு — அறைக்குள் நுழைந்து — ரிவால்விங் நாற்காலியில் சாய்ந்த போது — மேஜை மேலிருந்த டெலிபோன் தொண்டையைத் திறந்தது.

ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"பாந்த்ரா போலீஸ் ஸ்டேஷன் ஸார்."

"எஸ்..."

"நீங்கள் சொன்ன அந்த டாக்ஸியைக் கண்டுபிடித்து விட்டோம் ஸார்..."

(தொடரும்)

விடை இல்லாத ஒரு கேள்வி

ஏல்லாமே ஓர் அசுர வேகத்தில், சூறாவளி போல் நடந்து முடிந்து விட்டன.

கமலாவைப் பாஸ்கரன் வீட்டில் பெண் கேட்டது — ஜாதகம் பொருந்தியது — பார்த்தவுடன் பெண் பிடித்துப் போனது — இதர விவரங்கள் ஒத்துப் போனது — கல்யாணச் சத்திரம் கிடைத்தது — திருமணமான மறு மாதம் கமலா சூலுற்றது — தங்க விக்கிரகம் போல் ஓர் ஆண் குழந்தை பிறந்து — எட்டாம் மாதம் தளர்நடை நடந்தபடியே அவரைத் தாத்தா என அழைத்தது —

கடைசியாக —

ஒரே வாரம் வந்த மாய ஜுரத்தில் கணவனையும் கைப் பிள்ளையையும் த வி க் க வி ட் டு க் கமலா கண்ணை மூடியது.

அவருக்கு — ராமசாமிக்கு மூத்த பெண் போன துக்கத் தைக் காட்டிலும் அடுத்து நின்ற புவனாவிற்கு வழி கண்டு பிடிப்பதில்தான் கவலை அதிகமாக இருந்தது.

கையிலிருந்த சேமிப்பு மொத்தத்தையும் கமலாவிற்கு எனச் செலவழித்து — அவள் இப்போது பூவும் பொட்டுமா கப் போய்ச் சேர்ந்து விட்டாள்!

புவனா... அப்படியே கமலாவின் பிரதிபலிப்பு — அழகில் ஒரு படி மேலே.

கமலாவின் கல்யாணம் முடிந்து பாஸ்கரன் மறு வீடு வந்த சமயம் அவன் புவனாவை விளையாட்டாகச் சீண்டு வான்.

''நான் ரொம்பவும் துரதிர்ஷ்டம் பிடித்தவன், புவனா!'' என்பான் போலி வருத்தத்துடன்.

''ஏன் அத்தான் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''நான் கமலாவைப் பார்த்துச் சம்மதித்த போது நீ வீட்டில் இல்லை... காலேஜிற்குப் போயிருந்தாய்... நீ மட்டும் வீட்டில் இருந்திருந்தால்...''

''இருந்திருந்தால்...?''

''உன்னையே பெண் கேட்டிருப்பேன்.''

''இப்போது மாத்திரம் என்ன கெட்டுப் போச்சு?'' என்பாள் புவனா.

அன்னம்



போட்டிக் கதை — 15

''ஐயையோ... கமலா கோபிப்பாள்!''

''அதற்கு என்ன செய்வது... எப்படியாவது அக்காவைச் சம்மதிக்க வையுங்கள். நான் ரெடி!'' என்பாள் விளையாட்டாக.

கமலாவைத் தவிர எல்லோரும் இதை விளையாட்டாகத்தான் எடுத்துக் கொண்டார்கள்.

ஆனால் இப்போது ராமசாமி அதை நினைத்துப் பார்த்தார் — அந்த விளையாட்டுப் பேச்சைச் செயலாக்கி விட்டால்...?

பாஸ்கரனுக்கு இன்னும் முப்பது வயது கூட முடியவில்லை. நிச்சயம் வேறு யாரையாவது ஒருநாள் கல்யாணம் செய்து கொள்ளத்தான் போகிறான்! அது இப்போது — புவனாவாகத்தான் இருக்கட்டுமே!

இதற்குச் சாதகமாக எத்தனை எத்தனை



காரணங்கள்!

கல்யாணம் மட்டும் நடத்திக் கொடுத்தால் போதும். அந்தப் 'பாவிக்கு'ச் செய்தது வேறு ஒருத்திக்குப் போகாமல் இருக்கும்.. பாஸ்கரன் நல்ல பையன். புவனாவை நன்றாக வைத்துக் கொள்வான். குழந்தையும் வேறு ஒருத்தி கையில் சிக்கிச் சீரழியாமல் நன்றாக வளரும்.

''புவனாவை ஒரு வார்த்தை...'' என இழுத்தாள் அவள் தாயார்.

இதெல்லாம் போய்க் கேட்டால் ஆயிரம் தடங்கல் வரும். பாழும் கிணற்றிலேயா தள்ளப் போறோம்... நீ பேசாமல் இரு!''

''மாப்பிள்ளை என்ன சொல்கிறாரோ?'' — என சந்தேகப்பட்டாள் அவள் தொடர்ந்து.

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம்... மாப்பிள்ளையைச் சம்மதிக்க வைக்க நானாயிற்று...'' என உறுதியுடன் சொன்னார் ராமசாமி.

அடுத்த மாதம் பாஸ்கரன் வழக்கம் போல் குழந்தையைப் பார்க்க வந்த போது ராமசாமி சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

குழந்தை 'சித்தி... சித்தி' எனப் புவனாவைச் சுற்றிச் சுற்றி வந்ததைப் பாஸ்கரன் கவனித்தான்.

ராமசாமி சொன்னதைக் கவனமாகக் காதில் வாங்கிய பாஸ்கரன் சற்று நேரம் பேசாமலிருந்தான்.

''ஏன் மாமா, புவனாவைக் கேட்டீர்களா, அவளுக்குச் சம்மதமா?''

''நல்லது, பொல்லாதது அவளுக்கு என்ன தெரியும், மாப்பிள்ளை... உங்களை விட நல்ல இடம் அவளுக்கு எங்கே கிடைக்கும்?''

''மாமா... கல்யாணம் என்றாலே எனக்கு ஒரு அச்சம்.. கமலாவை என்ன எதிர்பார்ப்புடன் கல்யாணம் செய்து கொண்டேன் தெரியுமா? என் நேரம்... அவள் இப்படி அல்பாயுஸிலே...''

''உங்க நேரத்துக்கென்ன மாப்பிள்ளை...! நல்ல யோக ஜாதகம். அந்தப் பாவிக்குத் தான் கொடுப்பினை இல்லை...''

''குழந்தையைப் பற்றி நினைக்கும் போது உங்கள் யோசனை எனக்குச் சரியாகத்தான் படுகிறது. மாமா! ஆனால்...''

மாப்பிள்ளை பிடி கொடுத்துப் பேசுகிறார். இப்போதே பிடித்து 'அமுக்கி'ப் போட வேண்டியதுதான்.

''சும்மா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க, மாப்பிள்ளை. அடுத்த மாதம் முதல் முகூர்த்தம்...''

''இருங்க, மாமா... நெருப்புன்னா வாய் வெந்துடாது. ஒரு பேச்சுக்குக் கேட்கிறேன்... ஒருவேளை புவனாவைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு — ஒருநாள் — நான் கமலாவைப் போலவே திடீரென்று...''

''இதெல்லாம் என்ன பேச்சு, மாப்பிள்ளை!''

''யோசிக்க வேண்டியதுதான்.. நான் போய் விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்.. அப்போது புவனாவை என் தம்பிக்கு மறுபடியும் கல்யாணம் செய்து வைப்பீர்களா?''

ராமசாமி ஆடிப் போனார். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது..?

ஒருவாறு சுதாரித்துக் கொண்டு ''சிவ சிவ!'' என்றார் ராமசாமி தம் காதுகளைப் பொத்திக் கொள்ளக் கைகளை எடுத்தவாறு.

''ஏன் மாமா! பெண்டாட்டி செத்தால் குழந்தைக்குப் பாதுகாப்பு வேணும்னு மைத்துனியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். அதே மாதிரி கணவன் போனால் குழந்தையை உத்தேசித்து, மைத்துனனைக் கட்டிக் கொள்வதில் என்ன தப்பு?''

''இதோ பாருங்கள், மாப்பிள்ளை... உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் வேண்டாம். என்னென்னமோ கற்பனை செய்து கொண்டு போகாத ஊருக்கு வழி தேடாதீர்கள்.''

''சரி.. மாமா! போகிற ஊருக்கே வழி தேடுகிறேன்.. என் குழந்தைக்கு ஒரு தாய் தேவை. உங்களுக்கு ஒரு மாப்பிள்ளை வேண்டும். உங்களுக்குச் சீர் செனத்தி செலவு இருக்கக் கூடாது.''

''அப்படி இல்லை, மாப்பிள்ளை!'' என மழுப்பினார் ராமசாமி.

''பொறுங்கள்... சித்தியான புவனா என் பிள்ளையைத் தன் பிள்ளை போல் பார்த்துக் கொள்வாள் என்றால் — என் தம்பி மனோகரன் அப்படிச் செய்ய மாட்டானா..? அவர்கள் இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைத்தால் என்ன?'' — எனக் கேட்டான் பாஸ்கரன்.

ராமசாமிக்கு என்ன பேசுவது என்று தோன்றவில்லை. கரும்பு தின்னக் கூலியா?

''நீங்கள் சொன்னால் சரி...'' என்றார் ராமசாமி.

பாஸ்கரன் சாப்பிட்டு எழுந்த போது கைகழுவச் சொம்பில் நீர் எடுத்துக் கொடுத்தாள் புவனா. துண்டைத் தன் கையில் வாங்கியபடியே,

''என்னம்மா! கல்யாணப் பொண்ணு! திருப்திதானே!'' எனக் கேட்டான்.

புவனா தலைகுனிந்து கொண்டாள். அப்பாவும் அம்மாவும் இந்தச் சம்பந்தம் பற்றி முடிவு எடுத்தது பற்றித் தெரிந்து கொண்ட அவள் — ரகசியமாக ஒரு கடிதம் எழுதிப் போட — அவன் எத்தனை கச்சிதமாகக் காரியத்தைச் சாதித்து விட்டான்!

அப்பா சொன்னது சரிதான். இப்படி ஒரு கணவனுடன் வாழக் கமலா கொடுத்து வைக்கவில்லைதான்!

— ரமா ராமநாதன்.

''ஆயிரம் டானிக்குகள் தராத வலிமையை ஒரு பெண்ணின் காதல் தந்து விடும்.''
— எமர்சன்.





இந்த பெண்மணி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர தகுதியுடையவர்.

இவரை அடையாளம் காண எங்களுக்கு உதவுவீர்களா?

நாங்கள் இந்தப் பெண்மணியைச் சந்திக்க விரும்புகிறோம். மேலும் இவரைப் போன்ற இலட்சக்கணக்கானவர்களையும் சந்திக்க விரும்புகிறோம். ஒரு நெருக்கடியான நேரத்தில் நாங்கள் அளிக்கக்கூடிய சிறிதளவு பாதுகாப்பு பற்றி அவர்களுக்குச் சொல்ல நினைக்கிறோம். இதனைச் செய்ய நீங்கள் எங்களுக்கு உதவ முடியும். ஏனெனில், நீங்கள் இவர்களை அன்றாடம் சந்திக்கிறீர்கள் - உங்கள் பணியாளர், சலவைத் தொழிலாளி, தோட்டக்காரர், பாதை ஓரத்தில் பணிபுரியும் செருப்புத்தைப்பவர். இவர்களைச் சந்திக்கும் போது, தனிநபர் விபத்து சமூகப் பாதுகாப்புத்திட்டம் பற்றி எடுத்துக் கூறுவதன் மூலம், நீங்கள் அவர்களுக்கு ஒரு சிறந்த உதவி புரிந்தவர்கள் ஆவீர்கள்.

பாம்புக்கடி, உயரமான இடத்திலிருந்து கீழே விழுதல், நச்சு உணவு, நீரில் மூழ்குதல் இதுபோன்ற விபத்து, ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நபரின் விலைமதிப்பில்லா உயிரைப் பறிக்கக்கூடும். ஆண்டு வருமானம் ரூ. 7200க்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களில், 18 முதல் 60 வயது வரையுள்ள சம்பாதிக்கும் நபர்களுக்கு இந்த தனிநபர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம் பொருந்தும். இந்த வருமான வரம்புக்கு உட்பட்ட குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர்களில் யாரேனும் ஒருவர், விபத்து காரணமாக இறக்க நேர்ந்தால், அந்தக் குடும்பம் ரூ.3000 நஷ்ட ஈடு பெறத் தகுதி பெறுகிறது. இதற்கு, முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவோ, கட்டணம் செலுத்தவோ தேவையில்லை. இத்திட்டம் பற்றிய விபரங்களை மகிழ்வோடு உங்களுக்கு அளிக்க தென்னிந்தியாவிலுள்ள "யுனைடெட் இந்தியா" வின் அலுவலகங்கள் காத்திருக்கின்றன.

இதற்கிடையில், இத்திட்டம் பற்றி அனைவருக்கும் தெரிவிப்பீர்களா?

இந்திய அரசு

தனி நபர்விபத்து சமூகப்பாதுகாப்புத்திட்டம்

யுனைடெட் இந்தியா
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் ஒரு அங்கம்)
24, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600 014.

இத்திட்டம் பற்றி அனைவர்க்கும் உணர்த்த எங்களுக்கு உதவுவீர்.

Mudra:M:UI:3599 Tam

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 5
பயங்கர நிலவறை

பிலத்துவாரத்துக்குள் நுழைந்த வந்தியத்தேவன் சில படிகள் இறங்கிச் சென்றான். பிறகு சமதரையாக இருந்தது. மிக மிக இலேசாக வெளிச்சம் தெரிந்தது. பத்துப் பதினைந்து அடி சென்றான். ஏதோ வண்டிச் சக்கரம் சுற்றுவது போல் ஒரு சத்தம் கேட்டது. திடீரென்று இருள் வந்து கவிந்து அவனை விழுங்கி விட்டது போலிருந்தது. சட்டென்று அவனை ஐயம் பற்றிக் கொண்டது. சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடக் கூடாது என்று பல முறை தீர்மானித்துக் கொண்டதை எண்ணினான். நாம் புறப்பட்ட காரியம் என்ன? எவ்வளவு முக்கியமானது? அதை விடுத்து இப்போது இந்தப் பாதாளச் சுரங்க வழியில் பிரவேசித்தோமே? இது எங்கே கொண்டு போய்ச் சேர்க்குமோ, என்னமோ! அங்கே என்னென்ன வகை அபாயங்கள் காத்திருக்குமோ? என்ன அறிவீனமான காரியத்தில் இறங்கினோம்? நம்முடைய அவசர புத்தி நம்மை விட்டு எப்போது போகப் போகிறது? இந்த எண்ணங்கள் அவன் கால்களின் வேகத்தைக் குறைத்தன. திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணி, வந்த வழியே திரும்பினான். படிகள் தட்டுப்பட்டன. ஆனால் மேலே துவாரத்தைக் காணவில்லை. தடவித் தடவிப் பார்த்தான்; பயனில்லை. யாரோ மேலிருந்து துவாரத்தை மூடி விட்டிருக்க வேண்டும். வந்தியத்தேவனுக்கு வியர்த்து விருவிருத்து விட்டது. மேலும் பரபரப்புடன், மூடப்பட்ட துவாரத்தைத் திறப்பதற்கு முயன்றான். இதற்குள், எங்கேயோ வெகு வெகு தூரத்தில், யாரோ பேசும் குரல் கேட்பது போலிருந்தது. வேறு வேறு குரல்கள் கேட்டன. ஒருவேளை அவன் எங்கிருந்து பிலத்துவாரத்தில் பிரவேசித்தானோ, அந்த ஐயனார் கோவில் வாசலில் மனிதர்கள் பேசும் குரலாகவும் இருக்கலாம். இடும்பன்காரி யாரையோ எதிர்பார்த்துத்தானே விளக்குப் போட்டான்? அவர்கள் வந்திருக்கலாம். இது உண்மையானால் அவன் அச்சமயம் பிலத்துவாரத்தைத் திறக்க வழி கண்டுபிடித்து வெளி

அமரர் கல்கி

யேறுதல் பெருந்தவறாக முடியலாம். அவர்கள் எத்தனை நேரம் அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்களோ, தெரியாது. இடும்பன்காரியின் கூட்டாளிகளான ரவிதாஸன் முதலிய சதிகாரர்களானால், நெடு நேரம் பேசிக் கொண்டிருக்கக் கூடும். அவர்கள் எதற்காக இங்கே கூடியிருக்கிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? என்ன சதி செய்கிறார்கள்? இதையெல்லாம் அந்த வீர வைஷ்ணவன் கவனித்துக் கொண்டிருப்பான். நாம் இங்கே மூச்சு முட்டும்படி, உடம்பில் வியர்த்துக் கொட்டும்படி, நின்று காத்திருப்பதைக் காட்டிலும், மேலே கொஞ்ச தூரம் போய்ப் பார்ப்பது நல்லது. துணிந்து இறங்கியது இறங்கியாகி விட்டது. இந்தச் சுரங்க வழி எங்கேதான் போகிறது என்பதைக் கண்டுபிடிப்பது மேல் அல்லவா?.....

இவ்வாறு முடிவு கட்டிக்கொண்டு வந்தியத்தேவன் பின் வைத்த காலை மறுபடி முன் வைத்து நடந்து செல்லத் தொடங்கினான். கீழே சமதரையென்றாலும் முண்டும் முரடுமாக இருந்தது. பாறையைக் குடைந்து எடுத்து அந்தப் பாதாள வழியை அமைத்திருக்க வேண்டும். அந்த வழி எங்கே போய்ச் சேரும் என்பது பற்றி அவன் மனத்தில் ஓர் உத்தேசம் தோன்றியிருந்தது. அநேகமாக அது கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குள் போய் முடிய வேண்டும். அந்த மாளிகையில் எங்கே போய் முடிகிறதோ, என்னவோ! ஒரு வேளை பொக்கிஷ அறையில் முடியலாம்; அல்லது அரண்மனைப் பெண்டிர்கள் வாசம் செய்யும் அந்தப்புரத்தில் முடியலாம். அரசர்களும் சிற்றரசர்களும் வசிக்கும் அரண்மனைகளிலிருந்து அத்தகைய சுரங்கப் பாதைகள் இருக்கும் என்பது அவன் அறிந்த விஷயந்தான். ஏதாவது பேரபாயம் நேரும் காலங்களில் அரண்மனையிலிருந்து ஓடித் தப்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தால், அத்தகைய பாதைகளை உபயோகிப்பார்கள். அரண்மனைப் பெண்டிரை அப்புறப்படுத்துவது அவசியமாதலால் அத்தகைய பாதைகள் அந்தப்புரத்தில் சாதாரணமாக முடிவதுண்டு. முக்கியமான பொக்கிஷங்களை எடுத்துக்கொண்டு போவதும் அவசியமாதலால், பொக்கிஷ நிலவறை மூலமாகவும் அந்த வழிகள் போவது வழக்கம். இந்த வழி எங்கே போய் முடிகிறதோ, என்னவோ? இடும்பன்காரி இவ்வழியாக வந்து வெளியேறியிருப்பதால், அநேகமாகப் பொக்கிஷ அறையில்தான் போய் முடியும். பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷங்களை அவர் அறியாமல் இளைய ராணி மூலம் இச்சதிகாரர்கள் சூறையிடுவதுபோல், சம்புவரையரின் பொக்கிஷத்தையும் கொள்ளையிடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் போலும்! ஆதித்த கரிகாலரும் மற்றவர்களும் விருந்தாளிகளாக வரவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் இம்மாதிரிக் காரியத்தில் பிரவேசிப்பதன் காரணம் என்ன? ஒரு வேளை வேறு நோக்கம் ஏதேனும் இருக்க முடியுமா? திருப்புறம்பயம் பள்ளிப்படைக் காட்டில் பார்த்ததும் கேட்டதும் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன. பழுவூர் ராணியிடம் இருந்த மீன் அடையாளம் பொறித்த நீண்ட வாள் அவன் மனக்கண் முன்னே வந்து ஒரு கணம் ஜொலித்தது. வந்தியத்தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. பொக்கிஷத்தைக் கொள்ளையிடுவதைக் காட்டிலும் இன்னும் பயங்கரமான நோக்கம் இவர்கள் வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம். இந்த வழி எங்கே போகிறதென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டால் அவர்களுடைய கொடிய நோக்கம் நிறைவேறாமல் தடுப்பதற்குப் பயன்பட்டாலும் படலாம்.

சுரங்க வழியில் நடக்க ஆரம்பித்துச் சில நிமிஷ நேரந்தான் உண்மையில் ஆயிற்று; ஆனாலும் இருண்ட வழியாயிருந்தபடியால் நெடுநேரமாகத் தோன்றியது. காற்றுப் போக்கு இல்லாதபடியால் மூச்சுத் திணறியது. மேலும் வியர்த்துக் கொட்டியது. ஐயனார் கோவிலி

லிருந்து கடம்பூர் மாளிகை எவ்வளவு தூரம் என்று எண்ணிய போது அவனுக்கு முதலில் மலைப்பாயிருந்தது. ஆனால் மறுபடியும் யோசித்தான். மாளிகையின் முன் வாசலிலிருந்து வளைந்தும் சுற்றியும் சென்ற தெருக்களின் வழியாகவும், பின்னர் காட்டுப் பாதைகளின் வழியாகவும் வந்தபடியால் அவ்வளவு தூரமாகத் தெரிந்தது. அரண்மனையின் பின்பகுதியிலிருந்து நேர் வழியாக வந்தால் ஐயனார் கோவில் அவ்வளவு தூரத்தில் இராது. வில்லிலிருந்து அம்பு விட்டால் போய் விழக் கூடிய தூரந்தான் இருக்கும். அது உண்மையானால், இதற்குள் அரண்மனை வெளி மதிலை அவன் நெருங்கி வந்திருக்க வேண்டுமே?......

ஆம்; அப்படித்தான். மேலே எங்கிருந்தோ திடீரென்று வந்தியத்தேவன் மேல் குளிர்ந்த காற்று குப்பென்று அடித்தது. வியர்த்து விருவிருத்து மூர்ச்சையடையும் நிலைக்கு வந்திருந்த வந்தியத்தேவனுக்கு அந்தக் காற்று புத்துயிர் தந்தது. அண்ணாந்து பார்த்தான். உயரத்தில் வெகு தூரத்தில் சிறிது வெளிச்சம் தெரிந்தது. பேச்சுக் குரல்களும் கேட்டன. மதில் சுவரின் மேல் ஆங்காங்கு வீரர்கள் இருந்து காவல் புரிவதற்காக அமைத்த கொத்தளங்களில் அது ஒன்றாக இருக்க வேண்டும். அதன் வழியாகச் சுரங்கப் பாதையில் காற்றுப் புகுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் காற்றுத்தான் புகலாமே தவிர, மனிதர்கள் கீழே இறங்குவதற்கோ, மேலே ஏறுவதற்கோ அங்கே வசதி ஒன்றுமில்லையென்பதையும் வந்தியத்தேவன் கண்டான்.

கடம்பூர் அரண்மனைக்குள் புகுந்தாகிவிட்டதென்ற எண்ணமும், மேலிருந்து வந்து அவன்மீது அடித்த குளிர்ந்த காற்றும் அவனுக்குப் புத்துயிரை அளித்துப் புதிய உற்சாகத்தை உண்டு பண்ணின. சுரங்கப் பாதை போய்ச் சேரும் இடம் இனி சமீபத்திலேதான் இருக்கும். அது பொக்கிஷ நிலவறையாயிருக்குமா? பெரிய பழுவேட்டரையரைப் போல் சம்புவரையரும் ஏராளமான முத்தும் பவளமும் ரத்தினமும் வைரமும் தங்க நாணயங்களும் சேர்த்து வைத்திருப்பாரா? அங்கே பார்த்தது போல் இங்கேயும் அந்த ஐசுவரியக் குவியல்களுக்கிடையில் செத்த மனிதனின் எலும்புக் கூடு கிடக்குமா? தங்க நாணயங்களின் பேரில் சிலந்தி வலை கட்டியிருக்குமா?

இம்மாதிரி எண்ணிக் கொண்டே போன வந்தியத்தேவன் காலில் ஏதோ தட்டுப்பட்டுத் திடுக்கிட்டான். அப்புறம் அது படிக்கட்டு என்று தெளிந்து தைரியம் அடைந்தான். ஆம்; அந்தப் படிக்கட்டில் ஏறியானதும் பொக்கிஷ நிலவறையைக் காணப் போவது நிச்சயம். இல்லாவிட்டால், பெண்கள் வசிக்கும் அந்தப்புரமாயிருக்கலாம். அப்படியானால், தன்பாடு ஆபத்துத்தான்! ஆ! கந்தமாறன் தங்கை மணிமேகலை! அந்தக் கருநிறத்து அழகி அங்கே இருப்பாள்! ஒருசமயம் அவளை மணந்துகொள்ளும் யோசனை தனக்கு இருந்ததை நினைத்த போது வந்தியத்தேவன் புன்னகை பூத்தான். அந்தப் புன்னகையைப் பார்த்து மகிழ அங்கு யாரும் இல்லைதான்! — ஒரு வேளை அந்தப்புரத்து மாதர் அலங்கோலமாக இருக்கும் சமயத்தில், திடீரென்று அவர்களிடையே தான் தோன்றினால்! — இதை நினைக்க அவனுக்குச் சிரிப்பே வந்துவிட்டது!

சிரித்த மறுகணமே, அவனுடைய உடம்பின் இரத்தம் உறைந்து, இதயத் துடிப்பு நின்று, கண் விழிகள் பிதுங்கும் படியான பயங்கரத் தோற்றத்தை அவன் கண்டான். படிக்கட்டில் ஏறினான் அல்லவா? மேல் படியில் கால் வைத்ததும், இனி ஏறுவதற்குப் படியில்லையென்று உணர்ந்து நாம் எங்கே வந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளச் சுற்றுமுற்றும் பார்த்தான். நூறு நூறு கொள்ளிக் கண்கள் அவனை உற்றுப் பார்த்தன. அந்தக் கண்கள் எல்லாம் பயங்கரமான காட்டு மிருகங்களின் கண்கள்! முதலில் ஏற்பட்ட பீதியில், வந்த வழியே திரும்பிவிட யத்தனித்தான். ஆனால் பின்னால் வழியைக் காணோம். மேற்படியில் அவன் கால்



வைத்ததும் பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. சுரங்க வழி தானாக மூடிக் கொண்டு விட்டது போலும்! ஆனால் இது என்ன: கோர பயங்கரம்? இவ்வளவு காட்டு மிருகங்களும் தனக்காக இங்கே காத்திருக்கின்றனவே! வேங்கைப் புலிகள், சிறுத்தைகள், சிங்கங்கள், கரடிகள், காட்டு எருமைகள், ஓநாய்கள், நரிகள், காண்டா மிருகங்கள்! அதோ, இரண்டு யானைகள்! எல்லாம் தன் மீது பாய்வதற்கல்லவா ஆயத்தமாக இருக்கின்றன? ஏன் இன்னும் பாயவில்லை? — அதோ, எவ்வளவு பிரம்மாண்டமான பருந்து! ஐயோ! அந்த ராட்சத ஆந்தை! ஆள் விழுங்கி வௌவால்! — தான் காண்பது கனவா? அல்லது...... இது என்ன? இங்கே ஒரு முதலை கிடக்கிறதே; வாயைப் பிளந்து கொண்டு கோரமான பற்களைக் காட்டிக் கொண்டு, கிடக்கிறதே? முதலை தண்ணீரில் அல்லவா இருக்கும்? இது வெறுந் தரையல்லவா? காட்டு மிருகங்களுக்கு மத்தியில் இந்த முதலை எப்படி வந்தது?...

"அம்மா பிழைத்தேன்!" என்று வாய் விட்டுக் கூறினான் வந்தியத்தேவன். தன்னைச் சூழ்ந்திருந்த அந்த மிருகங்கள் எல்லாம் உயிர் உள்ள மிருகங்கள் அல்லவென்பதை உணர்ந்தான். சம்புவரையர் குலத்தார் வேட்டைப் பிரியர்கள் என்று கந்தமாறன் கூறியிருந்தது நினைவு வந்தது. அந்த வம்சத்தினர் வேட்டையாடிக் கொன்ற மிருகங்களில் சிலவற்றின் தோலைப் பதன் படுத்தி, உள்ளே பஞ்சும் வைக்கோலும் அடைத்து உயிர் விலங்குகளைப் போல் வைத்திருக்கும் வேட்டை மண்டபம் ஒன்று அந்த மாளிகையில் உண்டு என்று கந்தமாறன் கூறியதும் நினைவு வந்தது. அந்த வேட்டை மண்டபத்துக்குள் இப்போது தான் வந்திருப்பதை





வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். ஆயினும் முதலில் ஏற்பட்ட பீதியினால் உண்டான உடம்பு நடுக்கம் நிற்பதற்குச் சிறிது நேரம் ஆயிற்று.

பின்னர் ஒவ்வொரு மிருகமாக அருகில் சென்று பார்த்தான். தொட்டுப் பார்த்தான். அசைத்துப் பார்த்தான். மிதித்தும் பார்த்தான். அந்த மிருகங்களுக்கு உயிர் இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டான். பின்னர், என்ன செய்வதென்று யோசித்தான். வந்த வழி தானாக மூடிக் கொண்டு விட்டது. அதை மறுபடியும் கண்டுபிடித்துக் கொண்டு வந்த வழியே செல்வதா? அல்லது இந்தப் பயங்கர மண்டபம் கடம்பூர் மாளிகையில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கண்டுபிடிப்பதா? வேறு எந்த அறைக்குள்ளேனும் இங்கிருந்து வழி போகிறதா என்று கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குவதா? சுவர்களில் எங்கேயாவது கதவு இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தான். வெளிப்படையாகத் தெரியும் கதவு ஒன்றும் இல்லை. சுவர்களையெல்லாம் தொட்டுப் பார்த்துக் கொண்டும் தட்டிப் பார்த்துக் கொண்டும் வந்தான். ஒன்றும் பயன்படவில்லை. நேரமாக ஆக வந்தியத்தேவனுக்குக் கோபம் அதிகமாகி வந்தது. இந்த அநாவசியமான காரியத்தில் பிரவேசித்து இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சுவர்களின் ஓரமாகச் சுற்றி வந்து கொண்டிருந்த போது ஓரிடத்தில் ஒரு யானையின் முகம் துதிக்கையுடனும் தந்தங்களுடனும் சுவரோடு சேர்த்துப் பொருத்தப்பட்டிருப்பதைப் பார்த்தான்.

"நாசமாய்ப் போன யானையே! நீ நகர்ந்து கொடுத்தல்லவா என்னை இந்தச் சிறைச்சாலைக்குள் கொண்டு சேர்த்தாய்?" என்று அந்த யானையை நோக்கித் திட்டினான். யானை பேசாதிருந்தது. உயிர் உள்ள யானையே பேசாது. உயிரில்லாத நாரும் உமியும் அடைத்த யானை என்ன செய்யும்? துதிக்கையைக் கூட ஆட்டாமல் சும்மா இருந்தது.

"என்ன நான் கேட்கிறேன், பேசா



மல் இருக்கிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் யானையின் தந்தங்களைப் பிடித்துக் கொண்டு ஒரு திருகு திருகினான்.

அடுத்த வினாடியில் அந்த மாயாஜாலம் நடந்தது.

தந்தத்தைத் திருகியதும் சுவரோடு ஒட்டியிருந்த யானையின் காது அசைந்தது. அசைந்தது மட்டுமல்ல; மடங்கி நகர்ந்து கொடுத்தது. அங்கே சுவரில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது.

அடங்கா வியப்புடன் வந்தியத்தேவன் அந்தத் துவாரத்துக்கு அருகில் முகத்தை நீட்டி எட்டிப் பார்த்தான்.

பார்த்த இடத்தில் ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது. அது ஓர் இளம் பெண்ணின் முகம். அந்த முகத்திலிருந்த பெரிய கண்கள் இரண்டும் விரிந்து விழித்துக் கொண்டிருந்தன. ஆச்சரியம்! ஆச்சரியம்! அந்தப் பெண்ணின் முகத்துக்கு அருகில் வந்தியத்தேவன் தன்னுடைய முகத்தையும் கண்டான். ஒரு பெண்ணுக்கு அவள் காதலன் முத்தம் கொடுக்க யத்தனித்தால் எப்படி முகத்தை அருகில் கொண்டு போவானோ, அந்த நிலையில் வந்தியத்தேவன் தன் முகத்தையும் அந்தப் பெண்ணின் முகத்தையும் பார்த்தான். ஏற்கெனவே அகன்று விழித்துக் கொண்டிருந்த அப்பெண்ணின் கண்கள் இப்போது இன்னும் அகலமாக விரிந்து சொல்ல முடியாத வியப்பைக் காட்டின. வியப்புடன் சிறிது பயமும் அப்பார்வையில் பிரதிபலித்தது. ஒரு கணம் அந்தப் பெண் முகம் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தது. அடுத்த கணம் அவள் தன் செக்கச் சிவந்த இதழ்களைக் குவித்துக் ''கூ!'' என்று சப்தமிட்டாள்.

வந்தியத்தேவனைத் திடீரென்று திகில் பற்றிக் கொண்டது. அந்தத் திகிலில் யானைத் தந்தத்திலிருந்து தன்னுடைய கைகளை எடுத்தான்.

அடுத்த கணத்தில் யானை யானையாகவும், சுவர் சுவராகவும் நின்றது.

துவாரத்தையும் காணோம்; பெண்ணையும் காணோம்.

சில் வண்டின் ரீங்காரம் போல் காதைத் துளைத்த 'கூ' என்ற அந்தப் பெண்ணின் குரலும் கேட்கவில்லை.

வந்தியத்தேவனுடைய நெஞ்சுப் படபடப்பு அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று.

தான் கண்ட தோற்றத்தைப் பற்றி அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அத்தியாயம் 6
மணிமேகலை

சம்புவரையரின் செல்வப் புதல்வியான மணிமேகலை குதூகலம் நிறைந்த பெண். தந்தையும் தாயும் தமையன் கந்தமாறனும் அவளைக் குழந்தைப் பிராயம் முதல் அன்பும் ஆதரவுமாய்ப் பேணி வளர்த்து வந்தார்கள். சம்புவரையரின் அரண்மனையில் அவள் கொடுங்கோல் அரசியாக விளங்கி வந்தாள். அவள் இட்டதே மாளிகைக்குள் சட்டமாக நடந்து வந்தது. சில காலத்துக்கு முன்புவரையில் மணிமேகலையின் வாழ்க்கை ஆட்டமும் பாட்டமும் களியாட்டமுமாகக் கழிந்து வந்தது. நாலைந்து மாதத்துக்கு முன்னால் அவளுடைய வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு தடங்கல் ஏற்பட்டது. அவளது விருப்பத்துக்கு விரோதமான காரியத்தை அவள் செய்ய வேண்டும் என்று வீட்டுப் பெரியவர்கள் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தார்கள்! ''பிடிவாதம் உதவாது'' என்ற பாடத்தை வீட்டுப் பெரியவர்களுக்கு மணிமேகலை எவ்வளவு தான் உபதேசித்தும் பயன் தராது போலிருந்தது.

இரண்டு மூன்று வருஷமாகக் கந்தமாறன் போர்க்களங்களிலிருந்து திரும்பி வீட்டுக்கு வரும்போதெல்லாம்

அவனுடைய சிநேகிதன் வல்லவரையனைப் பற்றி அவளிடம் கூறுவான். அவனுடைய வீரதீர சாமர்த்தியங்களைப் பற்றியும், புத்தி சாதுர்யத்தைப் பற்றியும் வானளாவப் புகழ்வான். அழகில் மன்மதன் என்றும், வீரத்தில் அர்ச்சுனன் என்றும், யுக்தியில் கிருஷ்ண பகவான் என்றும் வியந்து வர்ணிப்பான். "அவன்தான் உனக்குச் சரியான கணவன்; உன் துஷ்டத்தனத்தை அடக்கி உன்னைக் கட்டுக்குள் வைத்திருக்கக் கூடியவன்" என்பான். இதையெல்லாம் அடிக்கடி கேட்க வேண்டுமென்று மணிமேகலைக்கு ஆசையாயிருக்கும். அதே சமயத்தில் வெளிப்படையாகக் கந்தமாறன்மீது அவள் எரிந்து விழுவாள்; அவனுடன் சண்டை பிடிப்பாள்.

"இப்படி வெறுமனே சொல்லிக் கொண்டேயிருக்கிறாயே? ஒருநாள் அழைத்துக் கொண்டுதான் வாயேன்! அவன் சாமர்த்தியத்தைப் பார்த்து விடுகிறேன்" என்பாள்.

"ஆகட்டும்; ஆகட்டும்!" என்று கந்தமாறன் கறுவிக் கொண்டிருப்பான்.

மணிமேகலையும்ஒருவாறு வல்லவரையன் வந்தியத்தேவனைக் கற்பனைக் கண்ணால் கண்டு, மானஸ உலகில் அவனோடு பேசிப் பழகிச் சிரித்து விளையாடிச் சண்டை போட்டுச் சமாதானம் செய்து, — இப்படியெல்லாம் பகற் கனவு காண்பதில் காலம்போக்கி வந்தாள். அவளுடைய அந்தரங்கத் தோழிகளிடம் சில சமயம் தன் தமையனுடைய சிநேகிதனான வாணர்குல வீரனைப் பற்றிப் பேசி மகிழ்ந்தும் வந்தாள்.

இத்தகைய இனிய பகற் கனவுகளுக்கு நாலு மாதங்களுக்கு முன்னால் எதிர்பாராத ஓர் இடையூறு நேர்ந்தது.

கந்தமாறன் வேறு ஸ்வரத்தில் பேச ஆரம்பித்தான். "வீடு வாசலும் பதவியும் அந்தஸ்தும் அற்ற அந்த அநாதைப் பையனை மறந்துவிடு!" என்று கூறலானான். தஞ்சாவூர்ச் சிம்மாசனத்தில் அவளை ஏற்றி வைக்கத் தீர்மானித்திருப்பதாக ஆசை காட்டினான். பின்னர், ஒரு நாள், தெளிவாகவே விஷயத்தைச் சொல்லி விட்டான். ஏற்கெனவே சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்தவனான மதுராந்தகனுக்கு இவளையும் மணம் புரிந்து கொடுக்கப் போவதாகக் கூறினான். மதுராந்தகன்தான் அடுத்த சக்கரவர்த்தியாகப்போகிறான்என்று ஜாடை மாடையாகச் சொன்னான். மதுராந்தகனை மணந்தால் மூன்று உலகங்களுக்கும் மணிமேகலை சக்கரவர்த்தினியாக விளங்குவாள் என்றும், அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையும் ஒருவேளை சாம்ராஜ்யம் ஆளும் பேறு பெறுவான் என்றும் கூறினான். இதற்கெல்லாம் அவளுடைய பெற்றோர்களும் ஒத்துப் பாடினார்கள்.

ஆனால் மணிமேகலைக்கு இந்தப் பேச்சு ஒன்றும் பிடிக்கவில்லை. வந்தியத்தேவனைப் பற்றிக் கேட்டுக் கேட்டு அவள் மனம் அவனிடம் ஈடுபட்டிருந்தது. அது மட்டுமல்ல, மதுராந்தகன் வீரமற்றவன் என்றும், போர்க்களத்தையே பார்த்து அறியாதவன் என்றும், நேற்று வரை உடம்பெல்லாம் விபூதி பூசி ருத்திராட்சம் அணிந்துசாமியார்ஆகப்போவதாகச் சொல்லி வந்தவன் என்றும் அறிந்திருந்தாள். போதாததற்கு ஏற்கெனவே அவனுக்கு ஒரு கல்யாணம் ஆகியிருந்தது. தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களோ மிகவும் கர்வக்காரிகள். தங்களுக்குத்தான் நாகரிகம் தெரியும் என்று எண்ணி மற்ற ஊர்க்காரர்களை அலட்சியம் செய்கிறவர்கள். இதையெல்லாம் எண்ணி மணிமேகலை மிக்க எரிச்சல் கொண்டாள். தஞ்சாவூர்ச் சிம்மாதனம் கிடைப்பதாயிருந்தாலும் சரி, தேவலோகத்துத் தேவேந்திரனுடைய சிம்மாசனமே கிடைப்பதாயிருந்தாலும் சரி, மதுராந்தகனை மணந்து கொள்ள முடியாது என்று அடம் பிடித்தாள்.

அப்புறம் இன்னொரு செய்தி தெரிய வந்தபோது அவளுடைய மன உறுதி வலுவு அடைந்தது. பெரிய பழுவேட்டரையர் கடம்பூருக்கு வந்திருந்த போது பின்னோடு இளைய ராணி நந்தினியும் வந்திருந்ததாகச்



"ஒரு நல்ல தலைவன் தனக்குச் சேர வேண்டிய பழியைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாகவே ஏற்றுக் கொள்கிறான். தனக்குச் சேர வேண்டிய பெருமையைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே பெற்றுக் கொள்கிறான்!"

— வாரியார்.

— கே. ஜி. எஃப். பழனிச்சாமி.

சொன்னார்கள். ஆனால் அவள் அந்தப்புரத்துக்குள்ளேயே வரவேயில்லை. கடம்பூர் அரண்மனைப் பெண்களைப் பார்க்கவும் இல்லை. இது முதலில் வியப்பை அளித்தது. அரண்மனைப் பெண்டிர் அதைப் பற்றிப் பரிகாசமாகவும் நிந்தனையாகவும் பேசிக் கொண்டார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உண்மை தெரிந்தது. மூடு பல்லக்கில் இளையராணி வரவில்லையென்றும் மதுராந்தகன்தான் வந்திருந்தான் என்றும் அறிந்தபோது மணிமேகலையின் அருவருப்பு அதிகமாயிற்று. "சீச்சீ! இப்படிப் பயந்து கொண்டு மூடு பல்லக்கில் பெண் வேஷம் தரித்துக் கொண்டு வருகிறவனையா நான் மணவாளனாக வரிப்பேன்? ஒரு நாளும் இல்லை!" என்று மணிமேகலை உறுதியடைந்தாள்.

மதுராந்தகன் மூடு பல்லக்கில் அரண்மனைக்கு வந்திருந்த அதே சமயம் கந்தமாறனின் சிநேகிதன் வந்தியத்தேவனும் வந்திருந்தான். அவன் அந்தப்புரத்துக்கு வந்து சற்று நேரம் தான் இருந்தான். எங்கிருந்தோ அப்போது மணிமேகலைக்கு அளவில்லாத நாணம் வந்து பற்றிக் கொண்டது. மற்றப் பெண்களின் பின்னாலேயே நின்றாள். வந்தியத்தேவனை நேருக்கு நேர், முகத்துக்கு முகம், நன்றாகப் பார்க்கக் கூடவில்லை. ஆயினும் மற்றவர்களுக்குப் பின்னால் அரைகுறையாகப் பார்த்த அளவிலேயே அவனுடைய களை பொருந்திய புன்னகை ததும்பிய முகம் அவள் உள்ளத்தில் பதிந்து விட்டது. அவனுடைய குரலும் அவன் பேசிய சில வார்த்தைகளும் அவளுடைய ஞாபகத்தில் நிலைத்து விட்டன.

ஆகையால் மறுபடியும் தமையன் கந்தமாறனுடன் மணிமேகலை முடிவில்லா விவாதம் தொடங்கினாள். முக்கண் படைத்த சிவபெருமானே வந்து சொன்னாலும் தான் மதுராந்தகனை ஒருக்காலும் மணக்க முடியாது என்றாள்.

வந்தியத்தேவனைச் சிறிது நேரமே பார்த்திருந்தபோதிலும் அவனிடம் தன் அந்தரங்கம் சென்று விட்டதையும் அவள் குறிப்பாக உணர்த்தினாள்.

கந்தமாறனுக்கு இது அளவில்லாத கோபத்தை உண்டாக்கிற்று. முதலில் நல்ல வார்த்தையாகச் சொல்லிப் பார்த்தான். பயன்படவில்லை. பின்னர், "வந்தியத்தேவன் என் சிநேகிதன் அல்ல; என் பரம விரோதி; என்னைப் பின்னாலிருந்து முதுகில் குத்திக் கொல்லப் பார்த்தவன்; அவனை நீ மணந்து கொள்வதாயிருந்தால் உன்னையும் அவனையும் சேர்த்துக் கொன்றுவிடுவேன்!" என்றான். முதுகில் ஏற்பட்டிருந்த கத்திக் காயத்தைக் காட்டினான். பழுவூர் இளையராணியின் பரிவான சிகிச்சையினால் தான் உயிர் பிழைத்து எழுந்ததையும் கூறினான்.

"என் பேரில் உனக்கு எள்ளத்தனை விசுவாசமாவது இருந்தால், வந்தியத்தேவனை மறந்துவிடு!" என்றான்.

இதைக் கேட்ட பிறகு மணிமேகலையின் மனம் உண்மையில் மாறி விட்டது. கந்தமாறனிடம் அவள் மிக்க பிரியம் வைத்திருந்தாள். அவனைக் கொல்ல முயன்ற பகைவனைத் தான் மணந்து கொள்வது இயலாத காரியந்தான். ஆகையால் வந்தியத்தேவனை மறக்க முயன்றாள். ஆயினும் இலேசில் முடிகிற காரியமாயில்லை. அடிக்கடி, எதிர்பாராத சமயங்களில், அவனுடைய புன்னகை ததும்பிய முகம் அவள் மனக்கண்ணின் முன்பு வந்து கொண்டிருந்தது. பகற் கனவுகளிலும் வந்தது; இராத்

திரியில் கண்ட கனவுகளிலும் வந்தது.

இதனாலெல்லாம் சில மாத காலமாக மணிமேகலை அவளுக்கே இயற்கையான குதூகலத்தை இழந்திருந்தாள். சோகமும் சோர்வும் அவளைப் பீடித்தன. கல்யாணப் பருவம் வந்துவிட்டதுதான் இதற்குக் காரணம் என்று முதியோர் நினைத்தார்கள். பிராயமொத்த தோழிகள் அவளை அதுகுறித்துப் பரிகாசம்செய்தார்கள். வேடிக்கை விளையாட்டுக்கள் மூலம் அவளை உற்சாகப்படுத்தத் தோழிமார்கள் முயன்றார்கள். அது ஒன்றும் பலிக்கவில்லை.

மறுபடியும் சென்ற சில நாட்களாக மணிமேகலை சிறிது உற்சாகம் கொள்ளத் தொடங்கியிருந்தாள். மதுராந்தகனுக்கு அவளை மணம் செய்து கொடுக்கும் எண்ணத்தை அவள் பெற்றோர்களும் தமையன் கந்தமாறனும் கைவிட்டதை அறிந்ததில் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. சக்கரவர்த்தியின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலருக்கு மணிமேகலையைக் கொடுப்பது பற்றி அவர்கள் ஜாடை மாடையாகப் பேசியது அவள் காதில் விழுந்தது.

ஆதித்த கரிகாலரின் வீர தீர பராக்கிரமங்களைப் பற்றி அறியாதவர்கள் ஆண்களிலோ, பெண்களிலோ, தமிழகத்தில் யாரும் இல்லை. அவர் ஏதோ காரணத்தினால் மணம் புரிந்து கொள்ள மறுத்து வருகிறார் என்பதையும் அறிந்திருந்தார்கள். அப்படிப்பட்டவரை மணந்து கொள்வது என்றால், அது கனவிலும் கருத முடியாத பாக்கியம் அல்லவா? இந்தப் பரந்த பரதக் கண்டம் முழுவதிலும் எத்தனை ராஜகுலப் பெண்கள் அந்தப் பேறு பெறுவதற்காகத் தவம் கிடக்கிறார்கள்? இதையெல்லாம் எண்ணி மணிமேகலை ஒருவாறு உற்சாகம் கொண்டாள்.

காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலரும் தஞ்சாவூரிலிருந்து பெரிய பழுவேட்டரையரும் கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளிகளாக வரப் போகும் செய்தி அவளுக்கு மீண்டும் பழைய மாதிரி குதூகலத்தை அளித்தது. இந்தத் தடவை பழுவேட்டரையர் தம் இளைய ராணியையும் அழைத்து வருகிறார். நந்தினி தேவி தன் தமையன் உயிரைக் காப்பாற்றியவள். அவளுடைய அழகையும் குணத்தையும் அறிவாற்றலையும் பற்றி மணிமேகலை கந்தமாறனிடமிருந்து ரொம்பவும் கேள்விப்பட்டிருந்தாள். இந்தப் புதிய கல்யாணப் பேச்சுக்குக் காரணமானவளே பழுவூர் இளையராணிதான் என்றும் கந்தமாறன் சொல்லியிருந்தான். அவள் கடம்பூர் அரண்மனையில் இருக்கும் போது அவளைத் தக்கபடி உபசரிப்பதில் மணிமேகலை முன்னால் நிற்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். மணிமேகலையின் உள்ளமும் அதற்குத் தக்க பரிபக்குவம் அடைந்திருந்தது. பழுவூர் ராணியிடம் நல்லபடியாகச் சிநேகம் செய்துகொண்டு, அவளுடைய பழக்கத்தினால் தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களை நாகரிகத்தில் தோற்கடிக்கக் கூடியவளாகத் தான் ஆகிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஆதலின் ஒரு வார காலமாக மணிமேகலை ஒரே உற்சாகத்தில் மூழ்கியிருந்ததுடன், பரபரப்புடன் அரண்மனையில் அங்குமிங்கும் ஓடி, விருந்தாளிகளுக்கு வேண்டிய வசதிகளை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டிருந்தாள். முக்கியமாக, பழுவூர் இளைய ராணிக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அரண்மனைப் பகுதியில் சகல வசதிகளும் ஏற்படுத்தி வைப்பதில் அவள் கவனம் செலுத்தினாள். தமையன் வேறு சொல்லியிருந்தான் அல்லவா? ஆகையால் அரண்மனைப் பணியாளர்களை வறுத்து எடுத்து விட்டாள். அவளுடைய தோழிகளையும் வதைத்து விட்டாள். பழுவூர் ராணி தங்கப் போகும் அறையில் ஒவ்வொரு பொருளையும் முப்பது தடவை பெயர்த்துஎடுத்து வெவ்வேறு இடத்தில் வைக்கும்படி வற்புறுத்தினாள்.

இளவரசர் ஆதித்த கரிகாலர் தம்முடைய சிநேகிதர்களுடன் தங்கப் போகும் அறைகளையும் அடிக்கடி போய்ப் பார்த்து வந்தாள். யாரோ பார்த்திபேந்திரன் என்பவன் அவரு

டன் வரப் போகிறானாம். அவன் எப்படிப் பட்டவனோ, என்னமோ? — இந்தக் காலத்தில் யார் எவ்விதம் மாறுவார்கள் என்று யார் கண்டது? தன் தமையனுடைய சிநேகிதனாய் இருந்த வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலரின் பரிவாரத்தைச் சேர்ந்தவன் தான்! அவன் மட்டும் இத்தகைய சிநேகத்துரோகியாகமாறாதிருந்தால், இப்போது அவனும் வந்து கலந்து கொள்வான் அல்லவா?

ஆம்; எவ்வளவுதான் மணிமேகலை வேறு பரபரப்பான காரியங்களில் ஈடு பட்டிருந்தாலும், அந்தச் சிநேகத்துரோகியை அடியோடு மறக்க முடியவில்லை!

பழுவூர் ராணி அன்று இரவே அநேகமாக வந்துவிடுவாள் என்று சொன்னார்கள். ஆகையால் கடைசி கடைசியாக நந்தினியின் அறை அலங்காரத்தை மணிமேகலை மேற்பார்வை செய்து கொண்டிருந்தாள். அப்போது பழுவூர் ராணிக்காகச் சுவர் ஓரமாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரில் வந்தாள். தன்னுடைய முகத்தை அதில் பார்த்துக் கொண்டாள். சிறிது நேரம் நின்று நிதானமாகவே பார்த்தாள். அப்படியொன்றும் தன் முகம் அழகில் குறைந்ததல்ல என்று தனக்குத் தானே முடிவு செய்து திருப்தி அடைந்தாள். கண்ணாடியை விட்டுப் போக எண்ணியபோது, அதில் இன்னொரு முகம் தெரிந்தது. அது தன் முகத்தின் வெகு அருகில் வந்து கன்னத்தோடு கன்னம் ஒட்டும் நிலைக்கு வந்து விட்டது. அவள் கனவில் அடிக்கடி தோன்றித் தொல்லை செய்து கொண்டிருந்த வாணர்குல வீரனின் முகந்தான் அது. அவளை அறியாமல் அவளுடைய வாய் குவிந்து 'கூகூ!' என்று சத்தமிட்டது.

அடுத்த கணம் கண்ணாடியில் அவள் முகம் மட்டுந்தான் தெரிந்தது. மற்றொரு முகம் மறைந்து விட்டது.

(தொடரும்)



அருள்வாக்கு

சிக்கனமாயிருந்தாலொழிய, இப்போது இருக்கிற போக போக்ய இழுப்பில், எவனுக்குமே மிச்சம் பிடிக்க முடியாது. அதனால் சிக்கன வாழ்க்கை நடத்தினால்தான் 'தனக்கு மிஞ்சி' தர்மம் பண்ண முடியும். அதாவது எத்தனை சிக்கனமாயிருக்க முடியுமோ, அப்படியிருந்து தனக்கு மிஞ்சும்படியாகப் பண்ணிக் கொண்டு தர்மம் பண்ணணும்.

கீதை முதல் ஸ்லோகத்தில் வருகிற தர்ம க்ஷேத்ரம் என்பது இந்த சரீரம்தான். ஒரு வயல் என்றால் அதில் விளைச்சல் பண்ணுவதற்கு பூஸாரம் வேண்டும். அப்புறம் ஒவ்வொரு தானியத்துக்குரிய பருவ காலம் பார்க்க வேண்டும். க்ஷேத்ரம் என்றால் வயல். நம்முடைய சரீர வயலுக்கு எது பூஸாரம்? புத்தி பிரஸன்னமாயிருப்பது இந்திரியங்கள் பழுதாகாமல் சுத்தமாயிருப்பது (விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ளும் ஞானேந்திரியங்கள், கார்யங்கள் பண்ணும் கர்மேந்திரியங்கள் இரண்டும் தீக்ஷ்ண்யமாயிருப்பது) தான் பூஸாரம். ஓடியாடவும் தளர்ச்சியில்லாமல் ஆலோசிக்கவும் சக்தி இருப்பதுதான் பருவ காலம். இதையெல்லாம் பொறுத்து இந்த சரீர வயலில் தர்மப் பயிரை வளர்த்து, தர்ம க்ஷேத்ரமாக்க வேண்டும். அந்தப் பயிரை வளரவொட்டாமல் ஹானி செய்கிற களைதான் தனக்காக அவசியத்துக்கு மீறிச் செலவழிப்பது. வயல் நிறையக் களை மண்டியிருப்பதைப் பார்த்து நன்றாக விளைந்திருப்பதாக ஸந்தோஷப் படுவது போலத்தான், தனக்காகச் செலவழித்து அதில் ஏற்படும் ஸௌகர்யங்களைப் பார்த்து ஸந்தோஷிப்பது. களை பிடுங்குவதில் எத்தனை கவனமாயிருக்கிறோமோ அத்தனை கவனமாக அத்யாவசியத்துக்கு மேலான செலவுகளைப் பிடுங்கிப் போட வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



உபாத்தியாயர்: நீயெல்லாம் எதுக்குடா படிக்க வர்றே?


மாணவன்: கிராமத்தில் ஒழுங்காக மாடு மேய்க்கவில்லை. நீ படிக்கத்தான்டா லாயக்குன்னு சொல்லி ஸ்கூலுக்கு அனுப்பிட்டாங்க ஸார்!

— மோகன்.

ஒருவர்: என்னது, நீங்க ஆட்சியைக் கைப்பற்றியதும் சட்டசபையில் ஒரு கட்டில் செய்து போடுவீங்களா, ஏன்? எதுக்கு?

அரசியல்வாதி: தலைவரை அரசுக் கட்டிலில் அமர்த்துவோம்னு சவால் விட்டிருக்கோமே!

— எஸ். முகம்மது யூசுப்.





"நான் மேடையில் பேச ஆரம்பித்ததும் பலத்த கைதட்டல்!"

"அப்படி என்ன பேசினீங்க?"

"கூட்டத்தில் கலந்து கொண்ட ஆட்களுக்குப் பேசிய தொகையை விடத் தலைக்கு ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கப் போவதாகச் சொன்னேன்!"

— ஞா. ஞானமுத்து.

நிருபர்: அந்த நடிகரை நீங்க விவாகரத்து செய்துட்டதா அறிக்கை விட்டிருக்கீங்களே, எப்போ உங்க 'மேரேஜ்' நடந்தது?

நடிகை: நாங்க மேரேஜ் பண்ணிக்கலைன்னு சொன்னா யாரும் நம்பாததாலதான் இந்த ஏற்பாடு...!


— சீர்காழி ஸ்ரீராம்




சீடன்: எல்லோரையும் ஏன் குருவே கடவுள் பணக்காரர்களாகப் படைக்கலே?

குரு: எல்லோருக்கும் எதுக்கு இன்கம் டாக்ஸ் கழுத்தறுப்புன்னு அவர் நினைச்சிருக்கலாம்!

— உ. ராஜாஜி.





"அவர் ரோஷக்காரர்னு எப்படிச் சொல்றீங்க...?"

"புதுசா கைமாத்தா அம்பது ரூபா கொடுக்க, வக்கில்லே; பழைய கைமாத்துப் பணத்தைத் திருப்பிக் கேட்க வந்துட்டீங்களேன்னு சொன்னேன். உடனே பணத்தைக் கொடுத்துட்டுப் போறார்!"

— பிரபாகரன்.

"தலைவர் பேசற அதே மேடையில், நானும் பேசணும்னு ரொம்ப ஆசையா இருக்குண்ணே...!"

"செய்துட்டாப் போச்சு! விடிஞ்சதும் வாங்க. மேடை ஃப்ரீயாத்தானிருக்கும்!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.





தலை வழுக்கையாக இருப்பதிலும் ஒரு நன்மை இருக்கு? என்ன நன்மை?

நேற்று ஸ்கூட்டரில் ஹெல்மெட் போடாமல் போகும் போது தலை வழுக்கையா அல்லது ஹெல்மெட்டான்னு டிராபிக்கான்ஸ்டபிள் குழம்பிக் கொண்டிருக்கும் போதே நழுவிட்டேன்!"

— எஸ். பிரியதர்சினி.



துப்பறியும்
சூர்யா — கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
பாறை இடுக்குகளில் ஒளிந்து அச்சத்துடன் பார்த்தாள் கிரண்.
ஹெலிகாப்டரிலிருந்து இறங்கிய மனிதர்களைக் — கண்டு திகைத்தாள்.
நமது பிரதம மந்திரி, உள்துறை அமைச்சர், மற்றும் முப்படைத் தளபதிகள்!
ஹெலிகாப்டர் பைலட்டும் கல்தானும் கடைசியாக இறங்கினர்.
நான் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் சரியாகப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா?
ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் இந்தியாவைச் சென்றடைவீர்கள். உங்களை டெல்லிக்கு அழைத்துப் போக எனது ஆட்கள் காத்திருப்பார்கள்.
பிரமுகர்களின் அந்தரங்கப் பணியாட்களை ஏற்கெனவே மாற்றி விட்டோம். அவர்கள் உருவில் இன்று நமது ஆசாமிகள்தான் இருக்கிறார்கள்.
அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். நீங்கள் எந்தத் தலைவராக உருமாறியிருக்கிறீர்களோ, அவரிடத்தை எளிதாக ஆக்கிரமிக்கலாம்!
(தொடரும்)


மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு!
யுநு
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
மஃபத்லால்
– நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM

நேசல் மிதக்கும் நிலா 19

"நோ... நோ... இவர் சந்துரு... என்னோட கஸின் பிரதர்... சந்துரு... இவங்க என் ஆஃபீஸ்ல வேலை செய்யறவங்க..."

"ஹலோ... ஹலோ" என்றார்கள் கோரஸாய். அவர்கள் கண்களில் இன்னும் அந்தக் குறும்பு.

"போகலாமா சந்துரு... எக்ஸ்க்யூஸ் மீ... நான் கௌம்பட்டுமா?" என்று பொதுவாய் அவர்களைப் பார்த்துக் கெஞ்சும் பாவனையில் கேட்டாள் மதுமதி.

"ஒரு கூல்ட்ரிங்க் சாப்பிடுவோமே மேடம்... உங்க கஸினோட?"

– 'கஸினோட' வார்த்தையில் ஓர் அழுத்தம் சேர்ந்திருந்தது.

"தாங்க்ஸ். பட், இப்ப வேணாம். 'இன்னொரு நாளைக்கு" என்று வெகு அவசரமாய்க் கத்திரித்துக் கொண்டு வெளியில் வந்தாள் மதுமதி. பின்னால் திரும்பிப் பார்க்க லேசாய் பயமாய் இருந்தது. அத்தனை கண்களிலும் குத்தூசிகள்.

"மது..." என்றான் சந்துரு.

"ம்."

"ஏன் மது, உம்முன்னு வர்றே?"

"இப்பப் பார்த்தோமே நாலைஞ்சு பேர். எனக்குக் கீழே வேலை செய்யறவங்க. சும்மா உதட்டளவில் ஒரு மரியாதை. ஆனா உள்ளே பூரா எளக்காரம். அவங்களை



விட நான் சின்னவ. அவங்களுக்கு மேல் இருக்கிறதை அவங்களால் தாங்க முடியலை... அதான் ஒன்னையும் என்னையும் கனெக்ட் பண்ணிப் பார்க்கிறாங்க. நாளைக்கு ஆபீஸ் பூரா மைக் வைக்காதது ஒண்ணுதான் கொறையா இருக்கும்."

"அவங்கவங்க கண்ல விஷம் இருந்தா அது அவுங்களைத்தான் பாதிக்கும். நமக்கு என்ன ஆய்டும்?"

"எல்லார் பார்வையிலயும் விஷம் பரவிட்டா நாம எவ்வளவுதான் ஒழுங்கா இருந்தாலும் நாம ஒழுக்கங்கெட்டவங்கதான் சந்துரு."

"சரி... அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?"


"உனக்கும் மீராவுக்கும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணிடணும் சந்துரு."

"சரி... பண்ணிடலாம்."

"உங்க வீட்ல இதைப் பத்திப் பேச வேண்டாமா சந்துரு?"

"பெருந்தன்மையா நடந்துக்கிட்டு, நம்மளைப் புரிஞ்சிக்கிறவங்களா இருந்தா போய்ப் பேசறதும் சொல்றதும் அவசியம்தான். எங்க வீட்ல என்னவோ நான் சாக்கடைக்குள்ள விழுந்துட்டா மாதிரில்ல பார்க்கிறாங்க. எனக்கு நீங்கதான் முக்கியம் மது. என்னைப் புரிஞ்சுக்கிட்டு உங்கள்ல ஒருத்தனா சேர்த்துக்கிட்ட சந்தோஷம் தான் முக்கியம் மது. நடக்கப் போறது என் கல்யாணம். வாழப் போறது நான். இதுக்கு யார்கிட்டேயும் போய்ப் பேசணும்கிற அவசியம் இல்லை."

மதுமதிக்குச் சந்திரமௌலி இல்லாதது கைகழன்று போன மாதிரி இருந்தது.



கூப்பிட்ட குரலுக்கு வந்து நிற்பான். முகத்தில் எப்போதும் 'தயார்' 'தயார்' என்னும் பாவம் இருக்கும். அவனும் இல்லாமல், மீரா'வும் இல்லாமல் வீடு வெறிச்சோடி இருந்தது.

அம்மாவுக்கு இவளைவிடச் சின்னவள் 'தேன் நிலவு' என்று புறப்பட்டுப் போய் விட்டாள். இவள் என்னடாவென்றால் 'கல்யாணமே வேண்டாம்' என்கிறாளே என்னும் ஆதங்கமோ என்னவோ, சரிவரப் பேசுவது கூட இல்லை. சமையலறை. சாமியறை. டி. வி.

மீராவும், சந்துருவும் இன்றைக்கு எங்கே இருப்பார்கள்?

திட்டப்படி முதல் நாள் சிதம்பரம். அடுத்த நாள் திருச்சி. மறுநாளைக்கு மறுநாள் கொடைக்கானல். அங்கு மூன்று நாள். அப்படியானால் இன்றைக்குக் கொடைக்கானலில்தான் இருக்க வேண்டும். இன்னும் திருச்செந்தூர், கன்யாகுமரி, ராமேஸ்வரம், குற்றாலம், திருவனந்தபுரம், குருவாயூர், ஊட்டி, மைசூர், பெங்களூர் — அடேயப்பா. திரும்பி வரும் போது கையோடு ஒரு குழந்தையைக் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

''மே ஐ கம் இன்?''

மதுமதி நிமிர்ந்து பார்த்தாள்.

மித்ரா!

''டிஸ்டர்ப் பண்றேனா?''

''நோ... நோ... வாங்க மிஸ்டர் மித்ரா. அம்மா!''

ரோகிணி தலையை நீட்டிப் பார்த்தாள். மித்ரா அவளைப் பார்த்துப் பெரிதாய்ப் புன்னகை செய்து கை கூப்பினான்.

மித்ரா சோஃபாவில் உட்கார்ந்தான்.

''மிஸ் மதுமதி சொல்லியிருப்பாங்களே. நான் கல்யாணத்தப்போ ஊர்ல இல்லே... மேரேஜ் அட்டெண்ட் பண்ண முடியலே... பட் எப்படியும் மிஸ்டர் சந்துருவையும், மிஸஸ் சந்துருவையும் கங்கிராஜுலேட் பண்ணிட்டுப் போலாம்னு வந்தேன். எங்கே காணும்?''

''அவங்க கல்யாணத்தப்போ நீங்க ஊர்ல இல்லை... இப்ப நீங்க வந்திருக்கீங்க. பட், அவங்க ஊர்ல இல்லே...'' என்றாள் மதுமதி லேசாய்ச் சிரித்துக் கொண்டே.

''ஓ வாட் எ ஃபூல் ஐ ஆம்.. ஹனிமூன் ட்ரிப்பா... அது எனக்குத் தோணவே யில்லை...'' என்று எழுந்தான். ''இதோ வந்துட்டேன்'' என்று வெளியில் போய், காரிலிருந்து பெரிதாய் ஒரு பார்சலைக் கொண்டு வந்தான். நீட்டினான்.

''கல்யாணப் பரிசு! சினிமா வந்ததில்ல அந்தப் பேர்ல...?'' என்றான்.

ரோகிணி அதை வாங்கி வைத்து விட்டுச் சமையலறைக்குள் போனாள்.

மித்ரா உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு வலப் பக்கத்தில் இருந்த டீப்பாயின் மீது நடனமாடும் மாது பொம்மை இருந்தது. ஒற்றை விரலால் லேசாய் அதன் தலையில் தட்டினான்.

காதலி: எப்பங்க நாம் பதிவுத் திருமணம் செய்துக்கிறது?

காதலன்: இந்த ஊர் சப்—ரிஜிஸ்திராரான எங்கப்பா டிரான்ஸ்பர் ஆகிப் போய் வேறே ஒருத்தர் வந்ததும்!

— உ. ராஜாஜி.

''ஸோ மிஸ் மதுமதி, ஒன் ப்ராப்ளம் ஈஸ் ஓவர்.''

'ஆம்' என்னும் பாவனையில் தலையை அசைத்தாள் மதுமதி.

''அடுத்தது இந்த வீட்ல இன்னொருத்தர் தான் 'மிஸஸ்' ஆகணும்.''

மதுமதி மௌனம் சாதித்தாள்.

''என்ன பேச மாட்டேங்கறீங்க?''

''உங்ககிட்ட ஏற்கெனவே என் பாக்ரவுண்டு பத்திச் சொல்லிட்டேன், மிஸ்டர் மித்ரா.''

''அஃப்கோர்ஸ் ஐ நோ அபவுட் யுவர் சிவா.''

''தெரிஞ்சுமா இப்படிக் கேக்கறீங்க?''

''இதில என்ன இருக்கு மிஸ் மதுமதி? சிவா ஈஸ் நோ மோர் நௌ. நீங்க எப்படியும் அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்ல... இன்னொரு கல்யாணம் பண்ணிக்கறதில் என்ன தப்பு?''

''நான் அவரை எவ்வளவு டீப்பா லவ் பண்றேன்னு உங்களுக்குத் தெரியாது மிஸ்டர் மித்ரா.''

''அதனால கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையா?''

மதுமதி தலையை இடதும் வலதுமாய் ஆட்டினாள்.

''பாட்—லக்'' என்றான் மித்ரா. தலையை லேசாகக் குனிந்து கொண்டான். பான்ட் பாக்கெட்டில் கையை விட்டுக் கர்ச்சீஃபை எடுத்து முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் மௌன சாமியாராய் உட்கார்ந்திருந்தான். ரோகிணி கொண்டு வந்ததை வாங்கி 'மடக், மடக்' என்று சரித்துக் கொண்டு எழுந்தான்.

''நான் வரேம்மா'' என்றான்.

''சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லேன் மது'' என்றாள் ரோகிணி.

''பரவாலேம்மா... உங்க பெரிய டாட்டர் கல்யாணச் சாப்பாடுதான் சாப்பிடணும்னு எனக்கு ரொம்ப ஆசை'' என்றான்.

ரோகிணி சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு உள்ளே போனாள். ஷூ மாட்டிக் கொள்கிற நேரத்தில் மித்ரா நிமிர்ந்தான்.

''அப்படி உங்களுக்கு ஒருவேளை கல்யாணம் பண்ணிக்கலாங்கற ஐடியா வந்ததுன்னா...'' என்று தயங்கினான்.

''வந்ததுன்னா...?''

''என்னுடைய அப்ளிகேஷனை முதல்ல



கன்ஸிடர் பண்ணுங்க'' என்றான்.

மதுமதி வாய் திறந்து பேசுமுன் அவசரமாய் வெளியேறினான். அவனுடைய கார் ஒரு கமறலுடன் நகர்ந்தது.

செட்டுக்கு வெளியே ஹெரால்டின் இத்தாலிய ஹாரன் கேட்டது.

''ஆ... நம்ம புனிதா வந்தாச்சு'' என்றான் ஸ்ரீநாத். ''கம்—கம்'' என்று பிருத்விராஜின் கையைப் பிடித்து இழுத்தான்.

வாசலில் ஹெரால்டின் சின்ன சதுரத்திலிருந்து முகத்தை வெளியே நீட்டி, புனிதா உற்சாகமாகக் கையசைத்தாள்.

ஸ்ரீநாத்தும் பிருத்விராஜும் ஏறிக் கொண்டதும் கார் கிளம்பியது.

''என்ன ரைட்டர் சார் பேசாமயே வரீங்க.. ஓர்க் டைட்டா? நம்ம கடியில ஏதாவது ஒரு கடியை எடுத்து விடவா?''

''பிருத்வி கதையில மூழ்கி இருக்கான் புனிதா...'' என்றான் ஸ்ரீநாத்.

''ஆமா. கிட்டத்தட்ட முடியற ஸ்டேஜ்...''

''இன்னுங் கொஞ்சம் பெப் வேணும் பிருத்வி. மதுமதி லவ் பண்ணா. சிவராமன் இறந்துட்டான். அதுக்கப்புறம் சந்திரமௌலி அவங்க ஃபாமிலியில நொழைஞ்சி மீராவைக் கல்யாணம் பண்ணிக்கறான். மித்ரா மதுமதியைக் கல்யாணம் பண்ணிக்கப் பர்மிஷன் கேக்கறான். மதுமதி கொடுக்கப் போறதில்ல. சரி, அப்புறம் என்ன ஆகுது. மதுமதி என்ன செய்யறா?''

''ஷில்பா என்ன செய்யறான்னா...''

''ஷில்பா இல்ல மதுமதி...''

''ஐ'ம் ஸாரி...'' என்றான் பிருத்விராஜ். ''நீ கதையில பெப் இல்லேன்னு சொன்னது என்னைக் கொஞ்சம் கலக்கிருச்சி. யோசிக்கறேன்.''

''நல்லா யோசி. சினிமாங்கறது கதை மாதிரி இல்ல. கதையில உன் இஷ்டத்துக்கு என்ன வேணும்னாலும் எழுதலாம். படிக்கறவங்க ஒத்துப்பாங்க. சினிமா அப்படி இல்ல. பணம் கொட்டிப் பணம் எடுக்கிற மீடியம். ஜனங்க டேஸ்டையும் மனசில வச்சிகிட்டுத்தான் படம் பண்ணணும். க்ளைமாக்ஸ் சடார்னு மூஞ்சில அடிச்சா மாதிரி இருக்கணும்... 'ச்சே க்ளைமாக்ஸ்ல கொன்னுட்டான்யா'ன்னு படத்தை விட்டு வெளியில வர்றவன் மூக்கில வெரலை வக்கணும்... நான் வெறும் காமிராமேன். நீதான் ரைட்டர். நீதான் யோசிக்கணும். யோசி...''

வீடு வந்து சேரும் வரை யாரும் பேசிக் கொள்ளவில்லை.

சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான் பிருத்விராஜ்.

மதுமதி அவன் மனத்தில் புகுந்து குடைந்து கொண்டிருந்தாள். ஏதாவது புதிதாகச் சொல்லியாக வேண்டும். என்ன சொல்லலாம்? என்ன சொல்லலாம்?

கதவு தட்டப்படும் சத்தம் மெலிதாகக் கேட்டது. எழுந்தான். திறந்தான்.

புனிதா நின்றிருந்தாள். கதவு திறக்கப் பட்டதும் சுவாதீனமாக உள்ளே நுழைந்தாள்.

''என்ன புனிதா?'' என்றான் பிருத்விராஜ் லேசாக அதிர்ந்து போய்.

''நீங்க பாலே குடிக்கலையே. அதான் கொண்டு வந்தேன்'' என்றாள். அப்போதுதான் புனிதாவின் கையிலிருந்த டம்ளரைக் கவனித்தான் அவன்.

''மேஜை மேல வச்சிட்டுப் போ.''

''போகப் போறதில்ல....''

''அப்படின்னா?''

''உங்ககூட கொஞ்சம் பேசப் போறேன்.''

''காலைல பேசிக்குவோமே.''

''ம்ஹூஹூம், இப்பத்தான்.''

''அண்ணனைக் கூப்புடேன். மூணு பேரும் ஒண்ணாவே பேசலாம்.''

''இல்ல. அண்ணனைக் கூப்புடப் போறதில்ல. இது என் விஷயம். நான்தான் பேசியாகணும்.''

''புரியல புனிதா.''

''என்னால அண்ணனுக்கு ரொம்ப கஷ்டம் பிருத்வி.''

''எதனால?''

''அவரால எனக்குச் சாப்பாடு போட முடியுது. ட்ரெஸ் வாங்கித் தர முடியுது. எல்லாம் சரி. ஆனா எனக்குன்னு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர முடியலையேன்னு ஃபீல் பண்றாரு...''

''எந்த அண்ணனுக்கும் இருக்கறதுதானே புனிதா?''

''பாலைக் குடிங்க. ஆறிடப் போவுது''

''நீ சொல்ல வந்ததைச் சொல்லு...''

''அண்ணன் மனசில என்ன இருக்குன்னு எனக்கு ஓரளவு தெரிஞ்சு போச்சி.''

''ம்'' என்றான் பிருத்விராஜ்.

''அது ஒண்ணும் தப்பாத் தோணலை. என்னைப் பொறுத்த வரைக்கும்.''

''ம்...''

''நானும் இத்தனை நாளா பார்த்துப் பழகினதுக்கப்புறம்தான் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்னு முடிவெடுத்தேன்.''

''ம்...''

''நீங்க என்ன சொல்லுவீங்கன்னுதான் தெரியலை...''


''புனிதா?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்குவீங்களா பிருத்வி?''

(தொடரும்)

10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலே.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளேக்கு அவனுக்கு கிரிக்கெட்
மேட்ச் வேறு இருக்கிறது.

"அம்மா, இந்த கொசுத்தொல்லேக்கு ஏதாவது செய்யேன்!"





BANISH

மாலே, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளே யாட்டிலும் சாம்பியனுக இருப்பது அவ்வளவு எளிதல்ல.

ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங் கள்.

அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களே விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.

அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக



சூடாவதற்குஉறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லேகள், எந்த வில்லேகளேயும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லேயே இருக்காது.



HTA 7003

மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.

பாலம்

சி.பன்னீர்செல்வம்

"ஏப்ப தாத்தா அம்மாகிட்டே என்னைக் கூட்டிக்கிட்டுப் போறே?'

''வெள்ளம் வடிஞ்சதும் கூட்டிக்கிட்டுப் போறேம்மா கண்ணு.''

''வெள்ளம் எப்ப நிக்கும்?''

''மழை நின்னதும்.''

''மழை?''

— இந்தக் கேள்விகளுக்கு முடிவே இராது. மழை நின்று, வெள்ளம் வடிந்து, ஆற்றைக் கடந்துபோய் அம்மாவைப் பார்ப்பது ஒன்றுதான் இதற்குப் பதில்.

இத்தனைக்கும் காரணமாய் ஊரைப் பிரிக்கும் அந்தக் காட்டாறு. மூன்று நாட்களாய்க் கரைகளை மீறிக் கொண்டு இரவு பகலாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆற்றைக் கடந்துபோக வேறு வழி இல்லை.

''அப்ப இந்த மழை நிக்கவே நிக்காதா தாத்தா?''



"எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்திலே நின்னுடும்மா."

மூன்று நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வெள்ளம் குறையத் தொடங்கியிருந்தது. வானத்தில் மேகங்களின் அடர்த்தி குறைந்து, கருமை நிறம் தளரத் தொடங்கியிருந்தது. மேற்கே, அடி வானத்தைத் தொட்டாற் போல் வெளிவாங்கத் தொடங்கியதற்கான அடையாளம் தெரிந்தது.

மழைக்காக மாதக் கணக்கில் ஏங்கித் தவமிருந்தவர்கள்கூட 'இந்தப் பாழும் மழை எப்பத்தான் நிக்குமோ?' என்று சலிப்படைந்து போய்விட்டார்கள். வெளியே கடைகண்ணிக்குப் போய் வர, வைத்தியம் பார்த்துக் கொள்ள என்று எதுவும் முடியாமல் எத்தனையெத்தனை சிரமங்கள்!

"எனக்கு இப்பவே அம்மாளைப் பார்க்கணும் தாத்தா, என்னை உன்னோட தோளிலே தூக்கிக்கிட்டு ஆத்தைக் கடந்து போறியா தாத்தா! நீதான் பாட்டியவே தோளிலே தூக்கிக்கிட்டுப் போனியாமே! நெசமா தாத்தா?"

நாராயணன் கண்களை மூடிக் கொண்டார். "நெசந்தான் கண்ணு" என்றார்.

"பாட்டி குண்டா இருந்துச்சே — நீ எப்படி தாத்தா தூக்கினே? பாரமா இல்லையா தாத்தா?"

"நான் அவளைத் தூக்கின காலத்திலே அவள் கொடி போல, எத்தனை அழகா இருந்தா, தெரியுமா" என்று பெருமூச்சு விட்டார் நாராயணன்.

"சொல்லு தாத்தா" என்றாள் குழந்தை.

ஒரு நாளில் சொல்லி முடிகிற கதைகளா அவை? எத்தனை வெள்ளங்கள் இந்தக் காட்டாற்றிலே வந்து போய் விட்டன! எத்தனை மனிதர்கள் இதனுள் காணாமல் போயிருக்கிறார்கள்!

நாற்பது வருஷங்களுக்கு முன் என்று ஞாபகம்.

இந்தக் காட்டாற்றின் கரை முழுதும் காடுகள் மண்டிக் கிடக்கும். எத்தனை வகை மரங்கள்! இன்று மாதிரியா அன்று இந்த ஆற்றங் கரைகள், கருவேல மரங்களுக்குக் கூடத் துப்பின்றிக் கிடந்தன? ராட்சச மரங்கள்! நாலு பேர் கைகள் கோத்து நின்றாலும் அடங்காமல் வானத்தைக் கிழிப்பது போல நிமிர்ந்த மரங்கள். கொடிய கோடை காலத்திலும் இருளும் குளிரும் ஒளிந்திருக்கும் காடுகள்!

அது ஒரு மாலைப் பொழுது. ஐந்தாறு பேர்களாய்ச் சந்தைக்குப் போய் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார்கள். மேற்கே பளிச் பளிச் என்று மின்னல் கண்களைப் பறிக்க, இடி முழக்கம் பயங்கரமாய் இடைவிடாது ஒலிக்க ஆரம்பித்திருந்தது. வானைக் கவ்வியிருந்த கருமேகக் கூட்டம் பூமியில் இருளைப் பரப்பியிருந்தது.

வேகமாய் நடக்கத் தொடங்கினார்கள். ஆனாலும் ஒவ்வொருவர் மனசிலும் ஆற்றில் வெள்ளம் வந்து விடுமோ என்ற பயம்.

"என்ன மாமா, இன்னைக்கு நல்லபடியா ஊரு போய்ச் சேர்ந்திருவமா? ஆத்திலே வெள்ளம் வந்திராதே."

"ஆத்திலே வெள்ளம் வருமா வராதான்னு மாமா என்ன கனவா கண்டாக? அப்படியே வெள்ளம் வந்திட்டாலும் மாமா நம்ப எல்லாரையும் அள்ளி நீஞ்சிக்கிட்டுக் கொண்டு போய்க் கரை சேத்திர மாட்டாகளா?"

"இந்த பூமியில அவகளுக்குத் தெரியாத கொளமா—ஆறா—கேணியா?" என்று தலைக்குத் தலை பேசிக் கொண்டார்கள்.

ஆனால், தொலைவில் வருகையிலேயே ஆற்றில் நீர் தெரிந்தது. பெண்கள் பதறிப் போனார்கள். ஆற்றின் கரையில் சில பேர் தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டார்கள்.

"இப்படி உக்காந்தோம்னா ஒரு வாரம் ஆனாலும் ஊரு போய்ச் சேர மாட்டோம். இப்பத்தான் தண்ணி வர ஆரம்பிச்சிருக்கு. வேகமா ஆத்தைக் கடந்திரலாம்" என்றாள் கண்ணம்மா.

"ஆமாடீ, நீ சொல்வே — எளவட்டக் கொமரி! ஆத்திலே போனா எங்க புள்ளை குட்டிகளுக்குக் கஞ்சி ஊத்துறது யாரு?"

"எல்லாம் மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்."

"இந்தா — வளவளன்னு பேசாம ஒருத்தர் கையை ஒருத்தர் புடிச்சிக்கிட்டு ஆத்திலே எறங்குங்க" என்று முதலில் இறங்கினான் நாராயணன்.

"நான் கடைசியா வர்றேன்" என்று எல்லோருக்கும் கடைசியில் நின்று கொண்டாள் கண்ணம்மா.


உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஆற்றில் இறங்கினார்கள். பாதி தூரம் கடப்பதற்குள் தண்ணீர் அதிகமாக வர ஆரம்பித்து விட்டது.

"முன்னெல்லாம் பெண்ணைத் திருமணம் செய்ய நகை கேட்பார்கள்..."

"இப்போ...?"

"'ஜுவல்லரி மார்ட்' கேட்கிறார்கள்!"

— எஸ். பிரியதர்சினி.



நிஜமான நடிப்பு!

சார்லி சாப்ளினைப் போல வேடம் புனைந்து நடித்துக் காட்ட வேண்டும் என்ற ஒரு போட்டியில் சார்லி சாப்ளினே ஓசைப்படாமல் கலந்து கொண்டார். அவருக்கு மூன்றாவது பரிசு கிடைத்தது!

— தேஜ்.



''ஐயோ, இன்னைக்கி எல்லாரும் ஆத்தோடதான் போகப் போறோம்'' என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டாள் ஒரு பெண்.

''நான் அப்பவே சொன்னேனே — கேட்டியளா? எளவட்டங்க பேச்சைக் கேட்டுக்கிட்டுப் புத்திகெட்டுப் போயி நாமளும் எறங்கினமே'' என்று புலம்பினாள் இன்னொருத்தி.

அப்படியும் இப்படியுமாய்க் கரை சேரும் தருணம், தண்ணீரில் சீற்றம் தெரிந்தது. நாராயணன் வெகு துரிதமாகச் செயல்பட்டான். தன் முழு பலத்தையும் பிரயோகித்து, அவர்களை இழுத்துக் கரையில் எறிந்தான். கடைசியாக நின்று எல்லோரையும் வேகப்படுத்தித் தள்ளிக் கொண்டிருந்த கண்ணம்மாவை வெள்ளம் வாரிக் கொண்டு விட்டது.

''அடி, கண்ணம்மா'' என்ற மற்ற பெண்களின் கதறல் ஆற்றின் இரைச்சலையும் மீறிக் கொண்டு ஒலித்தது.

மறுகணம் வெள்ளத்தில் பாய்ந்த நாராயணன், அரைமணி நேரம் கழித்து, ஒரு மைல் தொலைவுக்கு அப்பால், கண்ணம்மாவைத் தோளில் சுமந்து கரையேறினான். அவளைக் கரையில் கிடத்தி முதலுதவிகள் செய்து அவள் எழுந்ததும் நாராயணனின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

அதன் பிறகு நாராயணனைச் சந்திக்கும் போதெல்லாம் கண்ணம்மாவின் இதயத்திலும் முகத்திலும் விவரிக்க முடியாத சந்தோஷம் கரைபுரளும். கண்ணம்மாவைப் பார்க்கையில் நாராயணனுக்கு அம்மன் கோயில் விக்கிரகமே ஞாபகத்துக்கு வரும். அப்படி அழகு!

கண்ணம்மா குறும்பாக வானத்தைப் பார்ப்பாள்.

''ஆகாசத்திலே என்ன தேடுறே, கண்ணம்மா?''

''மழை எப்ப வரும்னு பாக்கிறேன்!''

''மழையவா?''

''ஆமா! மழை வந்தாத்தானே ஆத்திலே வெள்ளம் வரும்? வெள்ளம் வந்தாத்தானே நீங்க என்னெத் தொட்டுத் தூக்கி, கரை சேப்பிய?''

''ஒனக்கு ரொம்பத்தான் ஆசை!''

''இல்லே! எனக்கு ஒரே ஒரு ஆசை தான்!''

''என்ன?''

''நீங்க என் கழுத்திலே ஒரு மஞ்சக் கயித்தைக் கட்டணும். நான் உங்க மனைவியா, உங்க மடியில் உயிர் விடணும்.''

''அது அத்தனை சுளுவான காரியம் இல்லே கண்ணம்மா.''

''நீங்க மனசு வச்சீங்கன்னா அது முடியும். இந்த ஊருலே ஒங்களுக்கு வேண்டாதவுக யாரு? நீங்க ஒதவி செய்யாதவுக தான் யாரு? சாதி சனம், கொலம் கோத்திரம் பாத்தா நீங்க எல்லாருக்கும் ஒதவி செய்தீங்க? பாலம் இல்லாத இந்த ஊருக்கு நீங்க ஒரு பாலம் மாதிரி.''

ஆனால் அது அத்தனை சுலபமாய் இல்லை.

பொருள் கொடுக்கல் வாங்கல் செய்கிற மாதிரி, ஆபத்து வேளைகளில் உதவிக் கொள்கிற மாதிரி, அத்தனை சுலபமாய் இல்லை.

இந்த வெறும் காட்டாற்றுக்கு இரண்டே கரைகள் மட்டும்தான். ஆனால் சமூகம் என்கிற காட்டாற்றுக்கு எத்தனை கரைகள்! இந்தக் கரைகள் என்கிற வரம்பைக் கடப்பதற்குள் எத்தனை வெள்ளங்கள்!

அத்தனையையும் கடந்து இவர்கள் வாழ்க்கையில் இணைவதற்குள் எத்தனை வெள்ளங்கள் இந்தக் காட்டாற்றில் வந்து போய் விட்டன! எத்தனை வெள்ளங்கள் இவர்களையே அடித்துக் கொண்டு போய் விட முயன்றன!

அதற்கடுத்து ஐந்தாறு வருடங்கள் கழித்துத்தான் அந்த ஆற்றில் அப்படி ஒரு வெள்ளம் வந்தது. ஒரு வாரம் வரையிலும் ஊரே நகர முடியாமல், தத்தளித்தது. அந்த ஊரையே முற்றுகையிட்டுக் கொண்டு மழையும் ஆற்று வெள்ளமும் சாடின. வெள்ளம் தணிந்துவிட்டதென்று உணவுப் பொருட்கள் கொண்டு வருவதற்காக ஆற்றில் இறங்கிய இரண்டு மாட்டு வண்டிகளும் ஐந்து மனிதர்களும் ஆற்றுக்குப் பலியாகிப் போனார்கள். அன்று ஊரே கூடி நாராயணன் தலைமையில், அந்த ஆற்றில் ஒரு பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்தது.

அதன் பிறகு எத்தனையோ மழை வெள்ளங்கள் வந்து போயின. அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் வந்து போயினர்.

அடுத்த இதழ்......

கலைவிழாச் சிறப்பிதழ்

- இளைஞர்கள் நாடும் இசை நூலகம்
- நாட்டிய உலகின் நம்பிக்கை நட்சத்திரங்கள்

  — வண்ண அணிவகுப்பு
- 'அலங்காரம்'

  — மாலனின் சிறப்புச் சிறுகதை
- நாடகக் கலையின் எதிர்காலம் என்ன...?



— சங்கீத நாடக அகாடமி தலைவர் கிரீஷ் கர்னாட் பேட்டி

- விருது பெறும் கலைஞர்கள்
- இந்த வருட ஸ்பெஷல்......

எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், மந்திரிகள் வந்து போயினர். கடைசியாய், அந்த ஊர் மக்கள் ஓட்டுப் போடாமல் தேர்தலைப் புறக்கணித்த பிறகு, ஒரு மந்திரி வந்து பாலத்துக்கு அடிக்கல் நாட்டி விட்டுப் போனார்...

அப்புறம் பத்து வருஷங்கள் கழித்து அந்த ஆற்றில் ஒரு பாலம் கட்டப்பட்டு, அதைத் திறந்து வைக்க ஒரு மந்திரி கிடைக்காமல் ஒரு வருடம் வரை திறக்கப்படாமலே கிடந்தது. அதன் பிறகு ஒரு பத்து வருஷ காலம் அந்த ஊர் பெருமை தாளாமல் வாழ்ந்தது. ஒரு பஸ் ஊரெல்லாம் அதிரும் படியாக ஒலியெழுப்பிக் கொண்டு வந்து போனது. ஜனங்கள் உற்சாகத்தோடு தினமும் பஸ்ஸில் வெளியூர் சென்று மாலை வேளைகளில் திரும்பி வந்தார்கள்.

ஆற்றின் கரைகளிலிருந்த மரங்கள் படிப் படியாகப் பகலில் பாதியும் இரவில் பாதியுமாகக் காணாமல் போயின. தன்னில் காலடிகள் பதித்துக் கடந்து செல்ல மனிதர்கள் இன்றி, கர்வம் அடங்கினாற் போல மழையும் வெள்ளமும் குறைந்து போய், வெறும் மணல் வடிவத்தில் வருடத்தின் பெரும் பகுதி கிடந்தது காட்டாறு....

அப்புறம் பத்து வருடங்களுக்கு முன்னால் வட்டியும் முதலுமாய்ச் சேர்த்து வைத்து அடித்த புயல் மழையில் அந்த பாலம் இடிந்து போய் விட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும், மிச்சமிருந்த பாலத்தின் ஒவ்வொரு பாகமாக ஆற்றோடு போய், இன்று பாலம் என்ற ஒன்று இருந்ததற்கான அடையாளமே இல்லாமல் போய், அந்த ஊர் மீண்டும் பாலம் இல்லாத ஊராகி விட்டது...

"அப்ப நம்ப ஊருக்கு இனிமே பாலம் வரவே வராதா தாத்தா?" என்று கேட்டாள் குழந்தை.

"வரும்மா."

"எப்ப?"

"அதுதான் தெரியலே!"

"அப்ப என்னையத் தூக்கிட்டுப் போ. நான் அம்மாவைப் பாக்கணும்."

நாராயணன் மேற்கே நோக்கினார். வானம் வெளிவாங்கத் தொடங்கியிருந்தது. பேத்தியைத் தூக்கிக் கொண்டு ஆற்றை நோக்கி வந்தார். காலையில் இருந்ததை விடவும் நீர் வெகுவாகக் குறைந்திருந்தது. ஆற்றைக் கடப்பதற்காக இன்னும் சில பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். இவரைக் கண்டதும் தெம்பு கொண்டார்கள்.


"ஆத்திலே எறங்கலாமா?"

"ம்" என்றார் நாராயணன். பேத்தியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு ஆற்று நீரில் கால் வைத்தார். அவருக்குக் கண்ணம்மாவின் நினைவு வந்தது. ஒரு துக்கம் கலந்த பெருமிதத்தோடு நடக்க ஆரம்பித்தார்.

அன்று கண்ணம்மாவை அனாயாசமாகத் தூக்க முடிந்தவரால் இன்று கண்ணம்மாவின் பேத்தியைத்தான் சுமக்க முடிந்தது. அதுவும் மூச்சிரைக்க.

எல்லாவற்றையும் விட மேலான பலம் ஆன்ம பலம்









- அறிவுக்கு தெய்வம் விநாயகர்
- ஆற்றலுக்குத் தெய்வம் சுப்ரமணியர்
- வித்தைக்குத் தெய்வம் வாணி
- செல்வத்துக்கு தெய்வம் லக்ஷ்மி.



இவர்களுககு எல்லாம் தெய்வமாக இருப்பவர் பரம்பொருள் அல்லது மஹாவிஷ்ணு.

செல்வமும் அறிவும், ஆற்றலும் நமக்குப் பலத்தைத் தருகின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலான பலம் ஆன்ம பலம் ஆகும். எனவே ஆன்ம பலத்தைத்தரும் மஹாவிஷ்ணு ஈஸ்வரருக்கும் ஈஸ்வரராக இருக்கின்றார்.

தர்மச்சக்கரம்

ஆன்ம பலம் பெற்ற நல்லோருக்கு கிராண்ட் ஸ்வீட் வாங்கி விநியோகியுங்கள்.


கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு, காந்தி நகர்.
அடையாறு, சென்னை-600 020. போன்: 412557

லஞ்ச அரக்கனை வீழ்த்த முடியுமா?

மத்திய புலனாய்வுத் துறையின் (சி. பி. ஐ.) முன்னாள் டைரக்டர் சி. வி. நரசிம்மன். இவரைச் சந்தித்து லஞ்ச அரக்கனை விழ்த்த முடியுமா? என்ற பிரச்னையை முன் வைத்துச் சிந்தனையைத் தூண்டுகிறவர்கள் மாலன் (எழுத்தாளர்) அனுராதா வாசுதேவ் (டைரக்டர், கன்ஸ்யூமர் ஆக்ஷன் குருப்), சுவாமிநாதன் (சார்டட் அக்கவுண்டெண்ட்).



சி. வி. நரசிம்மன்



சுவாமிநாதன்

அனுராதா வாசுதேவ்: சில மாதங்களுக்கு முன்பு நான் வசிக்கும் காலனியில் மாநகராட்சி கழிவுநீர்க் குழாய்கள் போடும் பணியைச் செய்தது. இதற்கென அதிகார பூர்வமாய் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கும் கூடுதலாய் ஒரு கணிசமான தொகையை ஊழியர்கள் கேட்ட போது, நாங்கள் தர மறுத்தோம். மேலிடத்தில் புகார் செய்வோம் என்றும் கூறினோம். இதற்கு ஊழியர்கள் அளித்த பதில் எங்களை அதிர்ச்சியடைய வைத்தது. 'நீங்கள் யாரிடம் போய்ச் சொன்னாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. எங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் உட்பட, பல மட்டங்களிலுள்ளவர்களுக்கும் நாங்கள் வாங்கும் பணத்தில் பங்கு உண்டு' என்றார்கள்... லஞ்சம் இந்த அளவுக்கு வேரூன்றிப்போயிருப்பது ஏன்?

சி. வி. நரசிம்மன்: லஞ்ச ஊழல் நமது வாழ்க்கை அமைப்பில் படிப்படியாகப் புக நாம் அனுமதித்து விட்டோம். ஏதோ சில ஆண்டுகளில் வளர்ந்த புற்று நோய் அல்ல இது.

மாலன்: லஞ்சம் படிப்படியாக அதிகரித்து இப்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது! இந்தியாவைப் பொறுத்த வரை, லஞ்சம் — ஊழலுக்கு முக்கியமான காரணம் இங்கேயுள்ள தேர்தல் முறைதான். ஓர் அரசியல்வாதி தனிப்பட்ட முறையில் தூய்மையாய் இருந்தாலும் கூட, தமது அரசியல் கட்சிக்காகப் பணம் சேர்க்க வேண்டியுள்ளது. இதுதான் லஞ்சத்துக்கு வழிகோலுகிறது.

நரசிம்மன்: உண்மைதான். அரசியல் தலைமை நேர்மையாக நடந்து கொள்ளா விட்டால் அரசு ஊழியர்களுக்கும் நேர்மையைப் புறக்கணிக்கும் துணிச்சல் பிறக்கிறது. அவர்களைத் தட்டிக் கேட்க முடியாமல் போகிறது. சுதந்திரம் பெற்றவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பண்டிட்ஜி போன்ற தலைவர்கள் அரசியலில் தூய்மையைக் கடைப்பிடித்தனர். அடுத்த காலகட்டத்தில் ஆட்சிக்கு வந்தவர்கள், தனிப்பட்ட முறையில் அல்லாமல், தேர்தலுக்காக நிதி சேர்க்க ஆரம்பிக்க, லஞ்சத்தின் பரிமாணம் அதிகரித்தது. மூன்றாவது கால கட்டத்தில் நிலைமை மேலும் மோசமாகி, தேர்தலில் வெற்றி பெறுவதே முடிந்த வரையில் பணம் சம்பாதிக்கத்தான் என்று ஆகி விட்டது. தேர்தலில் செலவிடும் தொகையை, ஆட்சியைப் பிடிக்க ஒரு முதலீடாய் நினைக்கிறார்கள். அரசியல், ஒரு வியாபாரம் ஆகி விட்டது.

மாலன்: தேர்தலில் வோட்டுப் போடுபவர், தமது வோட்டுக்காகப் பணம் பெறுவதை உரிமையாய் நினைக்கிற அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது!

நரசிம்மன்: எனவே தேர்தல் சீர்திருத்தங்கள் மூலம் லஞ்ச ஊழலைப் பெருமளவுக்குக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்ப இடமுண்டு. மாநில சட்டசபை உறுப்பினர்கள் வோட்டுப் போட்டு, மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது போல, சட்டசபைக்கும், பாராளுமன்றத்துக்கும்; உறுப்பினர்களை மக்களே வோட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கும் தற்போதைய முறையினை மாற்றி அமைக்கலாம். முதல் கட்டத்தில் சுமார் இரண்டாயிரம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் மக்களே தேர்ந்தெடுக்க, அந்தப் பிரதிநிதிகள் மூலம் அடுத்த கட்டப் பிரதிநிதிகளும், அவர்கள் மூலமாய் சட்டசபை பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பது குறித்து யோசிக்கலாம். பல்வேறு நிபுணர்களும் சிந்தித்து, ஆராய்ந்து, ஜனநாயக அடிப்படையிலேயே தேர்தல் முறைகளில் மாற்றங்கள் கொண்டு வரலாம்.



அனுராதா வாசுதேவ்


சுவாமிநாதன்: அதன் மூலம் லஞ்சத்தை அடியோடு ஒழித்து விட முடியுமா? அரசியல் கட்சிகள் எல்லாம், லஞ்ச ஊழலற்ற ஆட்சி அமைப்பதாய் வாக்குறுதிகள் தருகின்றனவே. அது உண்மையில் சாத்தியமானதா?

நரசிம்மன்: லஞ்சத்தை அடியோடு ஒழிப்பது என்பது முடியவே முடியாத காரியம். மக்களை ஏமாற்றவே அப்படியொரு வாக்குறுதியைத் தருகிறார்கள். அரசியல் அமைப்பின் பல்வேறு மட்டங்களிலும் கட்சிச் சார்பற்ற கண்காணிப்பும் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக அமுல் செய்யப்பட்டால், லஞ்சத்தை முற்றிலுமாய் ஒழிக்க முடியா விட்டாலும், பெருமளவு குறைக்க முடியும். ஆனால் அதற்கு ஆட்சியாளர்களிடம் நேர்மையும் நெஞ்சுறுதியும் தேவை. அது நம் தலைவர்கள் எத்தனை பேருக்கு, ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும் இருக்கும் என்பதுதான் கேள்விக்குறி!

மாலன்: சமீபத்தில் ரயிலில் என்னுடன் பிரயாணம் செய்த ஒரு குடும்பத்தினருக்கு 'பர்த்' கிடைக்கவில்லை. டிக்கெட் பரிசோதகரிடம் பேசிப் பார்த்து விட்டு, தோல்வியுடன் வந்த மகனிடம் அப்பா கேட்கிறார்: "அஞ்சோ, பத்தோ டி.டி.ஈ.யிடம் கொடுத்து முயன்று பார்த்திருக்க வேண்டியதுதானே!"



மாலன்



* உரையாடலின் போது......

ஆமாம்! அப்பாவே, மகனுக்கு 'லஞ்சம் கொடு' என்று அறிவுரை கூறுகிற நிலைமை இன்று.

அனுராதா: லஞ்சம் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது, அதை வாழ்வின் ஓர் அங்கமாக ஏற்றுக் கொண்டு போக வேண்டியதுதான் என்கிற மனப்பான்மை மக்களிடையே வளர்ந்து விட்டதால் மக்களே லஞ்சத்தை வளர்க்கிறார்கள்!

நரசிம்மன்: ரயிலில் 'சீட்' தருவதற்கு டிக்கெட் பரிசோதகர் பணம் கேட்கும் போது, அவர் மீது புகார் தரலாம். ஆனால் பயண அவசரத்தில் இருக்கிற பயணி, பணம் கொடுத்து, காரியத்தை முடிக்கத்தான் பார்க்கிறாரேயொழிய, புகார் கொடுப்பதில்லை. அதே போலத்தான் அரசு அலுவலகத்தில் கோப்பு இவர்கள் அவசரத்துக்கு ஏற்ப நகர வேண்டுமெனில், லஞ்சம் கொடுத்து, முடுக்கி விடுகிறார்கள். ''ஸ்பீட் மணி'' என்று வர்ணிக்கிறார்கள். வருமான வரி, கமர்ஷியல் டாக்ஸ் எல்லா துறைகளிலும் இதே கதைதான்.

சுவாமி: லஞ்சம் தர மறுத்து, லஞ்சப் புகார் கொடுத்தால், காரியமும் நடப்பதில்லை; புகார் கொடுத்தவரும் பழிவாங்கப்படுகிறாரே!

நரசிம்மன்: நீங்கள் சொல்வது சரி! ஒவ்வொரு துறையினரும் 'மாமூல்' என்பதைத் தனக்கு உரிமையுள்ள அதிகப்படி வருவாய் என்று நினைக்கிறார்கள். உதாரணமாய், கமர்ஷியல் டாக்ஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மீது ஒரு கடைக்காரர் லஞ்சப் புகார் கொடுத்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்... அந்தக் கடைக்காரரை அந்த இலாகாவில் உள்ள அனைவருமே பொது எதிரியாய் நினைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அவரைப் பழிவாங்குகிறார்கள். புகார் கொடுத்தவருக்கு இப்போதுள்ள சட்டப்படி முழுப் பாதுகாப்பு கிடையாது. இதனை மாற்றியமைக்க வேண்டும். லஞ்சம் தர வேண்டிய அவசியமில்லை. லஞ்சம் கேட்பவர் பற்றிப் புகார் கொடுக்கலாம்; அப்படி புகார் கொடுத்தால் பின்விளைவுகள் ஒன்றும் ஏற்படாது என்ற முழு நம்பிக்கையை மக்களிடையே அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

சுவாமி: லஞ்ச ஒழிப்பிற்குத்தான் பல சட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றனவே. அவற்றைக் கடுமையாகச் செயல்படுத்தினால் போதாதா?

நரசிம்மன்: சட்டங்கள் இருந்து என்ன பயன்? அவற்றில் ஓட்டைகளும் நிறைய இருக்கின்றனவே! தவறு செய்கிறவர்களில் பலர் பிடிபடுவதேயில்லை. மாட்டிக் கொள்ளும் ஒரு சிலரும் சட்டத்தின் ஓட்டைகள் மூலமாய்த் தப்பி விடுவதால், மிக மிகச் சொற்பமான பேர்தானே தண்டனை பெறுகிறார்கள்?

மாலன்: தற்போது மாநில அளவில் லஞ்ச ஒழிப்புத் துறையும், மத்திய அரசு அளவில் சி.பி.ஐ.யும் இருக்கின்றனவே! இருந்தும் லஞ்சத்தை ஒழிக்க முடியவில்லையே! இவை ஆளுங் கட்சியினரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பச் செயல்படும் அரசுத் துறைகளாகத்தானே இயங்கி வருகின்றன? தேவையான போது வேண்டாதவர்களைப் பழிவாங்கப் பயன்படும் கருவிகளாகத்தானே இவை உபயோகிக்கப்படுகின்றன?

நரசிம்மன்: ஒவ்வொரு அரசுத் துறையிலுமே, லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதைத் தவிர, லஞ்ச ஒழிப்புத் துறை, சி.பி.ஐ. ஆகியவற்றை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும். அரசாங்கத்தின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து, ரிப்போர்ட் கொடுக்க ஆடிட்டர் ஜெனரல் இருப்பது போல் லஞ்ச ஒழிப்புத் துறை, சி.பி.ஐ. ஆகியவை சுதந்திரமாக இயங்கும்படி செய்யலாம். அப்போது, ஆட்சியில் உள்ளவர்கள், தம் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப, இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல், இவ்வமைப்புகளும் தைரியமாகச் செயல்பட முடியும்.

அனுராதா: சமீப காலமாகப் பரபரப்பாய்ப் பேசப்பட்டு வரும் சென்னை நட்சத்திர ஓட்டல் விவகாரத்தில் ஏகப்பட்ட அத்துமீறல்கள் நடந்துள்ளன. சுமார் முந்நூறு கிர

வுண்டு அரசு நிலம் தனியாருக்கு அடிமட்ட விலையில் விற்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை குறித்து எந்த தஸ்தாவேஜையும் பார்வையிட, எந்தக் குடிமகனுக்கும் பூரண உரிமை உண்டு. இந்த விவகாரம் பற்றிச் சட்டபூர்வமாய் நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கன்ஸ்யூமர் ஆக்ஷன் குரூப் மற்றும் இதர பொதுநல அமைப்புக்கள், இது சம்பந்தமான ஒவ்வொரு பத்திரத்தையும் பார்வையிடவும், பிரதிகள் பெறவும் எத்தனை தொல்லைகள் அனுபவித்தன தெரியுமா? பொது மக்களுக்கு டாக்குமெண்ட்களைக் காட்டினால் தில்லு முல்லுகள் வெளிப்பட்டு விடுமே என்கிற பயத்தில் தஸ்தாவேஜுகள் மக்களின் பார்வையிலிருந்து மறைக்கப்படுகின்றன.

நரசிம்மன்: தேசப் பாதுகாப்புச் சம்பந்தமான ஒரு சில விஷயங்கள் தவிர, மற்றெந்த விஷயம் தொடர்பான தஸ்தாவேஜையும் அங்கீகரிக்கப்பட்ட எந்தப் பொது நல அமைப்பும் தேவையான போது, எளிதாய்ப் பார்வையிட வழி செய்யப்பட வேண்டும். அமெரிக்காவிலும், மற்ற பல ஐரோப்பிய நாடுகளிலும் இந்த வழக்கம் நடைமுறையிலுள்ளது. உலகின் பல நாடுகளின் பெருந்தலைகள் சம்பந்தமான ஊழல்கள் வெளியாகக் காரணமே, எந்த ஆவணத்தையும் பொது மக்களின் பார்வையிலிருந்து மறைக்க முடியாது என்பதுதான்.

அனுராதா: ஓரளவுக்கு இது உண்மைதான் எனினும், அத்துமீறிய சலுகை, லஞ்சம் இவையெல்லாம் அரசாங்கக் கோப்பில் இடம் பெறும் குறிப்புகளில் இருக்காதே! எல்லாமே வாய்வழி ஆணைகள் தாமே!

நரசிம்மன்: எந்தக் கோப்பையும் நுணுக்கமாய் ஆராய்ந்தால், தில்லுமுல்லுகளைக் கண்டுபிடிப்பது சாத்தியமே!

சுவாமி: அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்கினால் நடவடிக்கை எடுக்க சி.பி.ஐ. லஞ்ச ஒழிப்புத் துறைகள் உள்ளன. ஆனால் தனியார் துறையில் லஞ்ச ஊழலைத் தடுக்க என்ன வழிவகை இருக்கிறது? காருக்கு 'புக்' செய்து விட்டு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆனால் அதிகப்படியாய்ப் பத்தாயிரம் ரூபாய் தந்தால், மறுநாளே கார் வந்து விடுகிறது! 'பிரீமியம்' என்று வேறு பெயரில் குறிப்பிட்டாலும் இதுவும் லஞ்சம்தானே?

நரசிம்மன்: தனியார் துறையைப் பொறுத்தவரை, விலை, தரக்கட்டுப்பாடு, வாடிக்கையாளர் சேவை, ஆகியவை சம்பந்தமான புகார்களைக் கவனிக்க அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் லஞ்சப் புகார் மீது அரசே நேரடியான நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடமில்லை. இங்கே ஒரு சுவையான சம்பவத்தைச் சொல்லட்டுமா? கல்லூரி ஆசிரியர் ஒருவர் ஒரு மாணவனிடம் பணம் வாங்கிக் கொண்டு, பாஸ் போட்டதாகக் குற்றச்சாட்டு. இது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகியது. ஆனால் அவர் மீது கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தும், தண்டனை வழங்க முடியாது போய் விட்டது. ஏன் தெரியுமா? கல்லூரி ஆசிரியர் அரசாங்க ஊழியர்தான் என்றாலும், பல்கலைக் கழகப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் போது அவர் பல்கலைக் கழக ஊழியராகத்தான் செயல்பட்டார். அப்போது பல்கலைக் கழகம் அரசு அமைப்பில் இல்லை. எனவே குற்றம் நிரூபணமாகியும் கூட, அவர் தண்டனையிலிருந்து தப்பி விட்டார். பிற்பாடு, பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் பொருந்தும்படி இச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது.

அனுராதா: இப்போது, 'நீ லஞ்சம் வாங்கினாய்!' என்று ஓர் அரசியல்வாதியைக் குற்றம் சாட்டினால், 'நீ மட்டும் பரம யோக்கியனா?';"ஏன் மற்றவர்களும்தானே வாங்குகிறார்கள்?'' என்கிற ரீதியில் பதில் சொல்கிறார்களேயொழிய, தன் மீதுள்ள குற்றச்சாட்டை மறுப்பதில்லையே! இத்தகைய சூழ்நிலையில், சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசியல் தூய்மை இயக்கங்கள் என்ன சாதிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

நரசிம்மன்: இன்றைக்கும் கூட நம் நாட்டு மக்களிடம், குறிப்பாகக் கிராமத்து மக்களிடம் — நேர்மை, நியாயம் இவற்றுக்கு மதிப்பும், மரியாதையும் இருக்கிறது. உள்ளூர் தேர்தலில், ஊர்ப் பணத்தைச் சுரண்டியவரை, மக்கள் மறுபடி தேர்ந்தெடுக்க மாட்டார்கள். இந்த நல்ல உணர்வை, இந்த அமைப்புக்கள் பயன்படுத்திக் கொண்டு, ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

மாலன்: லஞ்சத்தைச் சட்டபூர்வமாக்கி விடலாம் என்று ஒரு சிலர் பேசுகிறார்களே!

நரசிம்மன்: (சிரிக்கிறார்) இது லஞ்சத்தை ஒழிக்கும் வழியே இல்லை.

நிருபர்: அப்புறம், அரசு ஊழியர்கள், 'விலைவாசியெல்லாம் ஏறி விட்டது; சட்டபூர்வமான லஞ்சத்தில் உயர்வு வேண்டும்' என்று வேலை நிறுத்தம் செய்வார்கள்! மாநிலத் தேர்தல் சமயத்தில் அரசியல்வாதிகள், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக லஞ்சத் தொகையை உயர்த்துவோம்'' என்று தேர்தல் வாக்குறுதி கொடுப்பார்கள்.

(அனைவரும் சிரிக்கிறார்கள்)

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

அட்டையில் லஞ்ச அரக்கனை ஒரு கை பார்க்கிறேன் என்று துணிந்து நிற்பவர்:
ரவிசங்கர்

அட்டை வண்ணப்படம், மற்றும் புகைப் படங்கள்:
யோகா

தூள் கிளப்பி இருப்பவர் ரஜினி. தாதா பட்டம் அவருக்கு வந்து சேருவதற்கு முன்னால் அவர் மோதும் மோதல் காட்டும் சுறு சுறுப்பு! யப்பா! டைரக்டரும் எடிட்டரும் சேர்ந்து கொண்டு ரஜினியுடன் உழைத்திருக்கும் காட்சிகளில் இதுவும் ஒன்று.

ரொம்ப நாளைக்கப்புறம் பாரதி ராஜாவின் படத்தில் மெலிதான நகைச்சுவை. படம் முழுக்க. லேசான புன்முறுவலுடனேயே படத்தைப் பார்க்க வைப்பவர் ரஜினி.

மணிவண்ணனைத் திரையில் பார்க்கும் போது டைரக்ட் செய்து சம்பாதிப்பதை விட இதில் அதிகம் சம்பாதிக்கலாம் வாத்தியாரே என்று சொல்லத் தோன்றுகிறது. இரவல் குரல் பாரதிராஜாவாம். ரொம்பத்தான் அடக்கி வாசித்து விட்டார். சில சமயங்களில் என்ன பேசுகிறார் என்றே......

நீச்சல் குளத்தில் அமலா. மேலே தாதா ரஜினி. தங்கமீன் நீந்தி நீந்தி மேலே வந்து கீழே போக, கிளு கிளுப்பு மழையில் ஊறி, கண்களை அகல விரித்து 'யப்பா' சொல்வது ரஜினி மட்டுமல்ல. நாமும்தான்.

காமிராக்காரர் உழைத்திருக்கிறார், அம்சலேகாவின் இசையில் இரண்டு பாடல்கள் கேட்க.

சாலையில் இருக்கும் பிணத்தை ரஜினி தோளில் ஏந்திக் கொண்டு போக, பின்னணியில் பாட்டு ஆரம்பிக்க... முழு காட்சியும் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இகழ்ச்சியை... தவிர்த்திருக்கலாம்.

மசாலா படம் பாரதிராஜா எடுக்கக் கூடாதென்று சட்டம் எதுவும் இல்லை. அதனால் அவர் மசாலாப் படத்தின் எல்லா அம்சங்களையும் வைத்துப் படம் எடுத்திருக்கிறார். பாரதிராஜா ரசிகர்களுக்கு ஒருவேளை ஏமாற்றமாயிருக்கலாம், ரஜினி ரசிகர்கள் பூரித்துப் போயிருக்கிறார்களே!


ரஜினிகாந்த் தமது ரசிகர்களை ஒரு பர்சன்ட் கூட ஏமாற்றவில்லை.

— ஜெயமன்மதன்


கொடி பறக்குது







ஜெத்மலானியின் புதிய குற்றச்சாட்டு குறித்து...?



• அமேதியே கதி

* எஸ். பரமசிவம், சீர்காழி.

? கடந்த ஆண்டுக்கான ராஜராஜன் விருது பெறும் தகுதியை ஒரு புத்தகமும் பெற வில்லையாமே?

! எம். ஜி. ஆர். இருந்திருந்தால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டிராது. 'ஏதாவது' ஒரு நூல் 'எப்படியாவது' தகுதியைப் பெற்றிருக் கும்!

* அ. கிருஷ்ணமூர்த்தி, நரிப்பாளையம்.

? 'அமேதி தொகுதி தவிர வேறு எங்கும் போட்டியிட மாட்டேன்' என்று ராஜீவ் அறி வித்திருப்பது ஏன்?

! அங்கே சகல ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கிறார்கள் போலும்!

* வி. அனந்தராமன், திருவாரூர்.

? இரவில் ரயில்வே ரிசர்வேஷன் கம் பார்ட்மெண்டில் பிரயாணம் செய்யும் போது உங்களுக்குப் பிடிக்காதது எது?

! நித்திரா தேவியின் அரவணைப்பைச் சுகிக்க ஆரம்பிக்கும்போது, 'பெர்த்'தைத் தட்டித் தட்டி டிக்கெட் கேட்கிறாரே, டி. டி. இ., அதுதான்!

* சாஸ்திரி வெங்கடேஷ், கோழிக்கோடு.

? 'கிரிக்கெட் தேர்வுக் குழு ஒரு கோமாளி களின் கூட்டம்' என்று மொகீந்தர் அமர் நாத் கூறியிருக்கிறாரே?

! தேர்வுக் குழு தன் பணியைச் செவ்வனே செய்வதாகக் கருதுவதற்கில்லைதான். என் றாலும், அதைக் கூறுவது மொகிந்தராக இருக்கக் கூடாது. அது 'காலைப் பிடி - மென்னியைப் பிடி' கதையாகி விடும்.

* வி. அருண், கிரமங்கலம்.

? 'குறுகிய காலத்தில் பணம் சம்பாதிக்க எண்ணுகிறவர்கள்தான் அரசியலுக்கு வருகி றார்கள்' என்று பாரதிராஜா சொல்கி றாரே?

! சினிமாத்துறை மட்டும் என்ன வாழ்ந் தது? அங்கும் இதே கதைதானே?

* ரமேஷ், திருச்சி.

? எந்த ஆட்சி கோயில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்?

! பணம் அதிகமாகப் புரளும் கோயில் களுக்கு எல்லா ஆட்சிகளுமே முக்கியத்து வம் கொடுக்கும்!

* கே. வி. நாதன், நெய்வேலி.

? ஹிந்து வோட்டு வங்கி குறித்துத் தங்கள் கருத்து?

! மதத்தின் பெயரால் கட்சிகள் உருவா வது, ஜாதி, மதத்தின் பெயரால் வோட்டுக் கேட்பது இவையெல்லாம் ஜனநாயகம் இங்கே நோயுற்றுப் போயிருப்பதன் வெளிப் பாடுகளே. ஆரோக்கியமான மக்கள் ஆட்சி யில் இவற்றுக்கு இடமில்லை.

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? பாராளுமன்றத்தின் தரம் படுமட்டத் துக்குத் தாழ்ந்துவிட்டதைக் கண்டு பிரதமர் ராஜீவ் வருந்துகிறாரே?

! 'அடடா! இந்த நிலைக்கு இதைக் கொண்டு வந்து விட்டோமே' என்ற துக்க

மாக இருக்கும்!

*** கே. எம். ரவிசந்திரன், மதுரை — 20.**

? சோம்பல் — சோர்வு இரண்டுக்கும் வித்தியாசத்தைக் கூறுங்கள்?

! போதமின் உலக ரிக்கார்டை முறியடிக்க ரிச்சர்ட் ஹாட்லி இன்னும் ஒரே ஒரு விக்கெட்டை வீழ்த்த வேண்டும் என்ற நிலை. ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! இங்கிலாந்து ஆட்டக்காரர் ராபின்சன் அடித்த பந்தைத் தடுக்கும் முயற்சியில் அடிபட்டுக் கால் நொண்ட ஆரம்பித்து விட்டார் ஹாட்லி. அப்புறம் பல டெஸ்ட்களில் ஆடும் வாய்ப்பையே இழந்து விட்டார். இதனால் அவர் மனச் சோர்வு அடைந்திருப்பார்; உடல் சோர்வும் உற்றிருப்பார். அதைத் தவிர்க்க முடியாது. ஆனால் அவர் சோம்பியிருக்கவில்லை. சோம்பலைத் தவிர்த்துப் பயிற்சிகளை மேற்கொண்டார். மீண்டும் டெஸ்ட்களில் இடம் பெற்றார். பெங்களூர் டெஸ்ட்டில் உலக சாதனையை நிகழ்த்திக் காட்டினார்!

*** எஸ். சங்கரநாராயணன், சென்னை. ***

? பிரதமரிடம் உங்களுக்குப் பிடித்த குணம் எது?

! அனுபவ பாடம் கற்றுக் கொள்ளும் குணம்தான். முன்னர் (பத்திரிகை) அவதூறு மசோதா கொண்டு வந்தபோது, பத்திரிகை மீது குற்றம் சாட்டப்பட்டால் தாம் குற்றமற்றவர் என பத்திரிகை ஆசிரியர்தான் நிரூபிக்க வேண்டும் என்றார். இப்போதோ, 'ராஜீவ் குற்றவாளி' என்று வி. பி. சிங் குற்றம் சாட்டினால், 'அதை வி. பி. சிங் தான் நிரூபிக்க வேண்டும்' என்கிறார்! எனவே சட்ட விஷயத்தில் ஒரு பாடம் கற்றுக் கொண்டு விட்டார் என்று புரிகிறது! இப்படி ஒவ்வொரு பாடமாக அவர் கற்றுக் கொண்டு வந்தால், அவருடைய தொண்ணூற்றாறாவது வயதில் நல்ல பிரதமராக விளங்குவார்!



* வேதனை! வேதனை!



* சாதனை! சாதனை!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

எஸ். சங்கரநாராயணன்,
L 22/6, சென்ட்ரல் அவென்யூ,
கொரட்டூர், சென்னை — 80.

*** கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.**

? போஃபர்ஸ் ஊழலில் சோனியாவுக்கும் பங்கிருப்பதாக ஜெத்மலானி கூறுவது பற்றி...?

! இருப்பதாகக் கூறவில்லை; 'இருக்கலாம் என்று நம்ப ஆதாரம் இருக்கிறது' என்கிறார். 'அதை மேலும் ஆராய வேண்டும்' என்று சி. பி. ஐ. துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். 1. போஃபர்ஸ் நிறுவனத்துடன் இந்தியா செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை ராஜீவ் ரத்து செய்ய வேண்டும்; 2. ஸ்விஸ் வங்கிக் கணக்கு எதிலும் தமக்கோ தமது குடும்பத்தைச் சேர்ந்த யாருக்குமோ சம்பந்தம் இல்லை என்று ஸ்விஸ் அரசை விட்டே அறிக்கை வெளியிடச் செய்ய வேண்டும். இந்த இரு காரியங்களையும் பிரதமர் செய்யாதவரை புதிய புதிய குற்றச்சாட்டுக்கள் முளைத்துக் கொண்டேதான் இருக்கும்.

*** பா. எழில் முருகன், சென்னை.**

? உங்களைக் கவர்ந்த இந்த வாரச் செய்தி எது?

! டில்லி விமான நிலையத்தில் வந்து இறங்கிய பிறகு, பயணிகள் விமானத்திலிருந்து இறங்கும் சமயத்தில், 'படக்'கென்று முன் சக்கரம் மடிந்து கொள்ள, இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூக்கு, பூமியை முத்தமிட்ட விஷயம்தான்! அற்புதமான செய்தி; அருமையான படம்! இந்தியன் ஏர்லைன்ஸ், விமானங்களை எவ்வளவு சிறப்பாகப் பராமரிக்கிறது என்பதை உலகுக்கெல்லாம் பறை சாற்றுகிறது!

*** ஆர். முரளி, ஹோசூர்.**

? ஒண்ணரை பக்க நாளேடு படிப்பதுண்டா?

! ஆட்சியில் உள்ள நமது அரசியல்வாதிகள் எல்லாத் தினசரிகளையுமே ஒண்ணரை பக்க நாளேடாகத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தொழில் வரியை ரூ. 250 லிருந்து ரூ. 2500 ஆக — பத்து மடங்கு — அதிகரித்து வசூலிக்க அதிகாரம் வழங்கும் அரசியல் சாசனத் திருத்தம் அண்மையில் நிறைவேறியுள்ளது ஓர் எடுத்துக்காட்டு! இவர்களுடைய அரசியல் — சமுதாய — பொருளாதாரப் பார்வைகள் எல்லாமே கோணலாகத்தான் இருக்கின்றன!

நீங்கள் கேட்டவை — தராசு

சந்தோஷ நாட்கள்

பஸ்ஸை விட்டு இறங்கியதும் அம்மா விற்குப் பிடித்தமான பச்சை வாழைப்பழம் ஆறும், உருளைக்கிழங்கு சிப்ஸ் கால் கிலோவும் வாங்கிக் கொண்டான் கிருஷ்ண மூர்த்தி.

ஒன்பது மணிதான் என்றாலும் வெயில் உக்கிரமாக முகத்தில் அடித்தது.

'அம்மாவிற்கு இன்று நான் வருவது தெரியாது. திடீரென்று போய் நின்றதும் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போவாள்.'

நகரத்தில் அறுநூறு ரூபாய் சம்பளத்தில் எப்படி கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று கிருஷ்ணமூர்த்தி பிடிவாதமாக இருக்கிறானோ.. அதே மாதிரி அம்மாவும் இத்தனை வருஷம் பழகிய இந்த சிக்க நரசய்யன் கிராமத்தை விட்டு வா மாட்டேன் என்கிறாள்.

அவனது முப்பது வயதுப் பிடிவாதத்தை மாதிரி அவளது அறுபது வயதுப் பிடிவாதம் இரண்டு மடங்காக இருந்தது.

மாதத்திற்கொரு முறை சம்பளம் வந்ததும் பஸ் பிடித்து வந்து அம்மாவிடம் செலவுக்குக் கொடுத்து விட்டு அம்மாவின் சமையலையும் தாமிரபரணி ஆற்றுக் குளியலையும் இரண்டு நாள் அனுபவித்து விட்டுச் செல்வது அவன் வழக்கம்.

அந்த சந்தோஷத்தில் மாதத்தின் மற்ற நாட்கள் விரைவாய் நகரும்.

தடக்... தடக் என்று இன்னமும் மாட்டு வண்டிகள் போய்க் கொண்டிருக்கும் கிராமத்துப் பாதை... பச்சைப் பசேலென்ற வயல்கள்.. தூரத்தில் தெரியும் ரயில் பாலம்... கிராமம் அழகுதான்.

ஒவ்வொரு மாதமும் கிராமத்தில் நுழையும் போது முன்பு எப்போதோ படித்த கவிதை வரிகள் நினைவிற்கு வரும் —

சூரியனை...
ஆற்று மணலை...
பாஸஞ்சர் ரயிலின் இரைச்சலை...
வண்ணத்துப் பூச்சியைத் —
தொலைத்து விட்டு —
நாற்காலிக் கால்களில் —
நசுங்கிக் கிடக்கிறது —
சோற்றுக்கலையும் வாழ்க்கை.

என்ன வாஸ்தவமான வார்த்தைகள்...!

வீட்டில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகையில் ஒரு பெண் இவனைப் பார்த்து விட்டு, அம்மாவிடம் அவசரமாக எதையோ கொடுத்து விட்டுப் பின் வாசல் வழியாக விரைந்தாள்.

அம்மா இவனைப் பார்த்த ஆச்சரியத்தில் "என்ன மூர்த்தி.. திடீர்னு..? உடம்புக்கு ஒண்ணும் இல்லையே..." என்றாள்.

"இல்லேம்மா... நாளைக்கு லோக்கல் ஹாலிடே... அதான்..."

அம்மாவிடம் சிப்ஸ் பொட்டலத்தைக் கொடுத்த போது கேட்க நினைத்தான்.

'யாரம்மா அந்தப் பெண்...?' பிறகு, அம்மாவாகச் சொல்லட்டும் என்று ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

லுங்கிக்கு மாறி... தட்டின் முன் வந்து அமரும் வரை அம்மா பேசவில்லை.

"பக்கத்து வீட்டுக்குப் புதுசா ஆள் வந்திருக்காங்க.. அவர் பொண்ணுதான் இப்போ வந்தது. பேரு பத்மினி.." என்றாள் இவன் டிபனுக்கு உட்கார்ந்ததும்.

'பத்மினி... நல்ல பேர்...' — மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

"பாவம் அவ..! கல்யாணமான மூணாவது மாசமே ஃபேக்டரில நடந்த விபத்துல புருஷனைப் பறிகொடுத்துட்டா..."

அம்மா சொன்ன போது மனம் தீப்பிடித்து எரிந்த மாதிரி இருந்தது.

'இந்த வயசுலேயே விதவையா...' சட்டென்று பார்த்ததில் பொட்டு வைத்திருந்தாளா என்று கவனிக்கவில்லை.

"அவ எத்தனை நல்லவ தெரியுமா.. எனக்குப் பாதி நேரம் அவ கூடத்தான் பொழுது போகுது... துருதுருன்னு என்ன ஒரு சாமர்த்தியம் தெரியுமா.. தலைவாரி நல்ல புடைவை கட்டிண்டு வந்தான்னா அப்படி ஒரு அழகு, அடக்கம், என்ன பண்ண... இவ நல்லா இருக்கறது கடவுளுக்குப் பொறுக்கலை."

அம்மா பேசிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணமூர்த்திக்கு உணவு செல்லவில்லை.

"ஏம்மா... புருஷன் வேலை பார்த்த ஃபேக்டரில இவங்களுக்கு வேலை கிடைக்குமே...." என்றான்.

"எழுதிப் போட்டிருக்காங்களாம். வேலை வரும்... வாழ்க்கை திரும்ப வருமா...?"

சாப்பிட்டு முடித்ததும் வழக்கமாக அம்மா சாப்பிடும் போது கூடவே உட்கார்ந்து ஆபீஸ் சமாசாரத்தை வேடிக்கையாகக் கூறுவது போல் இன்று பேச முடியவில்லை.

பின் கதவு தட்டப்பட்டு "அம்மா....!" என்று குரல் கேட்டது.

கிருஷ்ணமூர்த்தி எழுந்தான்.

அம்மா அவனைக் கைசைகையால் அமர்த்தி விட்டுப் போய்க் கதவைத் திறந்தாள்.

நா.நாகராஜன்

''என்ன பத்மினி?''

''குழம்பு ஏதாவது வேணுமா? புதுசா இன்னிக்கு நீங்க சமைக்கலையே...''

''சரி... கொண்டு வந்துட்டே... கொடு.'' அம்மா சிரித்துக் கொண்டே வாங்கிக் கொண்டாள்.

''சொன்னேன் பார்த்தியா... அவளே எல்லாத்தையும் புரிஞ்சுப்பா.. நாம கேட்கக் கூட வேண்டாம். அத்தனை பெரிய மனசு அவளுக்கு...''

அம்மா சொல்லச் சொல்ல அவனைப் பற்றிய அனுதாபம் அவன் மனத்தில் வளர்ந்தது.

'அவளைப் பற்றி இத்தனை பேசுகிற அம்மா — தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வற்புறுத்துகிற அம்மா — தான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாளா...?'

'முதலில் பத்மினியே மறுமணத்திற்குச் சம்மதிப்பாளா..?'

பழைய நினைவுகள் அழியாமல் உறுத்திக் கொண்டிருக்காதா?

— அவன் சிந்தனையில் சுழல அம்மா ஃபேனைப் போட்டுக் கொண்டு ஒரு பலகையைத் தலைக்கு வைத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

மதியம் ஒரு மணிக்குப் பசிக்க ஆரம்பித்தது கிருஷ்ணமூர்த்திக்கு.

அம்மா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

ஆபீஸில் ஒரு மணிக்குச் சாப்பிட்டுப் பழகி... இப்போது பசிக்கிறது.

காலையில் பழம் வாங்கியது நினைவிற்கு வர, அடுக்களைக்குச் சென்று இரண்டு பழங்களை உரித்துச் சாப்பிட்டான்.

பின் கதவைத் திறந்து கொண்டு போய்த் தோலை எறிந்து விட்டு வரும் போது பக்கத்து வீட்டில் பத்மினி நின்று கொண்டிருப்பதை யதேச்சையாகக் கவனித்தான்.

அவள் இவனைச் சிநேகமாகப் பார்க்கிற மாதிரி கூடத் தோன்றியது.

பாவம்தான் பத்மினி...

மூன்று மணிக்குத் தெருவில் பால் வண்டி வந்தது.

செருப்பை மாட்டிக் கொண்டு சொம்புடன் கிளம்பிய போது — பத்மினியும் சொல்லி வைத்த மாதிரி வாசலுக்கு வந்தாள்.

பாலுக்காக ரொம்ப நேரம் க்யூவில் காத்திருக்க வேண்டி வந்தது.

பெண்கள் பக்கம் கூட்டம் அதிகம்தான்.

ஓரிரண்டு தெரிந்தவர்கள் விசாரித்தார்கள் அவனை.

பத்மினி யாரிடமோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது.


சிரிக்கும் போது அவள் அழகு கூடிவிட்ட மாதிரி இவனுக்குத் தோன்றியது.

'ஒரு விளக்கை ஏற்றிய மாதிரி என்ன பிரகாசம் முகத்தில்...!'

"**மூ**ர்த்தி பால் வாங்கிட்டியா.. அசந்து தூங்கிட்டேன்...'' என்றாள் அம்மா.

''பரவாயில்லை...'' என்று சொன்னபோது மனத்திற்குள் 'அவளை' இரண்டாம் முறை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நன்றி சொன்னான்.

பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்த போது பின் கதவைத் திறந்து கொண்டு கையில் ஒரு சின்னத் தட்டுடன் அவள்.





"உங்கள் கட்சியின் எதிர்காலத் திட்டமென்ன...?"

"தேர்தலில் நின்று ஜெயித்து ஆட்சி அமைப்பது."

"ஜெயிக்கா விட்டால்...?"

"ஆட்சியைக் கவிழ்ப்பது!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

"பஜ்ஜி பண்ணினேன்: சூடா உங்களுக்கு நாலு..." என்று நீட்டி விட்டு, மின்னலென மறைந்து போனாள்.

மூர்த்தி தட்டை எடுத்துக் கொண்டான்.

"எனக்கு ஒண்ணாவது மிச்சம் இருக்கட்டும்..." என்று அம்மா கிண்டலடித்தாள்.

சாயங்காலம் பொழுதைக் கழிக்கச் சங்கடப்பட வேண்டி வந்தது.

புதிதாகத் திருமணமான தம்பதிகள், குழந்தை, மனைவியுடன் காலாற வாக்கிங் போகிறவர்களைப் பார்க்கிற போது.. வாழ்க்கையில் தான் எதையோ இழந்து வருகிற மாதிரி தோன்றியது!

'என்ன குறைவான சம்பளமானாலும் அனுசரித்துப் போகக் கூடிய பெண் கிடைத்தால் குடும்பம் நடத்த முடியாதா என்ன...' என்ற எண்ணம் மனத்தில் மெள்ளத் தலை தூக்கியது.

"பத்மினி எத்தனை நல்ல பெண் தெரியுமா... நாம சொல்லாமலே நம்ம தேவைகளைச் சட்டுன்னு புரிஞ்சுண்டுடறா..." அம்மாவின் வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தன.

அம்மாவிடம் சொல்லிவிட வேண்டியது தான்.

வீட்டை நெருங்க, நெருங்கப் பழையபடி தயக்கம் மனத்தில்...

வீட்டை இவன் அடைந்த பொழுது அங்கே ஒரு பெரிய போராட்டமே நடந்து முடிந்த மாதிரி இருந்தது. அம்மாவின் ஆஸ்த்மா எல்லை மீற, அருகே பத்மினி இருந்து கையைத் தேய்த்துச் சூடு பண்ணிக் கொண்டிருந்தாள்.

பதறிப் போன மூர்த்தியைச் சாதாரணமாகப் பார்த்தாள் பத்மினி.

"வழக்கமா வர்றதுதான்.. சில நாட்கள்ல இருமல் அதிகமாகி இந்த மாதிரி தொல்லைப் படறது உண்டு..." என்றாள் நீண்ட நாள் பழகிய மாதிரி.

"ரொம்ப தேங்ஸ்... இனிமே நான் பார்த்துக்கறேன்..." என்றான். அடுத்து என்ன பேச என்று கூடத் தெரியாமல்,

அவள் அரை மனத்துடன் இறங்கிப் போனாள்.

அடுத்த நாள் காலை பிரச்னை எதுவும் இல்லாமல் அம்மா எழுந்த போது பயம் விலகியது அவனுக்கு.

"நேற்று ரொம்ப சிரமப்பட்டுட்டியே அம்மா. இவ்வளவு கஷ்டமா உனக்கு?! இன்னும் என்ன இருக்கு இங்கே.. என்னோட வந்துடேன்..

"அதான் பத்மினி இருக்காளே கவனிச்சுக்க...".

"அவ என்ன உன் மருமகளா.." சட்டென்று வாய் தவறிச் சொல்லி விட்டான்.

"என்ன மூர்த்தி, என்னவோ சொல்ல வந்தியே..."

"இல்லைம்மா. நா ஏதோ ஞாபகத்துல உளறிட்டேன்."

"உளறல் இல்லே. உனக்கு அவளை உண்மையிலேயே பிடிச்சிருந்தா நா அவளை மருமகளா ஏத்துக்கத் தயார். எத்தனை தடவை நினைச்சுப் பார்த்திருக்கேன் தெரியுமா? இத்தனை சின்ன வயசுல இவ்வளவு நல்ல மனசுக்கு இத்தனை பெரிய தண்டனையா...? ஏன் இவ மறுமணம் பண்ணிக்கக் கூடாதுன்னு, அவளோட தாய் மாதிரி யோசிச்சிருக்கேன். அப்போ உன் ஞாபகம் வரும். கல்யாணமே வேண்டாங்கறவன் கிட்டே ஒரு கைம் பெண்ணைப் பண்ணிக்கச் சொல்ல முடியுமான்னு யோசிப்பேன்..."

— அம்மா பேசி முடித்ததும் தன் சம்மதம் சொன்னான் அவன். "பத்மினியையும் ஒரு வார்த்தை கேட்டுடும்மா" என்றான்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அரையாண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka